நன்றி - நூலகத்திட்டம்

SARINIHAR

සරිනිහර්

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி


இதழ் 206 ஒக். 22-28, 2000 விலை ரூபா 12.00

உங்களுக்காய் வாழுங்கள்

வெற்றி பெற்று வந்தவரே வாருங்கள் உங்களை நாம்
சுற்றி நின்று தொழுதினைச் சொல்லுகின்றோம் - இற்றைவரை
எங்களுக்காய் வாழ்ந்தீர்: எரிநெருப்பில் நாம் விழுந்தோம்

உங்களுக்காய் வாழுமினி ஓம்!

ஈழமோகம்



## இனி நடக்கப் போவது என்ன?




## தேர்தல் களம்: புலிகள் மீண்டும் வருவார்கள்!



## போர்க்களம்: ஆட்பற்றாக்குறை புலிகளுக்கா? அரச படைகளுக்கா?







## அக்கரைப்பற்று: பள்ளிவாசலுள் பொலிஸாரின்

நன்றி - நூலகத்திட்டம்



– வி.ஜே.கே.

தேர்தல் தெருவிழா மட்டக்களப்பில் இன்னும் ஓய்ந்தபாடில்லை. ஹர்த்தாலும், கடையடைப்புக்களும் தெருச்சண்டைகளும் நடந்து கொண்டுதானிருக்கின்றன.

நான் 15ந் திகதி திருகோணமலையில் நின்று கொண்டு மட்டக்களப்பிலுள்ள நண்பர் ஒருவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். மட்டக்களப்பில் குடும்பச் சண்டை தெருவுக்கு வந்துள்ளது என்று கூறினார். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. நான் திரும்பவும், வீட்டில் ஏதாவது பிரச்சினையா என்று கேட்டேன், வீட்டுப்பிரச்சினையெண்டா சொல்லப்பட்டிருக்கிறது என்று எனக்கு ஒரே குழப்பமாக இருந்தது. அலுவலகத்தில் இருந்து வெளியே வந்து தெருவில்

கண்டவர்களையெல்லாம் ஹர்த்தாலைப் பற்றிக் கேட்டுப் பார்த்தேன். 'ஹர்த்தால் தானாம் தம்பி, யார் போடுறாங்க எவர் போடுறாங்க எண்டெல்லாம் தெரியாது' என்று தான் கேட்டவர்கள் எல்லோரும் சொன்னார்களேயொழிய நாங்களும் இந்தக் ஹர்த்தாலுக்கு ஆதரவு என்று ஒருவர் கூடச் சொல்லவில்லை.

அப்பத்தான் எனக்கு நண்பர் சொன்னதின் உண்மை தெரிந்தது. விடிந்தால் தெரியும் தானே நன்மையும் தீமையும் என்று நினைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்து கொண்டிருக்கும் போது சென்றல்றோட்டில் வைத்து ஆசிரிய நண்பர் ஒருவரை சந்தித்தேன். கூறினார். 17ந் திகதி காலையில் 6.20க் கெல்லாம் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு வீட்டில் இருந்து புறப்பட்டு பெரியாஸ்பத்திரி வரைக்கும் சென்றேன்.

ஆங்காங்கே சனக்கூட்டம் காணப் பட்டது. போக்குவரத்திலும் எந்தவித தடைகளும் இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் கடைகள் திறப்பதற்குப் பயத்தில் எல்லோரும் தயங்கித் தயங்கி நின்றனர். ஆனாலும் தாண்டவன் வெளியிலுள்ள தனியார் தொலைத்தொடர்பு நிலையங்களும், ஏனைய ஒரு சில கடைகளும் திறந்த போது, காலை 8.15 மணிக்கெல்லாம் தொலைபேசி வந்ததாம் இன்றைக்கு ஹர்த்தால் தெரியாதோ கடைகளை உடனே பூட்டவும் என்று. கடைக்காரர் பயத்தில் கடைகளைப் பூட்டிவிட்டு வீட்டுக்குச் சென்று விட்டனர்.

கல்லடியிலும்

## மட்டு: ஹர்த்தால்

# அன்பார்ந்த வாக்காளப் பெருமக்களே!

உனக்கேன் இவ்வளவு அக்கறையா சொல்ப்போறன் இது நம்மட கூத்தணிக்குள் சண்டையாம், செவ்வாய் கிழமைக்கு ஹர்த்தாலாம், அவ்வளவு தான். நானும் போன விஷயத்தை பாதியிலே விட்டுட்டு திங்கட்கிழமையே மட்டக்களப்புக்கு வந்து சேர்ந்து விட்டேன். வந்ததும் வராததுமாக சைக்கிளை எடுத்துக் கொண்டு தினக்கதிர் பத்திரிகைக் காரியாலயத்துக்கு சென்று ஹர்த்தால் பற்றி நண்பர் ஒருவரிடம் விசாரித்தேன். துண்டுப்பிரசுரம் ஒன்று எங்களுக்கும் வந்திருக்குத்தான். ஊர்பேர் இல்லாத துண்டுப் பிரசுரத்துக்கு



நாமேன் கவலைப்படுவான் என்று கூறிவிட்டு துண்டுப்பிரசுரத்தையும் நண்பர் நீட்டினார். எமது மட்டக்களப்பு வாழ் தமிழ் பேசும் மக்களே என்று தலைப்பிடப்பட்ட துண்டுப்பிரசுரத்தில் ஊழல் நிறைந்த தேர்தலால் ஜோசப் பரராஜசிங்கம் மக்களின் பிரதிநிதியாக வேடமிட்டுள்ளார், இத்தேர்தலை ஆட்சேபித்து எதிர்வரும் ஒக்.17 மட்டக்களப்பு மாவட்டம் பூராக பூரண ஹர்த்தாலை அனுஷ்டிக்க அனைத்து மட்டக்களப்பு மக்களும் ஒன்று சேர்ந்துள்ளனர் என்ற உள்ளடக்கத்துடன், உரிமைத் தமிழர்கள், உரிமைக்குரல் எதிரொலி என்று முடிக்கப்பட்டிருந்தது. இவர் ஊர் பேரில்லாதது என்று சொல்கிறார், ஆனால் பிரசுரத்தில் மக்களும் ஒன்று சேர்ந்துள்ளனர் என்று

அவர் என்னிடம் ஒரு துண்டுப்பிரசுரத்தை நீட்டி இதை ஜோசப் ஐயாவின் வீட்டுக்கு முன்வைத்து ஐயாவின் நண்பர் ஒருவரும், வைத்தியசாலை சிற்றுண்டிச்சாலையில் நிற்பவரும் தான் தந்தாங்க. வாசித்துப் பாரு உதவும் என்று கூறிவிட்டு சென்றார். அதில் அன்பார்ந்த மட்டுநகர் வாக்காளப் பெருமக்களே என்று தலைப்பிட்டு தோல்வியைத் தாங்காத பொன்.செல்வராசாவும் அவர்களின் அடாவடிகளினுடை துண்டுப்பிரசுரமே இந்த ஹர்த்தாலின் அறிவுறுத்தல். இதை நிராகரியுங்கள். அராஜகத்துக்கு தலைகுனியாதீர்கள் என்ற உள்ளடக்கத்துடன் இப்படிக்கு, மட்டுநகர் ஜனநாயக விரும்பிகள் என அத்துண்டுப்பிரசுரம் முடிக்கப்பட்டிருந்தது.

நானும் வீட்டுக்கு வந்து சேர்ந்து விட்டேன். இரவு 8 மணியிருக்கும் கடைக்கார நண்பர் ஒருவர் ரெலிபோன் எடுத்து நாளைக்கு ஹர்த்தாலாம் கடைகளை அடைக்கட்டாம் என்று எனது கடைக்கு போன் வந்தது என்று கூறினார். யாராக்களாம் என்று கேட்டேன், 'மாலை வந்தனங்கள் நாங்கள் ஈ.பி.ஆர்.எல்.எவ் அலுவலகத்தில் இருந்து கதைக்கம். நாளைக்கு ஹர்த்தால் கடைகளைத் திறக்க வேண்டாம்' என்று தான் கூறினார்கள், இது போல என்ர பக்கத்து கடைகளுக்கெல்லாம் ரெலிபோன் வந்திருக்காம் என்று

கடைதிறந்தவர்கள் ஆயுதம் தாங்கிய தமிழ்க் குழுக்களால் தாக்கப்பட்டிருக்கிறார்கள். ஓட்டோக்காரர்களும் திருப்பியனுப்பப் பட்டிருக்கின்றதோடு தாக்கவும் பட்டிருக்கிறார்கள். இதில் புளொட்டும் சம்மந்தப்பட்டிருப்பதாக நண்பர் ஒருவர் கூறினார். வன்முறைகளை விரும்பு பவர்கள் நாமல்ல! இருந்தும் வன்முறைகளால் தான் நியாயமான தீர்வு வரும் என்றால், அதற்காக முகம் கொடுக்க தயங்குபவர்களும் நாமல்ல!! என்று துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிட்டிருந்தபடி அஞ்சா நெஞ்சத்தையும் செயலில் காட்டி விட்டார்கள் அண்ணன்மார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் தயவில் சமுர்த்தி வேலை வாங்கிய ஒருவரும், சுதந்திரமாகத் திரிந்து மனிதத்தை அபிவிருத்தி செய்பவர்களுமாக முன்னின்று இந்தக் ஹர்த்தாலை நடத்தி செஞ்சோற்றுக்கடன் கழித்துள்ளார்கள். இதற்கு எலும்புத்துண்டுக்கு கைநீட்டும் நம்மட தமிழ்குழுக்களும் பக்கபலமாக இருந்து சதி சேர்த்திருக்கிறார்கள் என்று பல்கலைக்கழக நண்பர் ஒருவர் கூறினார்.

மட்டக்களப்பில் எத்தனையோ வன்முறைகள் அப்பாவித் தமிழ்மக்கள் மீது சிறிலங்கா இராணுவமும், தமிழ் குழுக்களும் நிகழ்த்தியுள்ளன. அப்போதெல்லாம் எங்கு போனது இந்த வன்முறையை விரும்பாத தமிழ்க் குழுக்கள், இன்று தமிழ் மக்கள் தடுமாற்றத்துடன் இருக்கும் போதும்; அவர்கள் விரும்பாத ஒரு தேர்தலை அவர்கள் மீது திணிக்கும் போதும் எங்கு போனது இந்த வன்முறையை விரும்பாத உரிமைத் தமிழர்களின் உரிமைக் குரல். உண்மையில் ஜோசப்ஐ பாராளுமன்ற பிரதிநிதியாக மக்கள் ஏற்றுக்கொள்கிறார்களோ இல்லையோ என்பதற்கப்பால் இந்த ஹர்த்தால் வன்முறையால் திணிக்கப்பட்டது என்பது மட்டும் உண்மை.

⊙

## பயன்படுத்தல்!

தேர்தல் முடிவுகள் வெளியானபின், அதுபற்றி என்னுடைய ஒரு நண்பருடன் பேசிக் கொண்டிருந்தேன்.

"தமிழ் மக்கள் வாக்களிக்கச் சந்தர்ப்பம் கிடைத்ததும் எப்படி வாக்களித்திருக்கிறார்கள் பார்த்தாயா? இந்த மக்களுக்காக சும்மா அரசியல் உரிமை, தேசவிடுதலை என்று கதைக்கிறதிலை என்ன பிரயோசனம்" என்று கேட்டார் நண்பர்.

எனக்கு அவரது கருத்துடன் உடன்பட முடியாவிட்டாலும் அவரே பேசட்டும் என்று மௌனமாக கேட்டுக் கொண்டிருந்தேன்.

'வேலை வாய்ப்பு, நிவாரணம் போன்ற அற்ப சலுகைகள் தான் அவர்களது தெரிவாகப் போய் விட்டது' என்றார் அவர் தொடர்ந்து. நான் பதில் சொல்லவில்லை. ஆனால், "சரி 'அரசியல் விடுதலை' வேண்டுமென்றால் அவர்கள் யாருக்கு 'வோட்' போட்டிருக்க வேணும் "என்று கேட்கலாம் என்று நினைத்தேன்.

கொஞ்ச நேர மௌனத்துக்குப் பிறகு அவரே சொன்னார்.

"புலிகள் தங்களது அரசியலை மறுபரிசீலனை செய்ய வேணும்... காலத்துக்கு காலம் ஐ.தே.கவுக்கும் பொ.ஐ.முவுக்கும் ஜாடைமாடையாக ஆதரவு காட்டினால் சனத்துக்கு குழப்பமாகத்தானே இருக்கும் ..."

-எனது மன ஓட்டத்தை விளங்கிக் கொண்டவர் போல.

"புலிகள் இந்த பாராளுமன்ற அரசியலுக்கு மாற்றாக ஒரு நடைமுறை அரசியலை வைக்க வேணும். அல்லது அதில் போட்டியிட உரிய வடிவத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் இந்த நிலை தொடரத் தான் போகுது... சனம் ஐ.தே.கவுக்கும் பொ.ஐ.முவுக்கும் 'வோட்' போடத் தான் போகுது..."

"ஸ்ரீலங்கா" வின் அரசியலில் புலிகள் பங்குபற்றுவதைவிட அதை எப்படி பாவிக்கலாம் என்பதிலேயே கவனம் செலுத்தி வருகிறார்கள் என்று தான் எனக்குப் படுகுது என்று சொன்னேன் நான்.

"அதுசரி, அதுதான் சனமும் 'பயன்படுத்த' யோசிக்குது போலை... பிறகு எப்பிடி அதுகளைப் பிழை சொல்றது..."

இதற்குப் பிறகு நடந்த உரையாடலை எழுதுமுன், இது தொடர்பாக நீங்கள் என்ன கருதுகிறீர்கள் என்று கேட்கலாம் என்று தோன்றுகிறது.

உங்கள் அபிப்பிராயங்களை எழுதுவீர்களா?

## நுஃமானின் கோபம்!

தமிழ் இனி 2000 மாநாட்டில் வெளியிடப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாக இப்பத்தியில் நான் எழுதியிருந்த விடயம் கலாநிதி நுஃமான் அவர்களை கடுங்கோபமுறச் செய்திருக்கிறது. தனது முதுகில் குத்திவிட்டதாக ஆதங்கத்துடன் அறிவிக்கும் அவரது கடிதம் சென்ற இதழில் வெளியாகி இருந்தது. மாற்றுக் கருத்து தெரிவிப்போரை எதிரிகளாக கருதும் பண்பு எம்மிடம் இருப்பதாகவும் அவர் குற்றஞ் சாட்டியிருக்கிறார்.

திரும்பவும் நுஃமான் அவர்கள் நான் குறிப்பிட்ட பிரச்சினைக்கு பதிலளிப்பதை விட்டு விட்டு மற்ற விடயங்களைப் பற்றியே பேசியிருக்கிறார். பரவாயில்லை.

சரிநிகர் யாருக்கும் ஒருபோதும் முதுகில் குத்தியதில்லை. அவ்வளவு கோழைத்தனத்துடன் அது தனது பத்திரிகையை நடாத்தவும் இல்லை. அவசியம் தான் என்றால் நெஞ்சிலேயே குத்தும் அளவுக்கு அதற்கு நெஞ்சுரமும் தார்மீகத் துணிவும் இருக்கிறது. ஆயினும் நுஃமான் அவர்களுக்கு அப்படிச் செய்யும் தேவை சரிநிகருக்கு ஒருபோதும் இருந்தில்லை. அவரை அது எதிரியாகக் கருதியதும் இல்லை. இப்போது கருதவும் இல்லை. சரிநிகரின் மதிப்புக்கும் கௌரவத்துக்குமுரிய முக்கியமான தமிழ்ப் புலமையாளர்களுள் ஒருவர் அவர் என்று சரிநிகர் இன்னமும் கருதுகிறது.

பிரச்சினை இதுதான். இலக்கிய மாநாட்டில் அரசியல் விடயங்கள் குறித்த தீர்மானம் வெளியிடப்படக் கூடாதா என்பதில் தான் சர்ச்சை ஏற்பட்டதே ஒழிய அது தயாரிக்கப்பட்ட, வெளியிடப்பட்ட விதம் குறித்து அல்ல என்பதை நுஃமான் அவர்கள் கவனிக்க மறந்து விட்டார். (இவ்வறிக்கை மாநாட்டு மண்டபத்தில் வாசிக்கப்பட்டது என்பதையும் அவர் கவனத்தில் எடுத்ததாகத் தெரியவில்லை) இந்த விடயத்தை அவர் முன்பு சர்ச்சைக்குட்படுத்தவும் இல்லை. எப்படியோ, அறிக்கையில் வெளியிடப்பட்ட விடயங்களில் அவருக்கும் உடன்பாடே என்பதில் எமக்கு சந்தோசமே. வெளியிடப்பட்ட விதம் குறித்த சர்ச்சைக்கு சரிநிகர் மாத்திரம் பதில் சொல்வது சாத்தியமில்லை என்பதால் அதை இப்போதைக்கு விட்டு விடுகிறேன்.

அறிக்கை, ஏற்பாட்டாளர்கள் சார்பில் வெளியிடப்பட்டதாகத் தான் நான் எழுதியிருந்தேன் என்பதையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நுஃமான் அவர்களுடைய பெயரைக் குறிப்பிடாமல் விட்டது 'விடுப்பார்வத்தைத் தூண்டும்' நோக்குக்காக அல்ல. அவர் சொன்ன அந்தப் பதில் பொதுப்படையான, கையெழுத்து வைக்கத் தயங்குவதற்கான ஒரு காரணமாக அங்கு வெளிப்பட்டதாலேயே அப்படிக் குறிப்பிட நேர்ந்தது. இது வெறும் நுஃமான் அவர்கள் பற்றிய பிரச்சினை என்றால், இந்த விடயம் எழுதப்பட்டிருக்க வேண்டிய தேவையே வந்திருக்காது.

மாநாட்டு ஏற்பாட்டாளர்களின் கருத்துக்களுடன் உடன்படாமல் கையெழுத்து வைக்க மறுத்தவர்கள், வேறு விடயங்களையும் சேர்க்க வேண்டும் என்று கருதியவர்கள் யாவரையும் நாம் 'எதிரிகளாக' பார்க்கவோ, 'முதுகில் குத்த' முயலவோ இல்லை. மாறாக அவர்களது கருத்துக்களை நாம் கௌரவிக்க வேண்டுமென்றே கருதுகிறோம்.

இறுதியாக மாற்றுக் கருத்துகளை சரிநிகர் எவ்வாறு அணுகுகிறது என்பது பற்றிய நுஃமான் அவர்களின் குற்றச்சாட்டில் எவ்வளவு தூரம் உண்மை இருக்கிறது என்பதை வாசகர்களது தீர்மானத்திற்கு விட்டு விடுகிறேன்.

நன்றி - நூலகத்திட்டம்



# படைவலுச் சமநிலையை நோக்கி நகரும் ஈழப்போர்

— டி.சிவராம்

தமிழர் தமக்கென ஒரு தனி நாட்டை இலங்கையில் அமைத்திடுவதற்கான போரானது வெற்றி பெற்றிட முடியாது என நிறுவுவதற்கு முன்வைக்கப்படும் கருத்துக்களில் புலிகளுக்கும் சிறிலங்காப் படையினருக்குமிடையில் இருப்பதாகக் கூறப்படும் படையாட் தொகை இடைவெளியே முதன்மையானதாகும்.

வடகிழக்கில் வாழும் தமிழரின் தொகை குறைவு. அதிலும் அவர்களிற் பெரும்பாலானோர் தென்னிலங்கையை நோக்கியும் வெளிநாடுகளை நோக்கியும் சென்ற வண்ணமுள்ளனர். மேலும் பலர் போரில் ஆர்வமின்றி வாளாவிருக்கின்றனர். எனவே ஒரு இலட்சத்து இருபதாயிரம் படையாட்களைக் கொண்ட சிறிலங்காப் படைத்துறைக்கெதிரான ஒரு மரபு வழிப் போரினை நீண்ட காலத்திற்கு முன்னெடுத்துச் செல்வது என்பது இயற்கைக்கு முரணானது என்பதே மேற்படி வாதத்தின் சாராம்சமாகும்.

இது போர்க்கள நிலையை நுணுகி ஆராயாத பலர் விதந்துரைத்திடும் ஒரு மடத்தனமான கூற்றாகும். ஏன் என்பதை இங்கு படிமுறையாகப் பார்ப்போம்.

சிறிலங்காப்படை பத்து டிவிசன்களால் ஆனது. ஒரு டிவிசன் (Division) என்பது குறைந்தது மூன்று (Brigade) பிரிகேட்களால் ஆனது. டிவிசன்களே சிறிலங்காப் படையின் மிகப் பெரிய அலகுகளாகும்.

பிரிட்டிஸ் படை மரபின்படி உருவாக்கப்பட்ட படைகளில் ஒரு டிவிசனுக்கு 9ஆயிரம் தொடக்கம் 15ஆயிரம்



படையாட்கள் வரை இருப்பர். மேலும் ஒரு டிவிசன் தனக்குரிய ஆட்லரிப் பிரிவு, போர் ஊர்திப்பிரிவு (armour) போன்றவற்றை உள்ளடக்கிய ஒரு தன்னிறைவு அலகாகும்.

சிறிலங்காப் படை டிவிசன் ஒன்றில் 9 ஆயிரம் அல்லது அதற்குக் குறைவான படையாட்களே உள்ளனர். போர்க்களத்திற்குச் செல்கின்ற இந்த டிவிசன்களுக்குப் பின்னால் தலைமையகம், நிர்வாகம், பொறியியலாளர் எனச் சிலர் உண்டு.

சிறிலங்காப் படையின் பத்து டிவிசன்களும் வருமாறு: 1-1, 2-1, 2-2, 2-3, 5-1, 5-2, 5-3, 5-4, 5-5, 5-6. இவற்றைச் சிலர் ஜம்பத்தி மூன்றாவது டிவிசன், இருபத்தியிரண்டாவது டிவிசன் என்ற வகையில் பேசுவர். அது தவறு. வசதி கருதி 53வது என என்னைப் போன்றோர் முன்னர் எழுதியமையும் இதற்கோர் காரணமாகும். இவற்றை ஒன்று ஒன்று, இரண்டு ஒன்று ( one one, two one etc.) என அழைப்பதே சரி.

காலப் போக்கில் மூன்று டிவிசன்களை இணைத்து ஒரு கோ எனப்படும் (Corps) பேரணிகளை உருவாக்கும் நோக்கிலேயே இப்பெயரிடல் அமைகின்றது. ( எனவே அடுத்த வளர்ச்சிக் கட்டத்தில் லெப்றினன்ட் ஜெனரல் தரத்தில் உள்ள கட்டளையதிகாரியின் கீழ் முதலாம் கோ, ஐந்தாம் கோ என இவ்வணிகள் இயங்கும். டிவிசன்களோ முதலாம் கோவின் முதலாம் டிவிசன் என்ற வகையில் அழைக்கப்படும்.)

மீண்டும் எடுத்துக் கொண்ட அலுவலுக்கு வருவோம். 1-1 டிவிசன் தென்னிலங்கையில் உள்ளது. ஏனைய ஒன்பது டிவிசன்களும் வடக்கிலும் கிழக்கிலும் உள்ளன. ( இருந்தன என்பதே சரி. இனி அவை எங்கெங்கு உள்ளன எனப் பார்ப்போம். 2-1 தள்ளாடி, வவுனியா, அனுராதபுரம், 2-2 திருமலை, மணலாறு, 2-3 வெலிக்கந்தை, மின்னேரியா (தலைமையகம்), மட்டக்களப்பு, 5-1 அச்செழு, யாழ்நகர், 5-2 சாவகச்சேரி, பருத்தித்துறை, 5-3 குடாநாடு பொது, 5-4 முன்னர் ஆனையிறவு, 5-5 வவுனியாவின் வடகிழக்கு, 5-6 வவுனியாவின் வடக்கு, வடமேற்கு, (முன்னர் கனகராயன்குளம் தலைமையகம் )

எனவே வடக்கிலும் கிழக்கிலும் புலிகளை எதிர்த்துச் சண்டையிட சிறிலங்காப் படையிடம் உள்ள ஆகக் கூடிய படையாட்களின் தொகை 81 ஆயிரமாகும். இது ஒவ்வொரு டிவிசனிலும் ஒன்பதாயிரம் படையாட்கள் உள்ள என நாம் எடுகோளாகக் கொண்டு கணக்கிடும் போது கிடைத்திடும் தொகையாகும். ஆயின் உண்மை நிலை என்ன?

1999ம் ஆண்டு நவம்பர் இரண்டாம் திகதி புலிகள் ஓயாத அலைகள் மூன்றை ஒட்டு சுட்டானில் தொடங்கிய போது 2-1, 2-2, 2-3ஆகியன ஆட்பற்றாக் குறையுடைய டிவிசன்களாகவே காணப்பட்டன. ஒவ்வொன்றிலும் குறைந்த பட்சம் இரண்டாயிரம் படையாட்கள் குறைவாக இருந்தனர் எனக் கொண்டோமாயின் வடக்குக் கிழக்கில் இருந்த மொத்தப் படையாட்களின் தொகை (81000-6000= 75000) 75ஆயிரமாகும்.

இப்பொழுது இலங்கைப் படைகளிலிருந்து 15 தொடக்கம் 20 ஆயிரம் படையினர் ஓடி ஒளித்துத் திரிகின்றார்கள் என்று கொழும்பின் விடயமறிந்த போர்த்துறைச் செய்தியாளரும் ஆய்வாளரும் கூறுகின்றனர். இவர்கள் அனைவரும் வடக்குக் கிழக்கில் உள்ள மேற்படி ஒன்பது டிவிசன்களிலிருந்து ஓடியவர்களே. அவ்வாறாயின் குறைந்த பட்சக் கழித்தலை நாம் செய்வோமாயினும் வடக்குக் கிழக்கில் உள்ள மொத்த சிறிலங்காப் படையாட்களின் தொகை (75000-15000= 60000) 60ஆயிரம் ஆகின்றது.

இனி, ஓயாத அலைகள் 3 தொடங்கிய காலத்திலிருந்து இன்று வரை குறைந்த பட்சம் ஏழாயிரம் சிறிலங்காப் படையினராவது இறந்துள்ளனர் அல்லது களமுனையிற் காணாமல் போயுள்ளனர் அல்லது மீண்டும் போரிட முடியாத அளவிற்குக் காயமடைந்துள்ளனர். 60 ஆயிரத்திலிருந்து இதை நாம் கழிப்போம். கடந்த டிசம்பர் மாதத்திலிருந்து படைக்குச் சேர்க்கப்பட்ட சிங்கள இளைஞர்களின்



தொகை இதே காலகட்டத்தில் படையிலிருந்து இயல்பாக ஓய்வு பெற்றோர், விலகியோர் என்பவர்களின் தொகைக்குச் சமனாகவே உள்ளது. எனவே வடக்குக் கிழக்கில் புலிகளுக்கெதிராக நிலை கொண்டுள்ள ஒன்பது டிவிசன்களிலும் 53ஆயிரம் தொடக்கம் 55ஆயிரம் படையாட்களே தற்போது உள்ளனர் என நாம் கொள்ள வேண்டியதாகின்றது. இப்பிரச்சினையை நாம் இன்னொரு கோணத்திலும் புரிந்து கொள்ளலாம்.

இதற்கு முன் எந்தெந்த டிவிசன்கள் எங்கெங்கு உள்ளன எனப் பார்ப்போம். 1-1 தென்னிலங்கை, 2-1 தள்ளாடி, வவுனியா, அனுராதபுரம், 2-2 திருமலை, மணலாறு, 2-3 வெலிக்கந்தை, மின்னேரியா (தலைமையகம்), மட்டக்களப்பு, 5-1 அச்செழு, யாழ்நகர், 5-2 சாவகச்சேரி, பருத்தித்துறை, 5-3 குடாநாடு பொது, 5-4 முன்னர் ஆனையிறவு, 5-5 வவுனியாவின் வடகிழக்கு, 5-6 வவுனியாவின் வடக்கு, வடமேற்கு, (முன்னர் கனகராயன்குளம் தலைமையகம் )

இவற்றில் 5-4 தற்போது பெயரளவில் மட்டுமே உள்ளது. இது ஆனையிறவில் புலிகளிடம் வாங்கிய அடியில் சின்னாபின்னப்பட்டுப் போனதால் இதன் எஞ்சிய படையணிகள் பிரிக்கப்பட்டு வேறு டிவிசன்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. 5-4 கட்டளை அதிகாரி ( GO C - General Officer Commanding) அற்ற இயங்கா ( Non Operational) டிவிசன் ஆகிவிட்டது. இது போலவே ஓயாத அலைகள் மூன்றின் வன்னிப் படை எடுப்பில் அடி வாங்கிச் சிதைந்தன 5-5 உம், 5-6 உம். இவற்றில் 5-5 இன்னும் சரியாக மறுசீரமைக்கப்படவில்லை. 5-6 பிரிகேடியர் தரத்திலான ஒரு கட்டளை அதிகாரியின் கீழ் குறைந்த ஆட்தொகையுடன் வன்னியில் இயங்குகிறது. (ஒரு டிவிசனுக்குக் கட்டளை அதிகாரியாக மேஜர் ஜெனரல் தரத்திலுள்ள ஒருவரே இருக்க வேண்டும்.) வன்னியில் 5-6 இன் கட்டளை அதிகாரியாக இருந்த மேஜர் ஜெனரல் தற்போது 2-3 டிவிசனின் கட்டளை அதிகாரியாக உள்ளார். இது போலவே அமெரிக்க விசேட பயிற்சி பெற்ற 5-3 இன் கொமாண்டோப் படைகளிலும் கணிசமான ஆட்சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்திலுள்ள டிவிசன்களை உச்சப் படையாள் வலுவுடன் செயற்பட வைப்பதற்காக கிழக்கிலிருந்து படைகள் வெளியெடுக்கப்பட்டமை நீங்கள் அறிந்ததே. வடக்குக் கிழக்கில் உள்ளதாக நாம் இங்கு கணக்கிட்ட 53ஆயிரம் தொடக்கம் 55ஆயிரம் சிறிலங்காப் படையாட்களில் பெரும்பகுதியினர் ஆனையிறவின் வீழ்ச்சிக்குப் பின்னர் யாழ் குடாநாட்டினுள்ளேயே குவிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் குறைந்த பட்சம் 25ஆயிரம் படையாட்கள் உள்ளனர் எனக் கொள்வோமாயின் வன்னிக்கும் கிழக்கிற்கும் எஞ்சியுள்ளோர் தொகை ஆகக் கூடிய பட்சம் 30 ஆயிரமே. இந்நிலையில் கிழக்கில் ஒரு பெரும் படை நகர்வைச் செய்வதற்கோ அல்லது சில இடங்களைப் புலிகளிடமிருந்து மீண்டும் கைப்பற்றுவதற்கோ அங்குள்ள இரண்டு டிவிசன்களிடமுமுள்ள படையாட் தொகை 13 தொடக்கம் 15 ஆயிரத்திற்கு மேற்படாததாகும். புலிகள் மணலாற்றை முற்றாகக் கைப்பற்றுவதைத் தடுத்திடுவதற்காக திருமலையிலிருந்து 2-2 அங்கு நகர்த்தப்பட்டுள்ளது. மேலும், ஒரு டிவிசனின் நான்கிலொரு பகுதியையே சண்டைகளுக்கும் படை நகர்த்தலுக்கும் பயன்படுத்தலாமெனக் கொண்டால் கிழக்கில் சிறிலங்காப் படை ஒரு இயங்கா நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதையே நாம் காண்கிறோம்.

இது போலவே வவுனியா மன்னார் பகுதிகளிலும் மிக மட்டுப்படுத்தப்பட்ட இயங்கு நிலையிலேயே 2-1, 5-5, 5-6 என்பவை உள்ளன. இதன் காரணமாகவே குடாநாட்டினுள் புலிகள் கொடுத்து வரும் அழுத்தத்தை திசை திருப்பிடக் கூடிய பெரும் படை நடவடிக்கைகளை சிறிலங்காப் படைத்துறையால் வன்னியில் செய்ய முடியாதுள்ளது. "வன்னியில் புலிகளிடமுள்ள பகுதிகளை நோக்கி ஒரு பெரும் படை நகர்வை மேற்கொண்டால் யாழ்ப்பாணத்திலிருந்து அவர்களை இலகுவாக பின்வாங்கிடச் செய்யலாமே, ஏன் சிறிலங்காப் படைத்துறை அங்ஙனம் செய்யாதிருக்கின்றது? எனச் சில மேற்கத்திய போரியல் வல்லுனர் வினவுவர். அவர்களும் சரி, வாராவாரம் பக்கம் பக்கமாக போர் நிலவரங்களைப் பற்றி இங்கு எழுதித் தள்ளுபவர்களும் சரி, சண்டைகளை ஆ ஊ என்று பார்க்குமளவிற்கு மேற்படி கணக்கு வழக்குகளையும் அவற்றையொட்டி உருவாகும் போரின் போக்குகளைப் பற்றியும் ஆராய்வதில்லை.

ஆக, யாழ்க் குடாநாட்டிலும் வன்னி தெற்கிலும் புலிகளுக்கெதிராக நிற்கும் சிறிலங்காப் படையாட்களின் மொத்தத் தொகை 40 ஆயிரத்திற்கு மேற்படாதது. எனில், இவர்கள் வடக்கில் எதிர் கொள்ளும் புலிகளின் தொகை என்ன?

வன்னியிலுள்ள முழுநேரப் புலிகள் ஏழாயிரம் தொடக்கம் எட்டாயிரம் என்கிறது சிறிலங்காப் படைத்துறை. புளியங்குளத்திற்கு வடக்காகவும் பளைக்குத் தெற்காகவும் உள்ள பெருநிலப்பரப்பில் புலிகள் 1998ம் ஆண்டிலிருந்து திரட்டிய எல்லைக்காவல் படை, விசேட எல்லைப்படை போன்றவற்றில் குறைந்த பட்சம் 30 ஆயிரம் பேராவது உள்ளனர் எனவும் சிறிலங்காப் படைத்துறை அதிகாரி ஒருவர் கூறுகின்றார். மேற்படி படைகள் ஒரு மரபுவழிப்படைக்குரிய பண்புகளை படிப்படியாகப் பெற்றிடும் வகையில் புலிகள் வளர்த்து வருகின்றனர் எனவும் அவர் கூறுகின்றார். அங்ஙனமாயின் வடக்கிலுள்ள புலிகளின் மரபுவழிப்படைவலு 37ஆயிரம் தொடக்கம் 38 ஆயிரம் வரையாகிறது அல்லது ஆகப் போகிறது. எனவே ஒரு மரபுவழி படைவலுச் சமநிலை வடக்கில் தோன்றி வருகின்றது என நான் இங்கு கூறவேண்டியுள்ளது.

வடக்குக் கிழக்கின் எதிர்காலத்தை தீர்மானிக்கப் போகும் ஒரு படைவலுச் சமநிலையை நோக்கி ஈழப்போர் நகர்கின்றது.

O

நன்றி - நூலகத்திட்டம்



# இன்றும் செல்லும் செல்வா வாக்கு!

– விவேகி

நடந்து முடிந்த பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் தேசிய அரசியல், வடக்கு கிழக்கு அரசியல், மலையக அரசியல் என்ற நிலைமைகளில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. இவற்றில் சில மாற்றங்களுக்கு அரசியல்வாதிகளே வழிசெய்து கொடுக்க சில மாற்றங்கள் வாக்காளர்களால் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன.

தேசிய அரசியலைப் பொறுத்தமட்டில் எந்தவொரு பெரும்பான்மைக் கட்சியும் தனித்து ஆட்சியமைக்க முடியாத நிலை தோன்றியுள்ளது. ஆள், அம்பு, சேனை போன்ற ஆரவாரங்களுடன். ஆளும் கட்சியான பொதுஜன முன்னணி தனது தேர்தல் பிரச்சாரங்களை முடுக்கி விட்ட போதிலும் ஐக்கிய தேசியக் கட்சி குறைந்த அளவு பிரச்சாரங்களுடன் கிட்டத்தட்ட சமநிலையைப் பேணியிருப்பது பொதுஜன முன்னணியின் ஆட்சிக்குக் கிடைத்த தோல்வியென்றே கருத வேண்டியிருக்கிறது. அதுவுமல்லாமல் முஸ்லிம் காங்கிரஸின் ஆசனங்களும் பொதுஜன முன்னணியின் ஆசனங்களாகவே கணக்கிடப்படுகின்றன.

அரசு தனது அதிகாரத்தை உபயோகித்து ரணில் விக்ரமசிங்கமேல் பூசிய சேறை மக்களாகவே துடைத்தெறிந்திருக்கிறார்கள் என்பது அவருக்கு கிடைத்த விருப்பு வாக்குகளின் மூலம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. எவரும் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத அளவுக்கு 3,63,688 விருப்பு வாக்குகள் பெற்று அவர் சாதனை படைத்திருக்கிறார்.

மக்கள் விடுதலை முன்னணி ஆசனங்களின் எண்ணிக்கை அடிப்படையிலும், வாக்காளர் தொகை அடிப்படையிலும் மூன்றாவது அரசியல் சக்தியாக பாரிய வளர்ச்சி கண்டிருப்பது தேசியக் கட்சிகள் சிந்திக்க வேண்டிய விடயமாகும். மக்களை வெறும் உணர்ச்சிகள் மூலம் வழி நடத்திச் செல்லலாம் என்ற கனவை சிங்களத் தேசியக் கட்சிகள் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பதையே மக்கள் விடுதலை முன்னணியின் வளர்ச்சி எடுத்துக் காட்டுகிறது. ஐக்கிய தேசியக் கட்சி, பொதுஜன முன்னணி, மக்கள் விடுதலை முன்னணி என்ற மூன்றும் மூன்று திசைகளில் நிற்கின்ற ஒரே காரணத்தால் சிறுபான்மைக் கட்சிகள் இன்றைய அரசியலில் முக்கியத்துவமும் பலமும் பெற்ற சக்திகளாகத் தோற்றம் பெற்றிருக்கின்றன.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினரும், தேசிய ஐக்கிய முன்னணியினரும் எந்தக் கட்சி ஆட்சி நிறுவ முன்வந்தாலும் அதற்கு முண்டு கொடுப்பது தான் அரசியல் சாணக்கியம் என்று கருதுபவர்கள். இவர்கள் பல நிபந்தனைகளை விதிப்பது போல் போக்குக் காட்டினாலும், தங்கள் இருப்புக்காக அரசியல் நடத்துவது என்று முடிவு எடுத்தவர்களிடமிருந்து ஆரோக்கிய நிபந்தனைகளையோ மாறாத கொள்கைகளையோ எதிர்பார்க்க முடியாது. இவர்கள் விதிக்கும் நிபந்தனைகளுக்கும் அரசு தருவதாகச் சொல்லும் அளவுக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் அமைந்தாலும் கூட இவர்கள் அரசுடன் ஒத்துப்போவது தவிர்க்க முடியாதது. ஒரு சில மந்திரிப் பதவிகளுக்காக இவர்கள் மிக இலகுவாகவே விலைபோய் விடுவார்கள்.

வடக்கு கிழக்கு வாழ் தமிழர்களும் இம்முறைத் தேர்தலில் சற்று வித்தியாசமான - ஆனால், குழப்பமான மனோநிலையை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். பதினேழு வருட தொடர் யுத்தத்தின் மூலம் அவர்கள் சோர்ந்து போய்விட்டார்களா? அல்லது அரசியலில் அக்கறையற்றுப் போய் விட்டார்களா? என்பது கேள்விக்குறியாகவே இத்தேர்தல் முடிவுகளில் காணப்படுகிறது.

வடக்கிலும் கிழக்கிலும் ஏராளமான தமிழர்கள் வாக்களிக்காது விட்டிருக்கிறார்கள். இடப்பெயர்வு யுத்த மேகங்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிக்குள் வாழ்தல் என்பவை ஒரு தொகைத் தமிழ் வாக்காளர்களை வாக்களிப்பிலிருந்து விலக்கிவைத்த போதிலும் வாக்களிக்க சகல வசதிகளையும் கொண்டிருந்தும் கூட ஏராளமான தமிழர்கள் வாக்களிக்காது விட்டிருப்பது அரசியல் தீவிரத்தை புலப்படுத்துகிறதா? அல்லது விரக்தியைக் காட்டுகிறதா என்று தெரியவில்லை. இதேவேளை கிழக்கில் பெருவாரியான தமிழர்கள் முன்னெப்போதுமில்லாத அளவுக்கு தேசிய பெரும்பான்மைக் கட்சிகளுக்கு தமது ஆதரவை வழங்கியிருக்கிறார்கள் என்பதும் இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது. திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத் தமிழர்கள் இந்தக் கைங்கரியத்தை தாராளமாகவே செய்திருக்கிறார்கள். தமிழரின் ஏகபோக பிரதிநிதி என்று பெயர் பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழர் தலைநகரம் என்று வர்ணிக்கப்பட்ட திருகோணமலை மாவட்டத்தை கோட்டை விட்டு விட்டது. வன்னியில் ஒரு ஆசனத்தைத் தானும் பெறமுடியாது போய் விட்டது. மட்டக்களப்பிலும் ஒரு ஆசனத்தை இழந்திருக்கிறது. யாழ்ப்பாணத்திலும் அது பெற்றுக்கொண்ட ஆசனங்கள் மூன்றானாலும் பெருமைப்பட்டுக் கொள்ளும்படியாக இருக்கவில்லை. குறிப்பாக எல்லா இடங்களிலும் தமிழர் விடுதலைக் கூட்டணி செல்வாக்கு சரிந்தே காணப்படுகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி, டெலோ, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் பெற்றுக்கொண்ட ஒன்பது ஆசனங்கள் போக வடக்குக் கிழக்கின் சகல ஆசனங்களும் அவசரகாலச் சட்டத்தை ஆதரிக்கவும் தமிழர்கள் மேல் அடக்குமுறையைப் பிரயோகிக்கவும் போரைத் தீவிரப்படுத்தவும் கரங்களை உயர்த்தி ஆதரவு தெரிவிக்கப் போகின்றன என்பது தான் நடைமுறை. பொதுமக்கள் முன்னிலையில் எந்த வேஷம் போட்டாலும் பத்திரிகை அறிக்கைகளில் என்ன மாய்மாலம் பண்ணினாலும் உண்மை நிலை இதுதான்.

இந்த நிலைப்பாடு விடுதலைப் புலிகளின் அரசியல் போராட்டத்திற்கு அரசியல் ரீதியாக ஏற்பட்ட பின்னடைவு என்றே கருத வேண்டியிருக்கிறது. பாராளுமன்றத்தில் அவர்களுக்கு நம்பிக்கையில்லை என்று சொல்லிக்கொண்டாலும் சர்வதேச ரீதியாக சட்ட முறையிலான நியாயப்படுத்தல் பலமிழந்துபோய்விட்டது என்பதை ஒப்புக்கொண்டாக வேண்டும். வடக்குக் கிழக்கிலுள்ள விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான சக்திகள் சட்டரீதியாக அங்கீகாரம் பெற்று வருகின்றன என்பதை மறுக்க முடியாது.

முஸ்லிம் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்பவை தங்களை நம்பியிருந்த மக்களை பெரும்பான்மைக் கட்சிக்குள் இழுத்துச் செல்ல துணைபுரிந்து கொண்டிருக்கின்றன. இதனால் இவர்கள் தனித்துவமும் பேரம் பேசும் ஆற்றலும் சட்டரீதியாக அடகுவைக்கப்பட்டு போடும் பிச்சையில் திருப்தி காணவேண்டிய நிலை தோன்றியுள்ளது. அடுத்த தேர்தல் வரும் வரை இக்கட்சிகளின் வாழ்க்கை பத்திரிகை அறிக்கைகளை மட்டும்தான் நம்பியிருக்கப் போகின்றது.

சிஹல உருமய தான் போட்டியிட்ட எந்த இடத்திலும் ஆசனத்தைப் பெற தவறியது. சிங்கள மக்கள் கண்மூடித்தனமான மூர்க்கர்கள் அல்ல என்பதை உணர்த்தியிருக்கிறது. அதுவுமில்லாமல் கிடைத்த ஒரேயொரு தேசியப்பட்டியல் ஆசனத்துக்காக கட்சியில் ஏற்பட்ட உடைவு சிங்கள மக்கள் மத்தியில் அவர்களது கொள்கைப்பிடிப்பின் தன்மையை உணர்த்தியது.

*1970 தேர்தல் முடிவுகள் வெளியான போது தந்தை செல்வா சொன்ன வாக்கியம் "இனித் தமிழ் மக்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்". இவ்வளவு காலம் கழித்தும் அது எவ்வளவு நேர்த்தியாகப் பொருந்துகிறது பாருங்கள்!*

# மஞ்சள் தாளுக்கும் தண்ணீருக்கும் பலிபோகாத வாக்குகள்!

– தருமர்

நாடெங்கிலும் வன்முறைகள், ஊழல்களுடன் நடந்தேறியதைப்போல அல்லாமல் மிகவும் அமைதியாக வன்னி தேர்தல் நடைபெற்று முடிந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஒப்பீட்டளவில் இது உண்மை என்றே களத்தில் இருந்து கிடைக்கின்ற பக்கசார்பற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. இருப்பினும், தேர்தலில் கள்ளவாக்குப் போட்டதும், கள்ளவாக்கு போடச் செய்ததும், வாக்காளர்களைத் தமது வசம் திருப்புவதற்காக, அவர்களுக்கு கீழ்த்தரமான உபசாரங்களின் மூலம் வாக்கு மோசடிகளில் பலர் ஈடுபட்டதும் மிகத் தாராளமாகவே வன்னித் தேர்தலில் நடைபெற்றுள்ளன.

ஆயுதக் குழுக்களும் சரி, அரசாங்கக் கட்சியும் சரி, ஒன்றுக்கொன்று சளைக்காமல் தமது கைவரிசைகளை இதில் காட்டியிருக்கின்றன. இந்தத் தேர்தல் தந்திரத்தின்போது, ஒருவரையொருவர் பகைக்காமலும் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்ளாமலும் மிகவும் "பண்பாக" இந்தக் கட்சிகள் நடந்து கொண்டதை வன்னி வாக்காளர்கள் பாராட்டுகின்றார்களாம்.

முன்னைய தேர்தல்களில் முக்கியமான வேட்பாளர்களையும், வாக்காளர்களைத் தமது வாய்வீச்சினால் மேடைகளில் கவர்ந்திழுக்கின்ற கோடைமழை பேச்சாளர்களையும் முக்கியமான வேளைகளில் கடத்திச் சென்று விடுவார்கள். வாக்காளர் அட்டைகளைப் பெருமளவில் கைப்பற்றுவதற்காக வாய்த்தர்க்கம், அடிதடி, தில்லுமுல்லுகளில் கட்சி ஆதரவாளர்கள் ஈடுபடுவார்கள். கடத்தியவர்களைத் தேடி கட்சிக்காரர்கள் பேயாய் அலைவார்கள்.

மறுபக்கத்தில் புன்னகையோடு வந்து நிற்கும் வேகத்தோடு அவரைக் கொண்டு சென்று மேடையில் முழங்கச் செய்வார்கள். வாக்களிப்பு நேரத்தில் வாக்காளர் அட்டைகளைக் கொடுத்தனுப்பி தமக்குத் தேவையான கையில் வாக்குகளைப் போடச் செய்வார்கள். எண்ணிக்கையில் கூடிய கள்ளவாக்கு போட்டவர்களுக்கு கட்சிக்குள் ஏகப்பட்ட மரியாதையளிக்கப்படும். இடையிடையே மோதல்களும், அடிதடிகளும், கத்திக் குத்துக்களுக்கும் குறைவிராது. அப்போதெல்லாம் பொலிசாரின் நடவடிக்கைகள் தவிர தேர்தல் கண்காணிப்பு செயற்பாடுகளெல்லாம் கிடையாது.

இதனை அடியொட்டி, இப்போதைய தேர்தலில் ஆட்கடத்தல்கள் இடம் பெறாவிட்டாலும், கள்ளவாக்கு போடுவது மிகவும் தாராளமாகவே நடைபெற்று வருகின்றன. வன்னியில் இந்த முயற்சியில் ஈடுபடுத்தப்பட்ட பொதுமக்கள் பலரும் "உனக்கும் பேப்பே உங்கப்பனுக்கும் பேப்பே" என்ற வகையில் செயற்பட்டுள்ளது பற்றி தகவல்கள் கிடைத்துள்ளன. கள்ளனுக்குள் குள்ளனாகப் பொதுமக்கள் இந்த முறை செயற்பட்டுள்ளது குறித்து கட்சிகள் வெறுப்பும், கொதிப்பும் அடைந்துள்ளன.

ஆயுதக்குழுக்கள் அகதி முகாம்களில் இருப்பவர்களைத் தமது வாகனங்களில் தாராளமாக ஏற்றிவந்து வாக்களிப்பு நிலையங்களுக்கு அருகில் இறக்கி விட்டார்கள். ஆங்காங்கே அமைக்கப்பட்டிருந்த மையங்களில் கட்டுக்கட்டான வாக்காளர் அட்டைகளுடன் தயாராக இருந்த முக்கியஸ்தர்கள் வாக்காளர் அட்டைகளைக் கையில் திணித்து, குறிப்பிட்ட சின்னத்திற்கும் குறிப்பிட்ட இலக்கங்களுக்கும் வாக்களித்துவிட்டு வருமாறு கூறினார்களாம்.

ஆட்களை ஏற்றிக் கொண்டு திட்டமிட்ட முறையில் ஒன்றொன்றாக வருகின்ற வாகனம் வாக்குச்சாவடிகளுக்கு அப்பால் குறிப்பிட்ட தூரத்தில் நிறுத்தப்படும். ஆட்கள் அதிலிருந்து இறக்கப்படுவதற்கு முன்னர், வாகனத்தின் உள்ளே "தண்ணீர்க் கலசங்கள்" ஏற்றப்படும். பேணிபேணியாக வார்த்துக் கொடுப்பதை வாயில் ஊற்றிக் கொண்டதன் பின்பே "வாக்காளப் பெருமக்கள்" கீழே இறங்க அனுமதிக்கப்படுவார்கள்.

கீழே இறங்கியவர்களின் கைகளில் வாக்காளர் அட்டைகள் மட்டுமல்லாமல் செம்மஞ்சள் நிறத்தாளொன்றும் சேர்த்துத் தான் திணிக்கப்பட்டதாம். வாயைத் துடைத்துக் கொண்டும், கையில் இரகசியமாகத் திணிக்கப்பட்ட தாளைப் பொக்கட்டுக்குள் திணித்துக் கொண்டும் வாக்காளர் அட்டையைக் கையில் கொண்டு சென்றவர்கள் தாங்கள் சொன்னபடியே செய்வார்கள் என்று பாவம் கட்சிகளினதும், ஆயுதக் குழுக்களினதும் ஏஜன்டுகள் நம்பினார்கள்.

ஆனால், இடம்பெயர்ந்து அகதிகளாக இருந்தாலும், அறிவிலிகளல்ல என்பதை நிரூபிப்பதைப்போல, தங்களின் அறிவுக்கு எட்டிய வகையில், தமக்கு விருப்பமான கட்சிக்கும், வேட்பாளர்களுக்குமே இந்த வாக்காளப் பெருமக்கள் வாக்களித்தார்களாம்.

இந்தச் சம்பவங்கள் கோமரசங்குளம், இறம்பைக்குளம், சி.சி.ரி.எம்.எஸ். பாடசாலை, மாமடுவ பாடசாலை போன்ற இடங்களில் தாராளமாக நடைபெற்றதாம்.

மாமடுவ பாடசாலையில் அமைந்திருந்த வாக்குச் சாவடியில் வாக்களிப்பதற்கென வேளைக்கே கொண்டு செல்லப்பட்ட "வாக்காளப் பெருமக்கள்" அருகில் உள்ள பாதுகாப்பான வீடொன்றில் தங்க வைக்கப்பட்டிருந்தார்களாம். இவர்கள் வாக்களிப்பதற்காக அனுப்பப்படுவதற்கு முன் ஒரு சான்விச், ஒரு கட்லட், ஒரு வாழைப்பழம், ஒரு தேனீர் என்பன வழங்கப்பட்டு பசியும் தாகமும் தணிக்கப்பட்டதன் பின்னர், வாக்களிக்கும் வேலைக்குரிய சன்மானம் வழங்கப்பட்டு வாக்களிப்பதற்காக வாக்களிப்பு நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் அனைவருக்கும் எந்தச் சின்னத்திற்கு, என்ன இலக்கத்திற்கு வாக்களிக்க வேண்டும் என்பது ஏஜன்டுகளினால் தெளிவாகவே அறிவுறுத்தப்பட்டிருந்தது. இருந்தாலும், பலர் வாக்களிப்பு நிலையத்தினுள்ளே கடமையில் இருந்த சில ஊழியர்களிடமே, தமக்கு விருப்பமான கட்சியின் பெயரைக் கூறி, அதற்குரிய சின்னத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்டார்களாம். பலர், தாங்கள் விரும்பிய வேட்பாளர்களின் இலக்கத்தையும் கேட்டுத் தெரிந்து கொள்வதற்கு முயற்சித்தார்களாம். இந்த வகையிலேயே கள்ளவாக்கு போடுவதற்காக ஏற்றி வரப்பட்ட பலரும் நடந்து கொண்டார்களாம்.

- 12

நன்றி - நூலகத்திட்டம்



# தேர்தலின் பின்னான
# பாசிசத்தை விளங்கிக்கொள்ளல்

— என்.சரவணன்

தேர்தல் முடிந்தது. பல்வேறுபட்ட கோணங்களில் தேர்தலை ஆராய்ந்து பார்க்கும் வேலைகளும் அந்தந்த சக்திகளின் நலன்களில் இருந்து தொடங்கியாகியும் விட்டன. சிங்கள பேரினவாதக் கட்சிகளுக்கு என்ன நேர்ந்தது என்பது பற்றிய விசாரணைகளும் செய்யப்படுகின்றன. இதில் சில தவறான கணிப்புகளைப் பார்க்க முடிகிறது. முக்கியமாக இரண்டு வித கேள்விகள் முன்வைக்கப்படுகின்றன.

1. சிஹல உறுமய தோற்றுவிட்டதே. ஒரே ஒரு உறுப்பினரை அதுவும் தேசியப்பட்டியல் மூலம் அல்லவா மயிரிழையில் தப்ப வைக்க வேண்டியதாயிற்று. பின் எப்படி அதனை ஒரு பலமான இயக்கம் என்று கருத முடியும்?

2. சிஹல உறுமயவின் தலைவா எஸ்.எல்.குணசேகர ராஜினாமாச் செய்திருக்கிறார். பலமான கட்டமைக்கப்பட்ட ஒரு இயக்கத்தில் இத்தனை வேகமாக எப்படி ஒரு பிளவு ஏற்பட முடியும்?

இக் கேள்வி மிக மோலோட்டமாகப் பார்த்தால் நியாயமான தர்க்கபூர்வமான கேள்வி. ஆனால் சிங்கள வீரவிதானவின் ஒட்டுமொத்த சித்தாந்தத்தையும் அதன் அமைப்புத்துறை பலத்தையும் அறிந்தவர்களுக்கு இப்படி ஒரு கேள்வியே சிறுபிள்ளைத்தனமானதாக இருக்கும். சிங்கள வீரவிதானவின் மூலோபாயம் தந்திரோபாயத்தை விளங்கிக் கொள்ள முடிந்த ஒருவருக்கு இது ஒரு குழப்பம் மிகுந்த விடயமாகவே இருக்காது.



**சிஹல உறுமயவும் பாராளுமன்ற அரசியலும்**

இன்று சிறிலங்காவின் அரசியல் நீரோட்டத்தை வழிநடத்திச்செல்லும் இயக்கமாக வளர்ந்திருக்கிற சிங்கள வீரவிதான சகல மட்டங்களிலும் முழு அளவிலுமாக தன்னை ஸ்திரப்படுத்தி வருவது பற்றியும் ஏலவே அதன் அடைவுகள் பற்றியும் அறிந்திருக்கிறோம். பௌத்த அமைப்புகள், அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், மற்றும் வர்த்தகர்கள், தொழிலதிபர்கள், இராணுவ அதிகாரிகள், இராணுவத்தினர், தொடர்பூடகங்கள், வெகுஜன அமைப்புகள், என சகல மட்டங்களிலும் அது தன்னை பலப்படுத்தியிருக்கிறது. இதற்கான பல முன்னணி அமைப்புகளையும் அது உருவாக்கியிருக்கிறது. அடிப்படையில் சிங்கள வீரவிதான அமைப்பு தான் அதன் பகிரங்க மைய அமைப்பாக கட்டப்பட்டிருக்கிறது. மற்றும்படி புலிகளுக்கு எதிரான தேசிய முன்னணி, சிங்கள வர்த்தகா சங்கம் போன்ற அமைப்புகளைப் போலவே சிஹல உறுமய கட்சியும் சிங்கள வீரவிதானவின் முன்னணி அமைப்புகளில் ஒன்று என்பதை அறிய வேண்டும்.

எனவே அவர்களுக்கு இப்போதைய காலம் கட்சி கட்டுவதல்ல. கட்சி என்பது அவர்களின் மைய அமைப்புக்கும், மைய சித்தாந்தத்துக்குமான ஒரு ஊடகம் மட்டுமே. கட்சியில் அல்ல அதன் அனைத்தும் தங்கியிருக்கிறது. மாறாக மைய வேலைத்திட்டதில் தான் கட்சியும் அடங்கியிருக்கிறது. மைய அமைப்பில் தான் கட்சியும் தங்கியிருக்கிறது.

சிஹல உறுமய கட்சி கட்டப்பட்டதானது அவர்களின் இலக்கை அடைவதற்கு கட்சி அரசியல் செயற்பாடுகளுக்கூடாக எந்தளவுக்கு போக முடியுமோ அவ்வாறு அந்த அடைவுகளை எட்டத் தான். இம்முறை அவர்கள் பாராளுமன்றக் கதிரையைப் பெற்றார்களோ இல்லையோ இந்தப் பாராளுமன்ற தேர்தல் காலத்தில் கிடைக்கப் பெற்ற அனைத்து சலுகைகளையும், வாய்ப்புகளையும் பயன்படுத்தி அவர்களின் சித்தாந்தத்தை பெருமளவு கொண்டு சென்றார்கள்.

சாதாரண காலகட்டங்களில் கிடைக்காத பிரச்சார சாதனங்கள், வாய்ப்புகள் அனைத்தையும் பயன்படுத்திக் கொண்டார்கள். அவர்களுக்கு இப்போது வேண்டியதெல்லாம் அமைப்பைப் பலப்படுத்த பாசிச கருத்தேற்றம் செய்யப்பட்ட தேசியவாத சிந்தனைகளை மக்கள் மத்தியில் பரப்புவதே. மேடைகள் பல போட்டார்கள், ஒலிவாங்கிகள் மூலம் வாகனங்களில் ஊர் ஊராக கருத்தைக் கொண்டு சென்றார்கள், துண்டுப்பிரசுரங்கள் விநியோகித்தார்கள், சுவரொட்டிகள் ஒட்டினார்கள், பல ஊடகங்களும் இவர்களின் கட்டுரைகள், பேட்டிகள், செய்திகள் என்பனவற்றைப் பிரசுரித்தன. இலத்திரன் ஊடககங்கள் பல விவாதத்துக்கான வாய்ப்புகளை வழங்கின. இதில் இலத்திரன் ஊடகங்களிலேயே அதிக இனவாதத்தைக் கக்குகின்ற டீ.என்.எல் அதிகளவு இடத்தை வழங்கியது முக்கியமானது.

| | | |
|---|---|---|
| September | 22 | 8.40pm - 8.55pm |
| September | 27 | 8.40pm - 8.55pm |
| September | 29 | 9.05pm - 9.20pm |
| October | 04 | 8.40pm - 8.55pm |
| October | 06 | 9.05pm - 9.20pm |
| October | 08 | 9.05pm - 9.20pm |

நிலைமைகளை உரசிப் பார்க்கும் தேர்தலாகவும், தமக்கான செயற்பயிற்சிக்கான தேர்தலாகவும் கூட அது இத்தேர்தலைப் பயன்படுத்தியிருந்தது. வடக்கு மாவட்டங்கள் உள்ளிட்ட மொத்தம் 22 தொகுதிகளிலும் போட்டியிட்டது. சம்பிக்க ரணவக்க இந்தக் கட்சி ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னரே எங்களுக்கு பாராளுமன்ற அரசியல் ஒரு இலக்கே அல்ல என்று தெளிவாகக் கூறி வந்ததோடு கட்சி ஆரம்பிக்கப்பட்ட பின்னரும் கூட அதை திரும்பவும் தெளிவாகக் கூறியிருந்தார். அது போல 'பாராளுமன்றவாதத்துக்குள் சிக்குண்ட சிங்கள அரசியல் தலைவர்களைக்' கடுமையாகச் சாடியும் வந்திருக்கிறார் என்பது ஞாபகம் இருக்கலாம். அவர்களின் துண்டுப்பிரசுரத்தையும் அவர்களின் பிரசார உத்திகளையும் பார்த்தால் தெரியும் அவர்கள் வாக்குறுதிகள் அளிப்பதை தவிர்த்தே வந்தார்கள் என்பதை. அவர்களின் விஞ்ஞாபனமும் கூட நீண்ட கால இலக்கைக் கொண்டவையே ஒழிய ஒரு அரசாங்கத்துக்குரியதாக இருக்கவில்லை. (அவர்களின் இணையத்தளத்தில் முழு விஞ்ஞாபனத்தையும் பார்க்கலாம்.)



அவர்களின் துண்டுப்பிரசுரம் ஒன்று இப்படியிருக்கிறது.

'1998 ஆம் ஆண்டு இந் நாட்டின் சனத்தொகை வளர்ச்சிவீதம் 100 குடும்பங்களுக்கு முஸ்லிம்கள் 57 வீதம், தமிழர்கள் 30 வீதம், சிங்களவர்கள் 13 வீதம். சிங்கள இனம் இந் நாட்டின் மூன்றாவது இனமாக ஆகப்போகிறது. நாட்டின் பொருளாதாரத்தில் 80 வீதம் தமிழர், முஸ்லிம்களிடமும், 20 வீதம் மட்டுமே சிங்களவர்களிடமும், நாட்டிலுள்ள பிரதான தொழிலதிபர்கள் 10 பேரில் 8 பேர் தமிழர் ஒருவர் முஸ்லிம், ஒருவர் சிங்களவர், நாட்டின் தேசிய பிரதான வர்த்தகங்களில் 92 வீதம் தமிழ், முஸ்லிம்களிடம் உள்ளன. 8 வீதம் மட்டுமே சிங்களவர்களிடம், நாட்டின் பெரும்தொழிற்துறை உரிமையில் 85 வீதம் தமிழ், முஸ்லிம் மற்றும் அந்நிய நாட்டவர்களிடமே உள்ளன. மிகுதி தான் சிங்களவர்கள் கைகளில்... என்றெல்லாம் கூறிக்கொண்டே சென்று இறுதியில் ஒரு சிங்கள குடும்பத்திற்கு குறைந்தது 5 'ஆண்' குழந்தைகளைப் பெற்றுத் தாருங்கள். நிகாய பேதங்கள், சாதி பேதங்கள், மத பேதங்கள் என்பனவற்றை அகற்றிவிட்டு சிங்களவர்களாக அணிசேருங்கள். இன்றைய எதிர்கால குழந்தைகள் நாளை உங்களைச் சபிக்க இடம் வையாதீர்கள். உங்கள் நாளைய சந்ததியினரை அடிமைகளாக ஆக்கிவிடாதீர்கள்.' என்கிறது அந்தத் துண்டுப்பிரசுரம் இதனை வெளியிடுபவர் சிஹல உறுமயவின் வேட்பாளர்களில் ஒருவரான தாரபேரியே சுகுனசார ஹிமி எனும் பிக்கு. இவர் எழுதிய 'விபதக' எனும் சிங்கள இனத்துக்கு இழைக்கப்பட்ட வரலாற்று அநீதிகளின் உள்ளடக்கம் எனும் பொருளிலான ஒரு நூலும் வெளியாகியிருக்கிறது.

சிஹல உறுமய கட்சி ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டவுடன் அதற்கு ஒரு நிதியம் ஒன்றை உருவாக்கினார்கள். ஒரு சில நாட்களுக்குள் வெளிநாட்டுக் கிளைகளும் உருவாக்கப்பட்டன. அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளில் உடனடியாக உருவாக்கப்பட்டன.

**நாடு முழுவதும் மொத்தமாக கிடைத்த வாக்குகளில் 1.47 வீத வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனம் அதுவும் மயிரிழையில் பெற்றுக் கொண்ட போது, எப்படி 1.22 வீத வாக்குகளை மட்டுமே பெற்றுக்கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு 5 உறுப்பினர்களைப் பெறமுடியும் என்று தற்போது கேள்வி எழுப்புகிறது சிஹல உறுமய. இந்த அற்ப தர்க்கத்தைப் பிரசாரம் செய்து தேர்தல் முறையை மாற்ற வேண்டுமென்றும். இது தமிழர்களால் தமிழர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட தேர்தல்முறை என்றும் அதன் இணையத் தளத்தில் கட்டுரை வெளியிட்டிருக்கிறது**

இறுதியாக சிஹல உறுமய கட்சி தேர்தலில் ஒரு மாவட்டத்திலிருந்தும் தெரிவு செய்யப்படாவிட்டாலும் தேசியப் பட்டியலின் மூலம் ஒரு ஆசனத்தைப் மாத்திரம் பெற்றுக்கொண்டது.

நாடு முழுவதும் மொத்தமாக கிடைத்த வாக்குகளில் 1.47 வீத வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனம் அதுவும் மயிரிழையில் பெற்றுக் கொண்ட போது எப்படி 1.22 வீத வாக்குகளை மட்டுமே பெற்றுக்கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு 5 உறுப்பினர்களைப் பெறமுடியும் என்று தற்போது கேள்வி எழுப்புகிறது சிஹல உறுமய. இந்த அற்ப தர்க்கத்தைப் பிரசாரம் செய்து தேர்தல் முறையை மாற்ற வேண்டுமென்றும். இது தமிழர்களால் தமிழர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட தேர்தல்முறை என்றும் அதன் இணையத் தளத்தில் கட்டுரை வெளியிட்டிருக்கிறது.

உண்மையில் சிஹல உறுமய தோல்வியுற்றதா? 1994 ஒகஸ்ட் தேர்தலில் மக்கள் ஐக்கிய முன்னணி ஒரு ஆசனத்தையும் பெறாமல் தோல்வியுற்றதையும், சமாதான வேடம் பூண்டிருந்த சந்திரிகா தலைமையிலான பொ.ஐ.மு வென்றபோது போது இதோ இனவாதத்துக்கு மக்கள் கொடுத்த பதில் என கூறினார்கள். ஆனால் இனவாதம் தான் அப்போதும் வென்றது என்பதை யாரும் அன்று ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால் காலம் பதில் சொல்லியது. இம்முறை நிலைமை மேலும் மாறானது. முதலாவது சிங்கள வீரவிதானவின் நோக்கம் தேர்தல் தானா? அடுத்தது தற்போதுள்ள தேர்தல் அரசியல் கலாசாரத்தின்



முன்னால் வாக்களிப்பை வைத்து மக்களின் எண்ணங்களையோ அரசியலையோ கணக்கிட முடியுமா? அவ்வாறு முடியுமென்றால் மக்கள் சுதந்திரமாக தமது கொள்கைகளுக்காகத்தான், தேர்தலில் நம்பிக்கையுடன் வாக்களித்தார்கள் என்கிற முடிவுக்கு வரவேண்டிவரும். உண்மையைச் சொல்லப் போனால் சிங்கள வீரவிதான தனது முழு வளத்தையும்,

– 8

நன்றி - நூலகத்திட்டம்



வட கிழக்கு தேர்தல் களம்:

# புலிகள் மீண்டும் வருவார்கள்.....?

— சிசைரோ

நடந்து முடிந்த தேர்தலில் இந்நாட்டுச் சிறுபான்மைத் தேசியங்கள் வாக்களித்த விதம் பற்றி ஆராய்வதானால் அதனை மூன்று பிரிவுகளாக வகுத்து ஆராய்தலே பொருத்தமானதாகும். அந்த வரிசையில் முதலாவதாக வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் வடக்குக் - கிழக்குக்கு உள்ளேயும் வெளியேயும் எங்ஙனம் வாக்களித்தனர் என்பதை இக்கட்டுரையில் அலசுவோம். யாழ், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு, திகாமடுல்ல, கொழும்பு மாவட்டங்கள் என்பவற்றில் தமிழ் வாக்குகள் செல்வாக்குச் செலுத்தக் கூடியனவாக இருந்தன. இந்தச் செல்வாக்கினை வாக்களார் எண்ணிக்கையைப் பொறுத்து ஒரு வீதாசாரத்தில் வேண்டுமானால் அளவிட்டுப் பார்க்க முடியும். இந்தச் செல்வாக்கினை ஓர் அரசியற் சக்தியாக உயிர்ப்படுத்தி (Mobalise) வாக்களிப்பில் தமிழர்கள் கலந்து கொண்டார்களா? விடையை மாவட்ட ரீதியில் பார்ப்போம்.


யாழ்ப்பாணத்தில் வாக்குச் செல்வாக்கு என்பது 100% மாக இருந்தது. ஆனால் வாக்காளர்கள் எப்படியிருந்தார்கள்? பெருந்தொகையானோர் இடம் பெயர்ந்து விட்டதால் 10% மானோரே வாக்களித்தனர் என்று தான் கூறவேண்டும். தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு விடுதலைப் புலிகள் கோரியிருந்த போதிலும் வேட்பாளர்கள் தீவிரமான முறையில் அச்சுறுத்தப்பட்டதாகவோ அச்சத்துக்கு உட்பட்டதாகவோ கூறமுடியாது. ஸ்ரீ.ல.சு.கட்சி சார்பிலும் ஐக்கிய தேசியக் கட்சி சார்பிலும் கூட வேட்பாளர்கள் துணிந்து போட்டியிட்டுள்ளனர். ஒரு காலத்தில் இத்தகைய கட்சிகளின் அமைப்பாளர்களைத் தேடித்தேடி வேட்டையாடுஞ் சூழ்நிலையிருந்தது. ஆனால், இப்போது மக்கள் அவர்களைத் தேடிப் போகும் நிர்ப்பந்தச் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அப்படியானால் - துரோகிகள் என்று முத்திரை குத்தப்பட்டோர் திடீரென மறு அவதாரம் எடுத்துக் கொண்டதாகக் கூறமுடியுமா? இல்லவே இல்லை.

மிதவாதக் கட்சிகளான த.வி.கூட்டணியும் தமிழ்க் காங்கிரஸும் இங்கே போட்டியிட்டன. ஆயுதக் குழுக்களாக புளொட், ரெலோ, ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.-எல்.எவ் (இரு அணிகள்) என்பனவும் களத்தில் நின்றன. இராணுவம் கால் பதித்த போது கூடச்சென்று கால் பதித்த 'உரிமைக்கிட்டு' ஈ.பி.டி.பி. யாழ் மண்ணின் மீது அரசியல் அதிகார உரிமை கொண்டாடுகின்றது. இடத்துக்கு இடம் இந்த உரிமைக் கோரிக்கையை அது சுரம் மாற்றிப் பாடுகின்றது. எப்படியோ 4 ஆசனங்களை இந்த உரிமை வழிப் பிரயோகமாக இது பெற்றுள்ளது. இதனிடம் ஆசனங்களைத் தட்டிப் பறிக்கும் போட்டியில் மிதவாதக் கட்சிகள் இரண்டும் ஆடுபட்டுத் தமக்கும் 4 ஆசனங்களைப் பெற்றுக் கொண்டு விட்டன. ஐக்கிய தேசியக் கட்சியில் தெரிவாகியுள்ள ஒருவர் வர்த்தக அமைப்புகளுடன் நேரடித் தொடர்புள்ளவர்.

ஏனைய ஆயுதக் குழுக்களுக்கு ஒரு தொகுதிதானும் கிடைக்கவில்லை. குறிப்பாக, விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டைத் தாம் ஆதரிப்பதாக வெளிப்படையாகக் கூறத் துனிந்துவிட்ட ரெலோவுக்கு யாழ்ப்பாணத்தில் கணிசமான செல்வாக்கைப் பெற்றிட முடியவில்லை. ஆக, புலிகளின் நிலைப்பாட்டுடன் மறைமுகமாகவேனும் ஒத்துப்போகக் கூடிய கட்சிகளுக்கு மட்டுந்தான் வடக்கில் மக்கள் வாக்களித்தார்களா என்ற வினாவுக்கு இல்லையென்றே பதில் கூறவேண்டும். தீவுப்பகுதிக்கு வெளியிலும் கணிசமான வாக்குகள் ஈ.பி.டி.பிக்குக் கிடைத்துள்ளமையை நாம் மறுக்க முடியாது. இவை யாவுமே புலிகளுக்கு எதிரான வாக்குகள் என்று கொள்ளலாமா? மக்கள் போராட்டத்தில் சலிப்படைந்து போய் உயிர் வாழ்வை முதன்மைப்படுத்தி வாக்களிக்கின்றார்களா?

### வழமைக்கு மாறான வன்னியின் போக்கு

புளொட்டுக்கு வழங்கப்பட்டிருந்த ஆதரவு வாபஸாகி இப்போது ரெலோவுக்கு அது வழங்கப்பட்டுள்ளது. புலிகளின் அரசியலை மதித்து பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்வதிலும் ஆட்சி மாற்றத்துக்கு உதவும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்குதல் என்பதிலும் வன்னியில் ரெலோ பகிரங்கமான ஒரு நிலைப்பாட்டையே கடைபிடித்திருந்து. இவர்களுக்கு இணையான உற்சாகத்துடன் களமிறங்க ஏனைய இயக்கத்தவர்களால் முடியவில்லை. வழமை போல பெரிய கட்சிகள் இரண்டும் தலா ஓர் ஆசனப்படி கைப்பற்றிக் கொள்ள ரெலோவுக்கு மூன்று ஆசனங்களைப் பெற முடிந்து விட்டது. இதற்குக் காரணம் என்ன? மக்கள் தங்களுடைய பாதுகாப்புக்கும் நலன்களுக்கும் யாரை நம்புகின்றார்கள்? ரெலோ உறுப்பினர் பாராளுமன்றத்தில் கடைசியாக ஆற்றிய உரை மிக நேர்த்தியானதாக இருந்தது என நேயர்கள் பாராட்டியதன் விளைவா இந்த வெற்றி? அப்படியானால் ஸ்ரீகாந்தா ஏன் யாழில் வெற்றிபெற முடியவில்லை?



வன்னி மக்கள் ரெலோவின் நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டார்களா? அல்லது மக்களின் இன்றைய நிலைமையை ஏற்றுக் கொள்ளும் விதத்தில் வேட்பாளர்கள் தம்மைத் தயாரித்துக் கொண்டார்களா? அல்லது புலிகளுக்கு இஷ்டமான நிலைப்பாட்டிலிருந்ததால் மக்கள் ரெலோவை மட்டும் அதுவும் புலிகளுக்காக வேண்டி ஆதரித்தார்களா?விடை தெரியவில்லை.

திருகோணமலையில் தமிழரின் அரசியல் பாராளுமன்றப் பாதையிலிருந்து விடுபட்டதாகவே சென்றுவிட்டது. இது சாதகமான ஒரு விளைவையா அன்றேல் பாதகமான சூழ்நிலையையா ஏற்படுத்தப் போகின்றது என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். தமிழ்க் கட்சிகளும் இயக்கங்களும் அப்பம் பங்கிட்டதால் மட்டும் இங்கு பிரதிநித்துவம் பறிபோய்விட்டதாகக் கூறமுடியாது. பேரிவாதக் கட்சிகளான பெரிய இரு கட்சிகளுக்கும் கணிசமான தமிழ் வாக்குகள் கிடைத்துள்ளமையை தேர்தல் கடமைகளில் ஈடுபட்டிருந்தோர் வாயிலாக அறிய முடிகின்றது. இங்கேயும் இனமானம், சுயாட்சி, சுதந்திரம் என்பவற்றுக்கு மேலாக வேறு நலன்கள் தமிழ் வாக்காளர்களை வளைத்துப் போட்டுக் கொண்டனவா? எவை பிரதானமானவை என்பதில் வாக்காளர்கள் தடுமாறினார்கள் என்று கொள்ளலாமா,? அல்லது சரிந்து விட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் செல்வாக்கின் பிரதிபலிப்புத்தான் பிரதிநித்துவ இழப்பு எனலாமா?

### கோட்டையின் சரிவா கொள்கையின் சறுக்கலா?

ஆக மோசமான விளைவுகளைக் கொண்ட வாக்களிப்பினைக் கண்ட மாவட்டம் மட்டக்களப்புத்தான். இனப்பிரச்சினையின் கொடூரமுகத்தை கூடுதலாகத் திரிசிக்கும் மாவட்டம் என்றால் இலங்கையில் இதுவே முதல் மாவட்டமாகவும் இருக்கும். அத்தகைய மாவட்டத்திலிருந்து பேரினவாதக் கட்சிகளுக்கும் மிதவாதத் தமிழ்க் கட்சிக்கும் கிடைத்த வாக்குகளைப் பார்க்கும் போது பலத்த ஏமாற்றமே தோன்றும். அத்துடன் முஸ்லீம் காங்கிசஸின் இன்னொரு தோற்றமான தேசிய ஐக்கிய முன்னணிக்கும் இம்முறை தமிழ் வாக்குகள் நிறையவே சென்றுள்ளன என்பது கண்கூடு. மட்டக்களப்பு தேர்தல் தொகுதியில் மட்டும் 16 ஆயிரம் தமிழ் வாக்குகள் தே.ஐ.முன்னணிக்குப் போயிருக்கும் சாத்தியம் உண்டு என்கிறார்கள். 1994 தேர்தலில் முடிசூடா மன்னனாக வந்த ஜோசப் பரராசசிங்கம் எம்.பி. இம்முறை 12 ஆயிரம் விருப்பு வாக்குகள் மட்டுமே பெறும் மிகப்பயங்கரமான பாதாள நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். இவரது தொகுதி வாக்குகளை ஹிஸ்புல்லா மட்டுமன்றி கணேசமூர்த்தியும் அலிசாகிர் மௌலானாவும் கூடப் பங்குபோட்டுக்கொள்ள முடிந்தது.

ஆயின் மட்டக்களப்பு மாவட்ட மக்களின் விருப்புத்தான் என்ன? அவசரகால நிலையாவது மனித உரிமைகளாவது - அரசாங்கத்துடன் ஒட்டியுறவாடிப் பெறக்கூடியதைப் பெற்றால் போதுமாகும் என்பதா? அப்படியானால் இது 1940 களை நோக்கிய பிற்பாய்ச்சலா? தனித்துவம் பற்றிய எதுவித அக்கறையும் தேவையில்லை. எமக்கு தரகர்கள் வேண்டாம். நேரடியாகவே ஆளுங்கட்சியுடன் தொடர்பபைப் பேணவேண்டும். அப்போது தான் அபிவிருத்தி நடக்கும் என்ற புதிய தேசிய உணர்வின் கொப்பளிப்பா? இதுதான் மக்கள் கருத்தென்றால் இனவிடுதலைப் போராட்டத்தை முற்றாக அவர்கள் நிராகரிக்கும் நிலைக்கு வந்துவிட்டார்களா?

அம்பாறை (திகாமடுல்ல) மாவட்டத்தில் நல்ல வேளையாகக் கூட்டணியின் நியமனப் பட்டியல் நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டமையினால் தமிழர் பிரதிநிதி ஒருவர் தெரிவாக முடிந்தது. ஆயினும் சென்ற முறை மாவைக்கு இங்கு கிடைத்த வாக்குகளைக் காட்டிலும் குறைவாகக் கிடைத்த சுயேட்சைக் குழுவுக்கு ஓர் ஆசனம் கிடைத்ததில் அதிர்ஷ்டமும் கலந்துள்ளது. ஆனால், இங்கும் கறையான் புற்றெடுத்த கதை தான் அரங்கேறியுள்ளது என்கிறார்கள். அதாவது விருப்பு வாக்குகள் என்பது அரசோடு சேர்ந்து அபிவிருத்திக்கு உதவுபவருக்குத்தான் என்று வாக்காளர்கள் தீர்மானித்துள்ளார்கள். கொள்கை பேசியவர்கள் பின்தள்ளப்பட்டிருக்கின்றார்கள் காரணமென்ன?

### தடுமாறாத தலைநகர தமிழ் வாக்குகள்

ஐக்கிய தேசியக் கட்சிக்கே வாக்களிக்கும் அந்த பாரம்பரியத்தில் எவ்வித தடுமாற்றமுமின்றி தமிழ் வாக்குகள் எதிர்க்கட்சிக்குத் தாராளமாகக் கிடைத்தன. அத்துடன் இக்கட்சி இம்முறை அளுங்கட்சியாக மாறும் என்ற எதிர்பார்ப்பில் மேலதிக வாக்குகளும் குவிந்துள்ளன. தமிழ்க் காங்கிரஸும் இடதுசாரி முன்னணியும் எவ்வளவுதான் முயற்சித்தாலும் "திருந்தவே மாட்டோம்" என்பதில் தீவிரமாக உள்ளவர்கள் தலைநகரத் தமிழர்கள். போதாதற்கு பேராசிரியர் பீரிஸின் 'ஒப்பாரியும்' ஓரளவுக்கு தமிழ் வாக்குகளைக் கவரத்தான் செய்துள்ளது. "உங்களை விட்டால் வேறுகதியில்லை" என்று தமிழ்ப் பத்திரிகைகள் மூலம் ஒருவாரத்துக்குள் நாலு பேட்டிகளைப் பிரசுரிக்கச் செய்து அவர் கெஞ்சியதுக்குப் பலன் கிடைத்துள்ளது. ஏனெனில் பேராசிரியருக்கு மொறட்டுவவில் கிடைத்த வாக்குகளை விட ஏனைய பகுதிகளில் கிடைத்த வாக்குகளின் பெரும் எண்ணிக்கை தமிழ் வாக்குகளின் சேர்வினையும் பிரதிபலிப்பதாகவே உள்ளது.

பேராசிரியர் பத்திரிகைகளை நாடியதைவிட சில பத்திரிகைப் பிரபல்யங்கள் அவரைத் துரத்தித் திரிந்து பேட்டி கேட்டதாகவும் தகவல் உண்டு. அதற்கான பிரதியுபகாரம் அவர்களுக்கு நிச்சயம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் மிதப்பதாகக் கேள்வி.


எப்பிடியிருப்பினும் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்ட மனோகணேசனும் சி.மகேந்திரனும் வெற்றி பெறவில்லை. ஆனால், இக்கட்சிக்கு வாக்களித்த தமிழர்கள் இவ்விருவருக்காகவும் வாக்களித்தார்கள் என்பதைவிட கட்சிக்காகவே வாக்களித்தார்கள் என்பதே பொருத்தமானதாகும்.

ஆக, ஒட்டுமொத்தத்தில் என்னதான் சொல்ல வருகின்றாய் என்று வாசகர்கள் இப்போது சலிப்புடன் கேட்பீர்கள். நாடு முழுவதிலும் தமிழ் வாக்குகள் அளிக்கப்பட்டிருக்கும் வித்தைப் பார்ப்பின் எந்தவொரு திட்டவட்டமான நிலைப்பாட்டினின்றோ, குறித்த திசை நோக்கியோ, ஏதேனும் கொள்கை அடிப்படையிலோ இந்த வாக்குகள் அளிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஒருவேளை புலிகள் தங்கள் சார்பில் சுயேட்சைகளை நிறுத்திப் பரீட்சித்திருக்கலாம். ஆனால், அங்ஙனம் செய்ய அவர்கள் முன்வரவிலலை.

ஆயின், பிச்சை வேண்டாம் நாயைப் பிடி என்ற வாறாக "தப்பித்தலுக்காக" வாக்களித்தார்களா என்றால் அதுவுமில்லை என்றே கூறுவேன். மேலே எழுப்பியுள்ள எல்லா வினாக்களுக்குமான விடையாக நான் கருதுவது இதுதான்.

நன்றி - நூலகத்திட்டம்





சென்ற இதழில் தவிர்க்க முடியாத காரணங்களால் இத்தொடர் பிரசுரிக்கப்படவில்லை

எனது பத்திரிகை உலக அனுபவங்கள் - 5

# மூன்றாவது முறையாகவும் பொட்டர் அறிக்கையுடன் வந்தார்.....!

இதுவும் பொட்டர் பற்றிய சங்கதி தான் !

பொட்டர் என்பது எல்லோரும் அன்புடனோ, அன்பில்லாமலோ சொல்லிக் கொண்டாலும் அவருக்கு நேர் நேராகச் சொல்ல மாட்டார்கள்.

மல்லாகம் நீதிமன்றத்தில் புரக்டர் நடராசா ஒரு வணங்காமுடி. (தலையில் மட்டும் முடியில்லை/ வழுக்கை)

மல்லாகத்திலும் அதையடுத்த கிராமங்கள் ஊர்களிலும் பொட்டர் என்றால் யாருக்கும் பயங்கலந்த ஒரு மரியாதை !

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியில் முக்கிய ஒரு துணாக விளங்கியவர் பொட்டர் நடராசா. சகல போராட்டங்களிலும் முன்னணியில் நிற்பார். இளைஞர்கள் இளமை துடிப்பில் ஏதாவது செய்து விட்டாலும் பல்லைக் கடித்துக் கொண்டு அவர்களைச் செல்லமாகக் கடிந்து விட்டு அவர்களுக்குப் பாதுகாப்பு அரணாக நிற்பார்.

பல தடவைகள் தடுப்புக்-காவலில் வைக்கப்பட்டவர்.

1961ஆம் ஆண்டு வடக்-கிலும் கிழக்கிலும் நடந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தின் போது யாழ்ப்பாணம் கச்சேரிக்கு முன்பாக நடராசாவும் சத்தியாக்கிரகிகளையும் அவர்களின் நலனையும் கவனித்துக் கொண்டி-ருந்தார். பெரியவருக்கு (எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களை பெரியவர் என்று தான் பொட்டர் சொல்லுவார்.) துணையாக நிழல் போல் நின்றவர்.

ஆயுதப்படைகள் கச்சேரிக்கு முன்பாக அமைதியாக அமர்ந்திருந்திருந்த சத்தியாக்கிரகிகள் மீது பாய்ந்து தாக்குதல் நடத்திய போது இடைமறித்துக் கேள்விகேட்க எத்தனித்த பொட்டர் நடராசாவின் தலையிலும் பொல்லாலடிவிழுந்தது. மண்டையில் காயமேற்பட்டது.

சத்தியாக்கிரகிகளைக் கலைத்துவிட்டு தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். நடராசா மருத்துவமனைக்குச் சென்றுவிட்டு மல்லாகத்திலுள்ள தனது வீட்டுக்கு வந்துவிட்டார். யாழ்ப்பாண நகரிலிருந்து சுன்னாகம் வரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

நண்பகலுக்கு முன் சிறிது நேரம் ஊரடங்கு தளர்த்தப்பட்டிருந்தது. நானும் நண்பர் ஒருவரும் ஊரடங்கு உத்தரவினால் வெளியே அனுப்ப முடியாமலிருந்த ஈழநாடு பத்திரிகைப் பிரதிகள் சிலவற்றை எடுத்துக் கொண்டு சுன்னாகம் பக்கம் போனோம். அப்படியே மல்லாகம் சென்று நடராசா வீட்டுக்குப் போயிருந்தேன். தலையில் காயத்துக்கு மருந்து கட்டியிருந்தார். பலர் வந்து அவரிடம் நலம் விசாரித்துக் கொண்டிருந்தனர். அவரையும் கைது செய்து தடுப்புக்காவலில் வைப்பதற்காக கூட்டிச் செல்வதற்குப் பொலிசார் கொண்டுவந்திருந்த அழைப்பாணையில் எஸ். நடராசா என்பதற்கு பதிலாக கே. என்றிருந்தது அந்த நடராசா நான் இல்லை என்று திருப்பி அனுப்பி விட்டார்.

மாலையில் புதிய ஆணையுடன் வந்து அவரைக் கொழும்புக்குக் கூட்டிச் சென்று தடுப்புக்காவலில் வைத்தது வேறு விஷயம்.

எஸ்.ஜே.வி. செல்வநாயகம் 1947ம் ஆண்டு பொதுத் தேர்தலில் முதல் தடவையாகத் தமிழ் காங்கிரஸ் வேட்பாளராக நின்று அமோக வெற்றியீட்டினார்.

1952 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் இலங்கைத் தமிழரசுக்கட்சி வேட்பாளராக இருந்து தோல்வியடைந்தார். இதன் பின் 1956ஆம் ஆண்டு தொடக்கம் காங்கேசன் துறைத்தொகுதிக்கு செல்வநாயகமே பிரதிநிதியாக-விருந்தார்.

1972ஆம் ஆண்டில் இலங்கையை ஒரு சோஷலிஸக் குடியரசாகப் பிரகடனப்படுத்தும் புதிய அரசியலமைப்புக் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது.

இது நிறைவேற்றப்பட்டதும் அதைத் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை நிரூபிப்பதற்காக அரசுக்குச் சவால் விட்டு தமது பிரதிநிதித்துவத்தை ராஜினாமாச் செய்து உபதேர்தலில் மீண்டும் போட்டியிட்டு அமோக வெற்றியீட்டினார். அவர் மரணமாகும் வரை காங்கேசன்துறைத் தொகுதிக்கு அவரே பாராளுமன்றப் பிரதிநிதியாக இருந்தார்.

1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் வரவிருந்த சமயத்தில் செல்வநாயகத்திற்குப் பின்னர் காங்கேசன்துறைத் தொகுதி தமக்கே உரியது என்று நடராசர் எண்ணிக் கொண்டிருந்த போது அமிர்தலிங்கத்தை அங்கு வேட்பாளராக நிறுத்துவது பற்றி தமிழர் விடுதலைக் கூட்டணி ஆலோசிக்கத் தொடங்கியது.

பொட்டருக்கு இது பெரிய ஏமாற்றமாக இருந்தது. இதை எதிர்த்து ஒரு அறிக்கையை கூட்டணியின் தலைமைக்கு அனுப்பவும் பத்திரிகைகளுக்கு வெளியிடவும் வேண்டும் என்று அவர் யோசித்தார்.

ஒரு நாள் நண்பகல் நான் அலுவலகத்தில் இருந்து வீட்டுக்கு வந்த போது பொட்டர் வந்து எனக்காகக் காத்திருந்தார். பின்னர் தனது நிலைமையைச் சொல்லி அறிக்கை தயாரித்து வெளியிட வேண்டும் என்றும் இதற்கு எனது உதவி தேவை என்றும் சொன்னார்.

பின்னர் ஒரு அறிக்கையை தயாரித்தோம் சுமார் இரண்டு மணி நேரத்தின் பின் அறிக்கையைத் தயாரித்து முடித்ததும் அதன் பின் [illegible] நான் [illegible] சொன்னேன்.

கூட்டணியின் முக்கியஸ்தராக இருந்து கொண்டு பாராளுமன்ற ஆசனத்துக்காக கூட்டணியில் பிளவு ஏற்படுத்துகின்றீர்கள் என்ற குற்றச்சாட்டு வருமென்றும் உங்கள் மீது கூட்டணியில் மட்டுமல்ல இளைஞர்கள் மத்தியில் இருந்தும் வெறுப்பும் எதிர்ப்பும் கிளம்பும் என்றும் சொன்னேன். கவனமாகக் கேட்டு யோசித்தார்.

எதற்கும் இதை கதிரவேலுப்பிள்ளையிடம் காட்டி யோசியுங்கள் என்றும் சொன்னேன். இதை ஏற்றுக் கொண்டு கதிரவேலுப்பிள்ளையிடம் அவர் சென்றார்.

சில நாட்களுக்குப் பின்னர் மீண்டும் வந்தார். மீண்டும் ஒரு அறிக்கையைத் தயாரித்தோம்

அதே யோசனை. மீண்டும் கதிரவேலுப்பிள்ளையிடம் போனார்.

மூன்றாவது தடவையாகவும் வந்து மற்றுமொரு அறிக்கையைத் தயாரித்தோம். மீண்டும் கதிர வேலுப்பிள்ளையிடம் போனார்.

அவர் பெயரில் எந்த ஒரு அறிக்கையும் வெளிவரவில்லை. 1977ஆம் ஆண்டு தேர்தலில் காங்கேசன்துறையில் அமிர்தலிங்கத்தின் வெற்றிக்கு பொட்டர் நடராசா எந்தவிதத்திலும் இடையூறாக இருக்கவில்லை. அவரைச் சந்தித்த சமயங்களில் நான் அந்த அறிக்கை பற்றிக் கேட்டு ஞாபகப்படுத்தவில்லை.

கதிரவேலுப்பிள்ளை மரணமடைந்து அவரது பூதவுடல் யாழ் நகர மண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த போது நானும் அங்கு போனேன். என்னைக் கண்டதும் வாடாப்பா, வா நீயும் போய் மாலையைப் போட்டு உன் அஞ்சலியை செலுத்து என்று பொட்டர் நடராசா கூறியபோது அவரது தொண்டை அடைத்துக் கொண்டது.

பொட்டரின் அறிக்கை வெளிவராததற்கு கதிரவேலுப்பிள்ளையும் நானும் தான் காரணம் என்பது அவருக்குத் தெரியாதா?

⊙

# ஒரு மயானமும் காவல் தேவதைகளும்!



சூழலுமிச் சோகச் சூழலிடை
உனக்கென எதையெழுத?
ஆடிப் பாடிப் பின் அவலம் சுமந்து நீங்கிய
சோலை வனத்தைத் தீயின் நாவுகள் தின்று தீர்த்தன;
நெற்கதிர்கள் நிரம்பிச் சலசலத்த வயல் வெளிகளை
இரும்புச் சக்கரங்கள் ஊடுருவித் தகர்த்தன

மண்ணை மீட்டெடுக்கும்
போராட்டத்தில் மனிதர்கள் வீழ்த்தழிந்திட
பேய்கள் உலவிடும் பூமி மாத்திரம்
தரிசு தட்டிக் கிடக்கிறது.
இரத்தம் உறிஞ்சிய மண்ணில்
எத்தகைய வசந்தம் துளிர்ந்திடுமினி?

யாருமற்ற பாழடைந்த நகரத்தின் இடிபாடுகளினூடு
சூரியன் தயங்கித் தயங்கித் தலை நீட்டும்;
போர் தின்ற பூமியில் வீழ்ந்திடும் கிரணங்கள்
ஒரு தலைமுறையின் தலை விதியை ஊமையாய்ப் படிக்கும்
அந்திப் பொழுதில் பயமும் பீதியும் தொண்டைக்குழியை
நெரித்திட
பூதங்களின் காலடியோசை கேட்டுச் சூரியன் நடுநடுங்கி
மறையும்!

தளைகளை வெட்டியெறிந்திடப் புறப்பட்ட
விடுதலைப் பிரவாகம் உனை வீடு துறக்க வைத்தது;
நீ வாழ்ந் தேசம் இன்றுனை
எந்தப் பாடலைக் கொண்டும் வரவேற்கும் நிலையில்லை!

நானும் நீயுமின்றி
இந்தப் பரம்பரையே தோள்களில் சுமையழுந்திட
திசைக் கொவ்வொன்றாய்ச் சிதறுண்டு போனது.
கல்வியும் உழைப்பும் கனவுகளை மெய்ப்பித்திட
ஆனந்தம் பூரித்த நாட்கள் இனியில்லை;
பாழடைந்த படகுத் துறைகள்....
காடடர்ந்த பயிர் நிலங்கள்....
தலைகருகிய கற்பக தருக்கள்...
தரைமட்டமாகிப் போன எங்கள் குடிமனைகள்.... எல்லாம்
பேய்கள் சன்னதம் கொண்டாடிய கதையினைச் சொல்லும்.

அவசரப்பட்டு நீ
ஊரைக் காணும் ஆவலிலிங்கு வந்து விடாதே!
வதைத்து எரியூட்டப்பட்ட சோலை நிலத்தினூடு
அணிவகுத்துச் செல்லும் காவல் தேவதைகள்
அமைதியைப் பேணுகின்றன.
அந்த ஏகாந்தம் குடியிருக்கும் மயானத்தைக் காண
உனக்கென்னஆவல்? வந்து விடாதே!

பஹீமா ஜஹான்

26.09.2000

0

நன்றி - நூலகத்திட்டம்




# பொதுத் தேர்தலும் மலையக மக்களின் எதிர்பார்ப்புகளும்

– இடையன்

சகல அரசியல் குழுக்களும் தங்கள் இருப்பு தொடர்பான பிரச்சினையில் உள்ளன என்பதை அவர்களின் அண்மைய போக்குகள் சுட்டி நிற்கின்றன. பெரும்பாலும் மலையக மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் கட்சிகள் பொ.ஐ.மு, ஐ.தே.க. என பிரதான கட்சிகளிடம் சரணடைந்துள்ளன. அவர்கள் எத்தகைய விளக்கங்களையும் கொடுக்கலாம். ஆனால், அவை எந்தளவுதூரம் நியாயமானவை, பொறுத்தப்பாடு உள்ளவை என்பதை அக்கட்சிகளே தீர்மானிப்பது அரசியல் ரீதியான அறியாமையையே காட்டுகின்றது. மக்களின் கருத்துக்கள், முழுமையாக மறைக்கப்படுகின்றன.

நடைபெற்ற தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொ.ஐ.முவை ஆதரிக்க, பதுளை, கண்டி, வன்னி கொழும்பில் தனித்தும் மலையக மக்கள் முன்னணி ஐ.தே.கவை ஆதரித்த அதேவேளை ஏனைய கட்சிகளில் தொழிலாளர் தேசிய சங்கம் நுவரெலியா, கண்டி மாவட்டங்களில் தனித்தும் ஏனைய



மாவட்டங்களில் பொ.ஐ.முவையும் ஆதரித்தன. அனைத்து அமைப்புகளும் (ஒரு சில சிறு அமைப்புகள் தவிர) ஏதாவது ஒரு தேசிய கட்சியின் தயவை பெற தங்களை தேசிய கட்சிகளிடம் முழுமையாக இழந்த நிலையிலேயே அவை உள்ளன. இந்நிலையானது தன்னையும் அழித்து தான் சார்ந்த மக்களையும் அழிவு பாதைக்கு இட்டுசெல்லும் என்பது மட்டும் உண்மையே!

இதேவேளை கடந்தகால நாடாளுமன்ற தேர்தல்கள் தமிழ் மக்களுக்கு குறிப்பாக மலையகத் தமிழர்களுக்கு கற்றுத்தந்த பாடங்கள் இவ்விடத்தில் நினைவு கூறல் பொருத்தமானதாகும். 1947ஆம் ஆண்டு ஏழு மலையக பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் அங்கத்துவம் பெற்றனர்.



1970 - 1977வரை அஸிஸ், நியமான உறுப்பினராகவும் பின் 1977 - 1988வரை தொண்டமான் மட்டுமே நாடாளுமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும் இருந்தார். 1989 - 1994வரை நான்கு உறுப்பினர்களும், 1994 -2000வரையான காலப்பகுதியில் இ.தொ.கா சார்பில் ஒன்பது உறுப்பினர்களும், ம.ம.மு. சார்பில் ஒருவருமாக மொத்தம் பத்து உறுப்பினர்கள் பிரதிநிதித்துவம் பெற்றனர்.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் பொ.ஐ.முவுடன் இணைந்து போட்டியிட்ட இ.தொ.கா.மூன்று பிரதிநிதித்துவத்தைப் பெற்றுள்ள அதேவேளை ஐ.தே.க சார்பில் போட்டியிட்ட மூன்று தமிழ் வேட்பாளர்களில் இருவர் வெற்றி பெற்றுள்ளனர். இவர்கள் மூவரும் மூன்று வெவ்வேறு தொழிற்சங்கங்களைச் சார்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

உறுப்பினர்களின் தொகை காலத்துக்கு காலம் மாறிகொண்டே இருந்தன. ஆனால், மக்களின் சோதனைகளும், வேதனைகளும் அதிகரித்தவண்ணமே உள்ளன. சுதந்திர இலங்கையின் முதலாவது நாடாளுமன்றத்தில் தான் மலையகத் தமிழரின் பிரஜா உரிமையும், வாக்குரிமையும் சிங்கள தேசியவாதிகளால் பறிக்கப்பட்டன. மேலும் மலையக மக்களில் பெரும்பாலானோர் தோட்டத் தொழிலாளர்களே. இவர்கள் இன்னும் நாட்கூலிகளாகவே உள்ளனர். தேர்தலில் அதிக ஆசனங்களை பெறுவதன் மூலம் அனைத்து பிரச்சினைகளும் தீர்ந்துவிடும் என்பது ஒரு கற்பிதமே.

மலையக மக்களின் அரசியல், பொருளாதாரம், கலாசாரம் என அனைத்து மட்டங்களிலும் இன்றும் பல பிரச்சினைகளை அனுபவிப்பதுடன் பல புறக்கணிப்புகளுக்கும் முகம் கொடுக்கின்றார்கள். அவர்களின் பிரஜாவுரிமை பிரச்சினை இன்றுவரை முழுமையாக தீர்ந்தபாடில்லை. பொருளாதார, ரீதியாக இன்றும் அடக்கப்பட்ட ஒரு கட்டமைப்பிலிருந்து மீளமுடியாதுள்ளனர். திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலம் வாழ்வியல் தொடர்கள் அழிக்கப்பட்டுகின்றன. அடிப்படை வசதிகளற்ற வாழ்வியல் முறைகள், மொழி, மத மாற்றங்களின் மூலமான கலாசார பின்னடைவுகள், கல்வி துறையில் முன்னேற்றம் குறைந்த நிலைமை, நிருவாக கெடுபிடிகள், சுயமொழியில் கருமங்கள் ஆற்ற இயலாமை எல்லாவற்றிற்கும் மேலாக உறுதியான தலைமைத்துவம் இல்லாமை என இன்னோரன்ன பிரச்சினைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

எல்லாவற்றிற்கும் மேலாக தாமே கையொப்பமிட்டு முதலாளிகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களையும், அறியாத மக்களை முறையற்ற விதத்தில் வழிநடத்திய வேலை நிறுத்தமும் தேர்தல் காலங்களிலேயே நடந்தேறியது. அரசாங்க ஊழியர்கள் மாதாந்தம் ரூபா 3000/- கோரி போராட்டம் நடாத்தும்போது இ.தொ.காவோ ரூபா 400/- கோரியே போராட்டம் நடத்தியது. இது அரசாங்க ஊழியர்களுடன் ஒப்பிடும்போது 13சதவீத உயர்வைகோரி நடத்திய போராட்டமாகும். இது மலையக தலைமைகளின் வங்குரோத்து நிலையை காட்டுவதுடன் இ.தொ.காவினதும் அதன் தலைமையினதும் இயலாமையையும் அதன் செயற்பாடானது தேர்தலை மையமாக கொண்ட ஒரு ஏமாற்று நடவடிக்கை என்பதும் புலனாகிறது.

இந்த அடிப்படையில் நோக்கும் போது மலையக மக்கள் கடந்த காலங்களில் நாடாளுமன்ற ஜனநாயகத்தினூடாக பெரிதாக ஒன்றும் சாதித்துவிடவோ அல்லது பெற்றுவிடவோ இல்லை. அப்படி இல்லை என்பார்களாயின் அது ஒரு அரசியல் அறியாமையின் வெளிப்பாடே ஆகும்.

இத்தேர்தலில் மலையக மக்களின் பிரதிநிதித்துவம் வெகுவாகக் குறைந்துள்ளது. வாக்குகள் பல கட்சிகளுக்கும் சுயேட்சைக் குழுக்களுக்கும் சிதறிச் சென்றதே இதற்கு பிரதான காரணமாகும். உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைவடைவதையிட்டு மலையக மக்கள் ஒன்றும் கவலைக்கொள்ள தேவையில்லை. ஏனெனில், கடந்த நாடாளுமன்றங்களினூடாக மலையக மக்களின் எந்த பிரச்சினைக்கும் ஒரு நிரந்தர தீர்வை தந்துவிடவில்லை. அதற்காக எந்த மலையக நாடாளுமன்ற உறுப்பினரும் முழுமையாக உழைக்கவில்லை (வெற்றுப்பேச்சுக்களை தவிர) தமக்கு கிடைத்த சுகபோக வாழ்க்கையில் எல்லாவற்றையும் மறந்தார்களே தவிர மக்கள் பிரச்சினைகளையிட்டு பெரிதாக ஒன்றும் செய்துவிடவில்லை. எவ்வித சந்தேகமுமின்றி இந்நிலையே எதிர்காலத்திலும் தொடரும் என்பது உறுதி. பேரினவாத கட்சிகளின் அடிவருடிகளாக சுகபோகங்களை அனுபவித்துக்கொண்டு வெறும் சலுகைகளை உரிமைகள் என வாதிக்கவும் தயங்கமாட்டார்கள்.

சுதந்திர இலங்கையின் மலையக மக்கள் பிரச்சினைகளில் ஆரம்பமே நாடாளுமன்றம் தான். சுதந்திர இலங்கையின் முதலாவது நாடாளுமன்றம் தான் மலையக மக்களின் பிரஜாவுரிமையை பறித்து அரசியல் அனாதைகளாக மாற்றியது. எனவே அந்த நாடாளுமன்றத்தினூடாக மலையக சமூகத்தின் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு கிட்டுமென நம்புவது கண் இருந்தும் குருடராய் இருப்பதற்கு சமன்.

இந்நிலையிலேயே இம் மக்கள் மாற்று நடவடிக்கைகளையிட்டு தங்கள் கவனத்தை செலுத்துதல் பொருத்தமானதாகும். இதுவரை எந்த ஜனநாயக முறையினூடாக பெரும் நம்பிக்கை வைத்து பிரதிநிதிகளை தெரிவு செய்தார்களோ அதில் இன்று நம்பிக்கை இழந்து விட்டார்கள். தொடர்ந்தும் அதில் நம்பிக்கை வைப்பதிலுள்ள பாதகமான நிலைமையை உணர வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். மலையக மக்கள் அரசியல் பொருளாதார, கலாசார ரீதியாக தமது இருப்பை நிலை நிறுத்த வேண்டிய கட்டாயம் இன்றைய பிரதான தேவையாகும். அதற்கு பல மாற்று வழிகள் உள்ளன. இது வெறுமனே ஆயுதபோராட்ட வடிவம் என கொள்ளப்படின் அது அறியாமையே.

புதிய சிந்தனைகள் உருவாக்கப்பட வேண்டும். மலையகத் தமிழர்கள் அரசியல் ரீதியாக விழிப்புணர்வு பெற வேண்டும். அதன் பிறகு எத்தகைய போராட்ட வடிவம் தேவை என்பதை அவர்களே தீர்மானிக்க வேண்டும். அதுவரை இன்றைய சாக்கடை நாடாளுமன்ற அரசியலுக்கு தங்கள் எதிர்ப்பை காட்ட வேண்டும். தங்கள் பிரச்சினைகளை தீர்க்காத ஏன் ஒட்டுமொத்த பிரச்சினைகளின் மூலமே அதுவாக இருக்கும் போது ஏன் மக்கள் அதையும் அதை நம்பும் அரசியல் சக்திகளையும் ஆதரிக்க வேண்டும். ஜனநாயக ரீதியாக தங்கள் எதிர்ப்பைக் காட்ட வேண்டும்.

இன்று மலையகத்தில் பொருத்தமான மாற்று சக்தி ஒன்று இல்லாத நிலையில் அதன் தேவைப்பாட்டை உணர்தல் நன்று.

## தேர்தலின் பின்னான.......

சக்தியையும் இத்தேர்தலுக்காக பயன்படுத்தியிருக்கவில்லை. அதற்குத் தேவையுமில்லை என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். இனி நோர்வேயுடன் பேச்சுவார்த்தை இல்லை என்றும், போரொன்றே தீர்வு என்றும், தீர்வுப்பொதி சரிவராது என்றும், தமிழர்களுக்கு தீர்வு வேண்டுமென்றால் முதலில் மகாசங்கத்தினருடன் பேசி முடிவுக்கு வாருங்கள் என்றெல்லாம் தேர்தல் காலத்தில் ஆளுங்கட்சி பேச வேண்டிய நிலைக்குள்ளானது சிங்கள வீரவிதானவின் வெற்றி என்பதை என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும். ஏனைய சிங்களக் கட்சிகளும் கூட இந்த வட்டத்தை விட்டு வெளியே போகவில்லை.

அதிக கூடிய வாக்குகளைப் பெற்ற சிஹல உறுமயவின் தலைவர் எஸ்.எல்.குணசேகர கட்சியிலிருந்து விலகினார். திலக் கருணாரத்ன ஏலவே ஒரு பாராளுமன்ற கதிரைச்சுகம் கண்ட ஒரு சராசரி பேரினவாத அரசியல் பேசி வெல்லும் சராசரி அரசியல்வாதி. பாராளுமன்ற உறுப்புரிமையை இரண்டு வருட சுழற்சி முறையில் எஸ்.எல்.குணசேகரவும், திலக் கருணாரத்னவும், பின்னர் சம்பிக்க ரணவக்கவும் வகிப்பதாக இருந்த போதும், சம்பிக்க இதிலிருந்து வாபஸ் வாங்கிக் கொண்டார். ஆனால் முன்னர் ஒப்புக் கொண்ட திலக் கருணாரத்ன பின்னர் விடவில்லை. அதற்கு காரணமாக எஸ்எல்.குணசேகர ஒரு பௌத்தர் அல்ல என்றும் இதனால் மக்கள் மத்தியில் அமைப்பு எடுபடாமல் போகலாம் என்றும் கூறி அந்த வாய்ப்பைப் பெற முயற்சித்த போது மத்திய குழுவுக்குள் நடந்த சண்டை இறுதியாக 15ஆம் திகதி முடிவுக்கு வந்தது. பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடினோம். ஆனால் கட்சிக்குள்ளேயே இப்படிப்பட்ட பயங்கரவாதம் இருக்கிறதென்பதை இப்போது தான் உணர்ந்துகொண்டேன் என்று எஸ்.எல்.-குணசேகர கூறும் அளவுக்கு நிலைமை முற்றியது.

சிங்கள வீரவிதானவுக்கு முதலில் கணக்குத் தீர்க்க வேண்டிய சக்தி தமிழர்கள், முஸ்லிம்கள், அதற்காக இனத்துவம் தவிர்ந்த வர்க்கம், சாதி, பால், மதம் போன்றனவற்றை முதன்மைப்படுத்தாது. அதற்கு படிநிலை வரிசை ஒன்று இருக்கிறது. அதன் பின்னர் தான் சிங்கள கத்தோலிக்கர்களை அகற்றி, கொவிகம அல்லாதவர்களை கழற்றி, சுரண்டும் வர்க்க ஆண்களிடம் அதிகாரத்துவம் படிப்படியாகப் போய்ச் சேரும். ஆனால் இத்தனை வேகமாக முன்னாள் ஹெல உறுமய கட்சியின் தலைவர் திலக் கருணாரத்னவின் மூலம் அதன் குணாம்சம் வெளிப்பட்டதானது சிங்கள, சுரண்டும் வர்க்க, கொவிகம, ஆணாதிக்க சாரார் அல்லாதவர்களிடம் நம்பகத்தன்மையை இழக்க நேரிடுமா அல்லது சிங்கள வீரவிதானவின் புதிய தந்திரோபாய அணுகுமுறைகளால் அது வெற்றிகொள்ளப்படுமா என்பது பொறுத்திருந்து பார்க்கப்பட வேண்டியவை.

ஆக மொத்தத்தில் சிஹல உறுமய எனும் கட்சிக்கு வெற்றி கிடைத்ததா இல்லையா என்பதை விட அதன் சித்தாந்தத்துக்கு வெற்றி கிடைத்ததா இல்லையா என்பதையே நாங்கள் பார்க்க வேண்டும். இந்த விழிப்பு இருந்தால் தான் நாங்களும் சரியான அணுகுமுறைகளைக் கையாள முடியும்.

ஆரம்பத்தில் சிங்கள வீரவிதானவுக்கு svv.org எனும் இணையத்தளம் இருந்தது. பின்னர் இதனை அவர்கள் sinhale.org எனும் பெயரில் மாற்றிக் கொண்டார்கள். பல்வேறு பேரினவாத இணையத்தளத்திற்கும் இங்கிருந்து இணைப்பைக் கொடுத்தார்கள். சமீபத்தில் சிஹல உறுமய கட்சிக்கென்று இரு இணையத்தளங்களை,

(<http://www.sihalaurumaya.S5.com>, http://www.sihalaurumaya.org) உருவாக்கியிருக்கிறார்கள்.

நன்றி - நூலகத்திட்டம்



**எழுபதுகளில் தொடங்கி எண்பத்து மூன்று ஜீலைக் கலவரத்தின் பின் புதிய பரிமாணத்தை எடுத்த தமிழ்த் தேசிய விடுதலை போராட்டம் பல்லாயிரக் கணக்கில் ஆயுதமேத்திய இளைஞர்களை உள்வாங்கிக் கொண்டது. தேசிய விடுதலை பற்றிய பிரக்ஞை பூர்வமான உணர்வுக்கு மேலாக அவர்களிடம் உயிர்த்துடிப்பான செயல் வேகமும் உடனடித் தீர்வுக்கான நாட்டமும் வலுவுற்றிருந்தன.**


**தமது கையாலாகாத்தனத்தால் போராட்டக் களத்தில் வீர வசனங்கள் மட்டும் எஞ்சி நிற்க ஓடித் தப்பிய மிதவாதத் தலைமைகளிடமிருந்து இளஞ்சந்ததி விடுதலைப் போராட்டத்துக்கான பொறுப்பை தன் கையில் எடுத்துக் கொண்டது. அவர்களின் உணர்வும் போராட்டமும் அவர்கள் வழி நடத்தப்பட்ட விதமும் இன்று தேசிய விடுதலைப் போராட்டத்தை கொண்டு வந்து நிறுத்தியுள்ள இடம் என்ன என்பது எம்மனைவருக்கும் தெரியும்.**

**தமிழ் மக்களின் அரசியல் உரிமைக் கோரிக்கைகளுக்கான போராட்டம் சரியான திசைவழியில் வலுவுடன் முன்னெடுக்கப்பட வேண்டுமானால் கடந்த இரண்டு தசாப்தகால வரலாறும் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும். மறுபுறத்தில் விடுதலைப் போராட்ட வரலாறு என்பது தனி ஒரு மனிதராலோ அல்லது தனி ஒரு விடுதலை இயக்கத்தினாலோ எழுதப்பட்டு விட முடியாது. அதற்கு பல்வேறு பரிமாணங்கள் உண்டு. அவ்வாறான அனுபவப் பதிவுகளை மேற்கொள்ள சரிநிகர் என்றும் களமாக இருக்கும். விடுதலைப் போராட்ட அனுபவங்கள் குறித்து இதுவரை செழியன், சமரன் ஆகியோர் எழுதிய சிறுநூல்கள் தான் இதுவரை வெளிவந்திருக்கின்றன.**

**இவ்வகையில் இப்போராட்டத்தில் ஈர்க்கப்பட்ட ஒரு போராளி தனது போராட்ட கால அனுபவங்களை சரிநிகர் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறார். இவர் ரெலோ இயக்கத்தில் இருந்தவரும் இயக்கத்துக்குள் நடந்த உட்கட்சிப் போராட்டங்களில் ஈடுபட்டவருமாவர். இப்பொழுது கனடாவில் புலம்பெயர்ந்து வாழ்கிறார். இதில் வரும் குறிப்புகள் தகவல்கள் கருத்துகள் அனைத்தும் அவருக்குச் சொந்தமானவை.**

**வாசகர்கள் இத்தொடர் பற்றிய அபிப்பிராயங்களை எழுதுமாறு கேட்கப்படுகிறார்கள்.** **ஆ-ர்**

# ஒரு தமிழீழப் போராளியின் கதை - 1



*பாடசாலையில் பயிலும் போதே நான் அரசியலில் ஈடுபாடு உடையவனாக இருந்தேன். எனது குடும்பத்தின் ஈடுபாடும் அதற்கு முக்கிய காரணமாக இருந்தது. எனது அப்பா அரசாங்கத்தில் முக்கிய பதவி வகித்தாலும் தமிழரசுக் கட்சியிலும் எனது கிராமத்திலுள்ள சுருட்டுத் தொழிலாளர் சங்கம் மற்றும் தொழிற் சங்க வேலைகளிலும் ஈடுபட்டிருந்தார். அவருடைய மகன் என்ற ரீதியில் சிறுவயதிலிருந்தே அரசியல் நிகழ்ச்சிகளில் ஈடுபடுவது எனது குடும்பத்தில் குற்றமாகக் கணிக்கப்படவில்லை.*

*அப்பா இறந்த பின் எனது சகோதரியின் பங்களிப்பு எனது தொகுதி எம்.பியின் கீழ் வேலை செய்வதாக இருந்தது. 77 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழர் கூட்டணிக்குச் சார்பாக எமது வீடு எமது தொகுதியின் காரியாலயம் போல் செயற்பட்டது. இந்த வேளையில் தான் தமிழர் கூட்டணிக்குச் சார்பாக வேலை செய்த இளைஞர்களின் அறிமுகம் எனக்கு ஏற்பட்டது. பாடசாலை முடிந்தவுடன் வீட்டிற்கு வந்து அந்த இளைஞர்களுடன் உதய சூரியன் போஸ்டரிலிருந்து கூட்டங்களுக்கு மரம் நட்டு 'வயிற்' போடுவதிலிருந்து எனது வேலைகள் ஆரம்பமாயின. இந்த வேலைகளில் ஈடுபடும் போது தான் எனக்குச் சுப்பிரமணியம் பரமேஸ்வரன் என்ற இளைஞருடன் உறவுகள் ஆரம்பமாகின்றன. நான் வயதில் சிறுவனாக இருந்தபடியால் அவர் ஈடுபடும் பொது வேலைகளில் நான் பங்கேற்கக் கூடியதாக இருந்தது. அவர் ஈடுபடும் இரகசிய வேலைகளில் என்னைத் தவிர்த்தார். அதற்கு அவர் கூறிய காரணம் எனக்குச் சிறுவயது. மற்றும் கல்வியை முடித்த பின்பே நான் அவர்களுடன் வரமுடியும் என்பதாகும்.*

*77 தேர்தல் முடிந்த பின் நடந்த இனப்படுகொலையின் விளைவாக மீண்டும் உணர்வு ஊட்டப்பட்டவர்களாக அகதிகளாகிக் கொண்டிருக்கும் எமது மக்களுக்காக உடுப்பு, உணவு, பணம் போன்றவற்றைச் சேகரிக்கத் தொடங்கினோம். இப்போதும் எமது வீடு ஒரு நடைமுறைக் காரியாலயமாக இரவு பகலாகச் செயற்பட்டது. இந்த வேளையில் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருந்தாலும் பொது வீதிகளைத் தவிர்த்து ஒழுங்கைகள் வேலிகள் மூலமாக அகதிகளுக்கு உணவு, உடை சேகரிப்புத் தொடர்ந்தது.*

*எமது தொகுதியில் உள்ள ஆசிரிய பயிற்சிப் பாடசாலை ஓர் அகதி முகாமாக மாறியவுடன் எமது வேலைகள் மும்முரமாகின. 77இல் எமது பகுதிகளில் பொலிஸ் நிலையம் முழு நேரமாக இயங்கியது. சிறிலங்கா அரசின் முழு பொலிஸாகவும் இருந்தபடியால் பரமேஸ்வரன் போன்றோர்களின் நடவடிக்கைகள் கண்காணிப்புக்குள் இருந்தன. பரமேஸ்வரன் தனது வீட்டில் படுப்பதில்லை போன்ற வேலை முறையானது அவரைப் பின்பற்றி வருகின்ற எனக்கும் நடைமுறையானது. நானும் நிலைமை சரியாகும் வரையில் வீட்டில் படுப்பதில்லை.*

## *மானிப்பாய் வங்கிக் கொள்ளையும் பொலிஸ் தேடுதலும்*

*78ஆம் ஆண்டளவில் நடைபெற்ற மானிப்பாய் வங்கிக் கொள்ளை சம்பந்தமாக நான் தெரிந்து கொண்ட விடயங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டேன். (மற்றவர்கள் என்னும் போது நண்பர்களும் உறவினர்களும் என்னுடைய சாதாரண வாழ்வில் கதைக்கின்ற மனிதர்களும்) தமிழ் மக்களுக்கே உரித்தான இயக்கங்கள் சம்பந்தமாக அவர்கள் கதைக்கின்ற பதங்களையே நானும் பாவித்தேன். உதாரணமாக, 'எங்கடை ஆக்கள்', 'நம்முடைய கோஸ்டி' தான் செய்தவர்கள் என்றும் 'மணியான அட்டாக்'. ஏதோ எனக்குச் சொல்லிப் போட்டுத் தான் செய்தவர்கள் போல் நானும் அதில் பங்கேற்றவன் போல் கதைப்பது. இவ்வாறு தான் என் சம்பாசனையும் இருந்தது.*

*இது நடந்து இரண்டு வாரங்களின் பின் ஒருநாள் நான் பாடசாலையில் படித்துக் கொண்டிருக்கும் போது காலை 9.30 மணியளவில் ஒரு அழைப்பு வந்தது. என்னைக் கூட்டிக் கொண்டு போவதற்கு எனது சகோதரி வந்திருப்பதாகவும் எனது தாத்தாவுக்கு உடல்நிலை மோசமாகி விட்டது எனவும் கூறினார்கள். உடனடியாக எனது சகோதரியுடன் புறப்பட்டுப் போகும்போது தான் உண்மையான காரணத்தை சொன்னார்கள். காரணம்: என்னைத் தேடி பொலிஸ் வீட்டிற்கு வந்ததாகவும் கைது செய்து போவதற்கு வந்தவர்கள் என்றும் தெரியப்படுத்தினார்கள்.*

*எனது ஊரவர் தான் எமது வீடு தேடிச் சென்ற பொலிஸ் நபர். அவரோ நான் வீட்டில் இல்லாததால் அம்மாவிடம் விடயத்தைச் சொல்லி விட்டு பாடசாலையில் நான் இருப்பேன் என்று தெரிந்தும் அது சம்பந்தமாக மேற்கொண்டு முயற்சிகள் செய்யாமல் வீட்டில் ஒருவரும் இல்லை என்று தான் அதிகாரிகளுக்குச் சொல்வதாகக் கூறிவிட்டுச் சென்றார். இதே நேரம் எனது சகோதரி எமது தொகுதியின் எம்.பியின் கீழ் வேலை செய்ததால் இந்தச் செய்தி உடனடியாகப் பரவி என்னைக் காப்பாற்றுவதற்கான முயற்சியில் ஈடுபட்டார்.*

*இந்தச் செய்தி பரமேஸ்வரன் மற்றும் அவரின் நண்பர்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டது. ஏன் என்னைத் தேடுகின்றார்கள் என்பது தெரியாததால் எல்லோருமே பதட்டப்பட்டார்கள். எம்.பி. அப்போது கொழும்பில் நின்றார். தற்போது என்னைப் பாதுகாப்பாக வைப்பது பின்னர் ஒரு வழக்கறிஞர் மூலம் என்னை உயர் அதிகாரிகளிடம் சரண் அடையச் செய்வது என்பது எனது சகோதரி எடுத்த முடிவு. அந்த முடிவின்படி நான் இரு நாட்கள் தலைமறைவானேன். இந்த வேளையில் பரமேஸ்வரன் உட்பட மற்றையவர்களின் பயிற்சி எனக்கும் அளிக்கப்பட்டது. பொலிஸ் எவ்வாறு சித்திரவதை செய்யும், சித்திரவதை செய்தாலும் குறைந்த பட்சம் பரமேஸ்வரன் போன்றவர்கள் சம்பந்தமான இரகசியங்களை எப்படிப் பாதுகாப்பது போன்றவையே பயிற்சியின் அம்சங்கள்.*

*அவர்களைப் பொறுத்தவரை அவர்களின் வாழ்க்கை எனது கைகளில் தங்கி இருப்பது போன்றும் இதில் நான் எவ்வாறு விடயங்களைக் கையாள்வது என்பதைப் பொறுத்துத் தான் அவர்கள் என்னைத் தங்களுடன் சேர்த்துக் கொள்வதா இல்லையா என்று முடிவு எடுப்போம் எனவும் கூறினார்கள்.*

*யாழ் மாவட்ட உதவிப் பொலிஸ் அதிகாரியைச் சந்தித்து என்னை அங்குக் கூட்டிச் செல்வதற்கான ஏற்பாடுகள் ஒரு வழக்கறிஞர் மூலமாகச் செய்யப்பட்டது. அந்த வழக்கறிஞர் வீட்டிலும் ஒருநாள் தங்கியிருந்து ஏ.எஸ்.பி யை சந்திப்பதற்காக யாழ்ப்பாண பொலிஸ் தலைமையகம் சென்றேன். முதலில் வழக்கறிஞர் முன்னிலையிலும், பின்னர் தனியாகவும் 30 நிமிடங்களுக்கு விசாரணை நடைபெற்றது. விசாரணை முக்கியமாக மானிப்பாய் வங்கிக் கொள்ளை சம்பந்தமாகவும் அது பற்றி எனக்கு தெரிந்தவை தொடர்பாகவும் இருந்தது. நான் தெரிந்தவற்றைச் சொன்னேன். அதற்கு அதிகாரி எனக்கு எவ்வாறு இந்த விடயம் தெரியும் என்று கேட்டார். நான் ஈழநாடு, வீரகேசரி பத்திரிகைகள் மூலம் தெரிந்து கொண்டேன் என்று கூறியபோது அவர் சிரித்து விட்டு இனிமேல் வீதிகளில் நின்று ஆட்களுடன் கதைக்க வேண்டாம் என்றும் என்னைக் கல்வியில் கவனம் செலுத்துமாறும் கூறிவிட்டு எனது வழக்கறிஞரைக் கூப்பிட்டு தங்களுக்குக் கிடைக்கப்பெற்ற தகவலில் தவறு நடந்துள்ளது என்று என்னைக் கூட்டிக் கொண்டு போகுமாறு கூறினார்.*

## *போராளி அந்தஸ்து சுமத்தப்பட்டது*

*விசாரணையின் பின் நான் எனது கிராமத்திற்கு வந்தபோது என்னைச் சுற்றியுள்ளவர்களால் கிராமத்தில் என்னைப் பற்றிப் பலராலும் பரவலாகப் பேசப்பட்டது. ஒரு சிலர் என்னுடன் தொடர்புகளைக் குறைத்துக் கொண்டனர். ஒரு சிலர் என்னுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார்கள். எனது கல்லூரி மட்டத்திலும் பலர் தாங்களாகவே பல கதைகளை உருவாக்கி என்னைப் பற்றிய ஒரு மாயையை வளர்த்து விட்டார்கள். இதன் பிரதிபலனாக எவரும் என்னுடன் பிரச்சினைப் படுவதில்லை. என்னை விட வயதில் மூத்தவர்களும் என்னை மரியாதையாக நடத்தினார்கள். என்னைப் பற்றி வெளியான கதைகளில் ஒன்று எனக்கு வெடிகுண்டுகள் தயாரிக்கத் தெரியும் என்பதும், இதனால் தான் என்னைப் பிடித்தார்கள் என்பதுமாகும். இதில் வேடிக்கை என்னவென்றால் எனக்கு விஞ்ஞானம் ஓடாத பாடம். அதிலும் இரசாயனவியலில் விருப்பமேயில்லை என்பதுதான்.*

*78ஆம் ஆண்டு காலகட்டத்தில் எனது கல்லூரியில் எனது வகுப்பில் சேர்ந்த ஒரு மாணவனைப் பற்றி கட்டாயம் சொல்ல வேண்டும். அவர் தான் ரமேஸ் என்று அழைக்கப்பட்ட அற்புதராஜா நடராஜா. ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினராகவும் தினமுரசு ஆசிரியராகவும் இருந்தவர். 1999இல் கொல்லப்பட்டவர்.*

என்னைப் பற்றி வெளியான கதைகளில் ஒன்று எனக்கு வெடிகுண்டுகள் தயாரிக்கத் தெரியும் என்பதும், இதனால் தான் என்னைப் பிடித்தார்கள் என்பதுமாகும். இதில் வேடிக்கை என்னவென்றால் எனக்கு விஞ்ஞானம் ஓடாத பாடம். அதிலும் இரசாயனவியலில் விருப்பமேயில்லை என்பதுதான்.

**தொடரும்**

நன்றி - நூலகத்திட்டம்



# அக்கரைப்பற்று பள்ளிவாசலுள் பொலிஸ் வெறியாட்டம்!

### பொலிஸாரின் அட்டகாசம் பொதுமக்கள் காயம்

கடந்த 13.10.2000 வெள்ளியன்று அக்கரைப்பற்று பட்டினப்பள்ளிவாசலில் நடைபெற்ற சம்பவங்களால் முழு ஊர் மக்களும் நிலை குலைந்து போயுள்ளனர். வெளி உலகின் தொடர்புகள் முற்றாகத் துண்டிக்கப்பட்ட ஒரு நிலையில் அப்பாவிப் பொதுமக்கள் நிர்க்கதிக்குள்ளாக்கப்பட்டே இவ்வராஜகம் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. அதிகாரத்தின் கொடுங்கரங்களுக்கு முன்னே நியாயங்களும் மனச்சாட்சியின் குரல்வளைகளும் நசுக்கப்பட்டுக் கொல்லப்பட்டன. என்ன செய்வது என்று எதுவுமே புரியாத, குழப்பகரமான மனோநிலையில் ஊரில் மௌனம் நிலவுகிறது. இந்தச் சம்பவங்களின் பின்னணியைத் தெளிவுபடுத்துவதன் மூலமே அது பற்றிய உண்மையான கருத்தை அறிய முடியும்.

### அக்கரைப்பற்றின் கடந்தகால அரசியல் பின்னணி

அக்கரைப்பற்றில் கடந்த காலங்களில் கட்சி சார்பானவர்களிடையே முறுகல் நிலையும் தாக்குதல் சம்பவங்களும் இடம்பெற்று வந்தன. இதற்கு முந்திய தேர்தல் காலங்களில் பல சம்பவங்கள் நடந்தேறின. அவற்றில் ஐ.தே.க, முஸ்லிம் காங்கிரஸ் கட்சிகளின் தொண்டர்களுக்குப் பங்கிருந்ததும் வெளிப்படையான உண்மையாகும். முந்திய தேர்தல் காலகட்டங்களில் நடைபெற்ற சம்பவங்களில் ஐ.தே.கவினரின் கையே ஓங்கியிருந்தது. ஆனால், அண்மையில் நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் அவர்கள் அடக்கி வாசிக்க, முஸ்லிம் காங்கிரஸினர் தான் பல்வேறு சம்பவங்களின் கதாநாயகர்களாக மாறினர். நடுநிலையான ஒரு பார்வையாளரின் நோக்கில் இந்த இரு கட்சியைச் சார்ந்தவர்களுள் யாருமே உத்தமர்களுமில்லை, யாரும் யாருக்கும் குறைந்தவர்களுமில்லை.

முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபக உறுப்பினர்களுள் ஒருவரும் அக்கட்சியின் முன்னாள் தவிசாளரும் தற்போதைய ஐ.தே.க. பிரமுகருமான ஜனாப் எம்.எச்.சேகு இஸ்ஸத்தீனையும், முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தவிசாளரும் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் அம்பாரை மாவட்ட இணைப்பாளருமான ஜனாப் ஏ.எல்.அதாவுல்லாஹ்வையும் சுற்றியே இவ்வூரின் அரசியல் செயற்பாடுகள் நடந்து வருகின்றன. இவர்கள் இருவருமே அண்மையில் கலைக்கப்பட்ட 10வது பாராளுமன்றத்தில் மிகச் சொற்ப காலம் பாராளுமன்ற உறுப்பினர்களாகப் பதவி வகித்தவர்கள்.

மிக நீண்ட காலமாக பாராளுமன்ற உறுப்பினர்கள் யாருமே இல்லாதிருந்த அக்கரைப்பற்றில் இருகட்சியிலும் எம்.பி.கிடைத்ததும் மகிழ்ச்சிப் பிரவாகமும் ஆரவாரமும் கட்சிகளிடையேயான பலப்பரீட்சையும் வெளிப்படத் தொடங்கின. இது சுமுகமான ஒரு சூழ்நிலையை இல்லாமல் செய்ததோடு, இரு தரப்பினர் மத்தியிலும் முறுகல் நிலையைத் தோற்றுவித்தது.


### 13.10.2000 அன்று சம்பவம் நிகழ்ந்ததற்கான காரணங்கள்

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் சேகு இஸ்ஸத்தீனின் ஆதரவாளர்கள் ஒப்பீட்டளவில் மெத்தனமாக நடந்து கொண்டனர். ஆனால், எதிர்த்தரப்பில் குத்தகைக்கு அமர்த்தப்பட்ட குண்டர்கள் சிலரின் அட்டகாசம் எல்லை மீறுவதாகவும் சகிக்க முடியாதவையாகவும் மாறத் தொடங்கின. ஆட்சியின் பங்காளர்களாக இருந்ததால் இக்குண்டர்களுக்கு வாகனங்களும், பணமும், சாராயமும் மலிவாகக் கிடைக்கத் தொடங்கின. அந்த நன்றிக் கடனை அவர்கள் செவ்வனே செய்யத் தொடங்கினர்.

தமிழ்ப் படங்களில் வரும் காட்சிகள் போல் இக் காடையர்கள், எதிரணி ஆதரவாளர்களின் வீடுகளில் நுழைந்து அவர்களைத் தாக்குவதிலும் உடைமைகளை அடித்து நொறுக்குவதிலும் ஈடுபடத் தொடங்கினர். அதிகார சக்திகளின் செல்லப் பிள்ளைகளாக இவர்கள் இருந்ததால் இவர்களுக்கு கொம்பு முளைத்திருந்தது. யாரும் இவர்களைத் தடுக்க முடியாத அனாதரவான நிலை ஊரில் நிலவியது. கண்டியில் அனுருத்த ரத்வத்தையின் மகனின் கும்பல் எவ்வாறு நடந்து கொண்டதோ, ஏறத்தாழ அதையொத்த ஒரு நிலை தான் இங்கு நிலவியது. இவர்கள் இரவுகளில் தோன்றி, பகல்களில் காணாமல் போயினர்.

### 13.10.2000 அன்று நிகழ்ந்தவை

13.10.2000 வெள்ளியன்று அக்கரைப்பற்று ஐந்தாம் குறிச்சியைச் சேர்ந்த சலாம் டெய்லரின் வீட்டினுள் இக் குண்டர்கள் நுழைந்து வீட்டு மதிலைத் தூள்தூளாக உடைத்துள்ளனர். ஜன்னல்கள் கண்ணாடிகளை அடித்து நொறுக்கினர். வீட்டினுள் நுழைந்து அங்கிருந்த பொருட்களையும் தூள் தூளாக்கியுள்ளனர். வந்த அனைவருமே மது போதையில் இருந்துள்ளனர். பெண்களையும் தாக்கி, அவரது மகளின் தலைமுடியையும் வெட்டியுள்ளனர்.



ஏற்கெனவே இவ்வாறான சம்பவங்கள் நடைபெற்றதாயினும் இந்த சம்பவம் மிகப் பாரதூரமானதாக மாறி, ஊர் மக்களின் ஆத்திரத்தைத் தூண்டியது. ஏனெனில் இவர்கள் பற்றி பல தடவைகள் முறைப்பாடு செய்யப்பட்டும் பொலிஸ் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஏனெனில் அதிகாரத்திலுள்ள உள்ளூர் அரசியல்வாதிகளின் ஆசீர்வாதத்தோடு தான் இவர்கள் இயங்கினர். பொலிஸாரும் அவர்களுக்கு விசுவாசமாகவே நடந்து கொண்டனர். இக் குழுவில் யார் யார் இருக்கின்றனர், இவர்கள் பகிரங்கமாக தங்கியிருக்கும் வீடு எது என்பன போன்ற விபரங்கள் பொலிஸாருக்குப் பல தடவைகள் சொல்லப்பட்டும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாறாக, இக்குண்டர்களின் தாக்குதல் உக்கிரமடையத் தொடங்கியது.

**வீட்டினுள் நுழைந்து அங்கிருந்த பொருட்களையும் தூள் தூளாக்கியுள்ளனர். வந்த அனைவருமே மது போதையில் இருந்துள்ளனர். பெண்களையும் தாக்கி, அவரது மகளின் தலைமுடியையும் வெட்டியுள்ளனர்.**

சம்பவ தினமாகிய 13.10. 2000 அன்று இவர்களது செயல்கள் எல்லை மீறுவதாக இருந்ததால், இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என ஊர் மக்களும் ஐ.தே.க. ஆதரவாளர்களும் வேண்டினர். பொலிஸாரில் நம்பிக்கை இழந்ததால், ஊரின் தலைமை ஸ்தாபனமான அனைத்துப் பள்ளிவாசல்களின் சம்மேளனம் இதில் தலையிட்டு, இவ் அடாவடித்தனத்தை நிறுத்த வேண்டும் எனப் பொதுமக்கள் கோரினர்.

சம்பவ தினத்தன்று இரவு 9.00 மணியளவில் அக்கரைப்பற்றுப் பிரதான வீதியில் உள்ள பட்டினப் பள்ளிவாசலின் முன் ஐ.தே.க ஆதரவாளர்களும் பொதுமக்களும் திரண்டு, பள்ளிவாசல் சம்மேளனம் உடனடியாக இக்கும்பலைத் தடுத்து நிறுத்தி, கைது செய்வதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என வேண்டினர்.

அப்போது பட்டினப் பள்ளிவாசல் தலைவரும் அனைத்துப் பள்ளிவாசல்களின் சம்மேளனப் பொதுச் செயலாளருமான அக்கரைப்பற்று தேசிய கல்லூரி அதிபரான ஜனாப் அஸீஸ் அவர்கள் அங்கு அழைத்து வரப்பட்டார். கூட்டத்தில் இருந்தோர் "அதான்" ("பாங்கு") சொல்லி பொது மக்களை இங்கு அழைக்க வேண்டும் என வேண்டினர். தொழுகை நேரத்தில் மட்டுமே "அதான்" சொல்வது பொது வழக்கமாயினும் ஏதாவது ஆபத்துகள் அல்லது பயங்கரங்கள் நிகழ்ந்தாலும் "அதான்" சொல்வது முஸ்லிம்களிடையே வழக்கமாகவுள்ளது. அப்போது பள்ளித்தலைவர் அதான் சொல்லிப் பொதுமக்களை அழைத்ததோடு, ஊரில் அட்டகாசம் புரியும் குழுவை பொலிஸார் உடனடியாகக் கைதுசெய்ய வேண்டும் எனவும் ஒலிபெருக்கியில் அறிவித்தார்.

திடீரென 9.30 மணியளவில் அதான் சொல்லப்பட்டதால் பொதுமக்கள் பலரும் என்னவோ ஏதோவென்று பதறியடித்தவர்களாக பள்ளிவாசல் முன்றலில் கூடினர். ஏறத்தாழ ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் அங்கு திரண்டிருந்தனர். அவர்கள் ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லப்படுவது அப்பட்டமான பொய்யாகும். அங்கு திரண்டிருந்த பொதுமக்களுள் எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் இருந்தனர். நடுநிலையான கருத்துடையவர்களும் இருந்தனர்.

அப்போது அங்கு பொலிஸ் வாகனம் விரைந்து வந்தது. பொலிஸ் நியாயமாக நடக்காததால் அவர்கள் இதில் தலையிடத் தேவையில்லை. பள்ளிவாசல் மூலம் நாம் நடவடிக்கை எடுக்கிறோம் என அங்கு குழுமியிருந்தோர் கூறியதோடு, பொலிஸாரோடு வாக்குவாதப்பட்டனர். இதனால் பள்ளிவாசல் சம்மேளனத்தார் பேசுவதற்கு முன்பே பொலிஸார் திரும்பிச் சென்றனர். ஏறத்தாழ 200 மீட்டர் அளவில் வாகனத்தைப் பின்நோக்கிச் செலுத்தியவாறு பொலிஸ் பின்வாங்கியது.

அப்போது பள்ளியில் கூடியிருந்தவர்கள் இக்குழுவைக் கைதுசெய்வதற்கான முயற்சிகள் பற்றிப் பேசிய வண்ணம் இருக்கையில், வெளியே மின்சாரம் இல்லாததால் பள்ளிவாசலுக்கு முன்னுள்ள வீதியில் டயர்கள் வெளிச்சத்திற்காக எரிக்கப்பட்டன. தூரத்திலிருந்து அவதானித்துக் கொண்டிருந்த பொலிஸார் திடீரென யாரும் எதிர்பாராத வண்ணம் ஆகாயத்தை நோக்கிச் சுட்டவர்களாக பள்ளிவாசல் எல்லையை நோக்கி விரைந்து வந்தனர்.

இந்தச் சம்பவங்கள் நிகழ்ந்த அன்று இரவு அக்கரைப்பற்றில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு ஊரே இருளில் மூழ்கியிருந்தது. தொலைபேசிகள் முற்றாகச் செயலிழந்திருந்தன. பள்ளிவாசலில் மட்டும் ஜெனரேட்டர் மூலம் மின்சாரம் பெறப்பட்டது. இந்தச் சூழ்நிலையும் சம்பவத்தை மேலும் பாரதூரமாக மாற்றியது. வெளியிலுள்ள உயர் அதிகாரிகளையோ, வெளி ஊரிலுள்ளோரையோ தொடர்பு கொள்ள முடியாத துர்ப்பாக்கிய நிலையில் பொலிஸாரின் காடைத்தனம் அரங்கேறியது.

### பொலிஸாரின் காடைத்தனம்

ஆகாயத்தை நோக்கிச் சுட்டவாறு வந்த பொலிஸார் பள்ளிவாசல் வளவினுள் பலாத்காரமாக நுழைய முற்பட்டனர். அப்போது பொதுமக்கள் சிலர் சிதறி ஓடினர். மேலும் பலர் அங்கு நின்று பொலிசைத் தடுக்க முயன்றனர். பள்ளிக்குள் நுழையாதீர்கள். இது எங்களது பிரச்சினை. நாங்கள் பார்க்கிறோம் எனக் கூறினர். ஆனால் பொலிஸ் கண்ணீர்ப் புகைப்பிரயோகம் செய்தும் கடுமையாகத் தாக்கியும் அங்குள்ளோரைக் கலைக்க முயன்றது. இதனால் செய்வதறியாது திகைத்த பொதும்க்கள் அல்லோல கல்லோலப்பட்டு சிதறி ஓடினர். துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதால் சிலர் காயத்திற்குள்ளாகினர்.

பெருமளவு மக்கள் செய்வதறியாது பள்ளிவாசலினுள் தஞ்சம் புகுந்தனர். அப்போது பள்ளிவாசல் தலைவரும் ஊர்ப் பிரமுகர்கள் சிலரும் ஏராளமான பொதுமக்களும் பள்ளியுள் இருந்தனர்.

பள்ளிவாசல் தலைவரும் வேறு சிலரும் பொலிஸாரை அமைதியாக இருக்குமாறும், தாம் நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதாகவும் ஒலிபெருக்கியில் கூறினர். பொலிஸார் எதையுமே காதில் வாங்கிக் கொள்ளவில்லை. உடனடியாக பள்ளிவாசலை நாற்புறமும் சூழ்ந்தவர்களாக எல்லோரையும் பள்ளியை விட்டு வெளியேறுமாறு கூறினர். வெளியேறாத பட்சத்தில் 'உங்களைச் சுடுவோம்' என துப்பாக்கிகளை முன்னே நீட்டியவாறு அச்சுறுத்தினர். இந்த நிலையில் அச்சமும் திகிலும் அடைந்த மக்கள் செய்வதறியாது திகைத்தனர்.

பள்ளிவாசல் ஒலிபெருக்கியில் மீண்டும் மீண்டும் தமிழிலும், சிங்களத்திலும்

நன்றி - நூலகத்திட்டம்



# அரசியல்வாதிகளின் ஆசியுடன் காடையர் அட்டகாசம்

பொலிஸாரை பள்ளியுள் நுழைய வேண்டாம் எனக் கேட்கும் வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டன. பள்ளித் தலைவரோடு பேச்சுவார்த்தைக்கு வருமாறும் பொலிஸாருக்கு மன்றாட்டமாக அழைப்பு விடுக்கப்பட்டது. துப்பாக்கி முனையில் பொதுமக்களை வெளியேறச் சொன்னால் யாரேனும் வெளியேறுவார்களா? உயிருக்குப் பயந்த நிலையில் பொதுமக்கள் பள்ளியுள் ஒடுங்கியிருந்தனர். பலர் குப்புறப் படுத்தவாறு இருந்தனர்.

***பள்ளிவாசல் முற்றுகை***

பள்ளிவாசலை முற்றுகையிட்ட பொலிஸார், பொதுமக்களைக் கைதிகள் போல் நடத்தினர். மீண்டும் பள்ளியை விட்டு வெளியேறுமாறு கேட்கப்பட்டது. யாரும் மசியவில்லை. பொலிஸார் பள்ளியினுள் கண்ணீர்ப் புகையை வீசினர். பள்ளிவாசலினுள் துப்பாக்கிப் பிரயோகமும் செய்யப்பட்டது. இந்த அசிங்கமான செயல் சிறிது நேரம் நீடித்தது. "பொலிஸாரே எங்களது புனித ஸ்தலமான பள்ளிவாசலினுள் சப்பாத்துக் கால்களோடு நுழைய வேண்டாம்" என திரும்பத் திரும்ப ஒலிபெருக்கியில் மன்றாட்டமாகக் கேட்கப்பட்டது. ஆனால், எதையுமே சட்டை செய்யாமல் அவர்கள் தமது அட்டகாசத்தைத் தொடர்ந்தனர்.

தொடர்ச்சியாக பிரயோகிக்கப்பட்ட கண்ணீர்ப் புகையைத் தாங்க முடியாமல் பொதுமக்கள் பள்ளியை விட்டும் விரண்டோடினர். அப்படி வருவோரை துப்பாக்கி முனையில் பள்ளிவாசல் வளவினுள் குந்தியிருக்குமாறு பொலிஸார் அச்சுறுத்தினர். பொலிஸின் கைக்குள் தாம் அகப்பட்டுக் கொண்டதை உணர்ந்த இவ்வப்பாவிகள் செய்வதறியாது திகைத்தவர்களாக தமது உயிருக்கு அஞ்சியவர்களாக இருந்தனர். அப்போது அவர்கள் பொலிஸாரால் நையப்புடைக்கப்பட்டனர்.

பொலிஸார் சப்பாத்துக் கால்களோடு பள்ளியில் நுழைவதையும் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதையும் இந்த இக்கட்டான சூழ்நிலையிலும் கூட ஒருவர் வீடியோவில் பதிவு செய்தார். இதை அவதானித்த பொலிஸ் வீடியோ கெசற்றைத் தருமாறு கேட்டது. ஆனால், அதை யார் செய்தார் என்பதை அங்கிருந்த யாருமே காட்டிக் கொடுக்கவில்லை. வீடியோ கெமராவும் கெஸற்றும் பின்னர் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. பொதுமக்களிடம் இருந்த ஒரேயொரு ஆதாரமாகிய அதுவும் பலாத்காரமாகப் பறிமுதல் செய்யப்பட்டு விட்டது.

இந்த வீடியோ கெமராவைத் தராத வரையில் அங்கிருந்த யாரையும் விடுதலை செய்வதில்லை எனக் கூறப்பட்டது. இந்த இக்கட்டான சூழ்நிலையில் கூட ஒரு சிலர் பொலிஸாரோடு தாம் அப்பாவிகள். கட்சி ஆதரவாளர்களல்ல எனக் கூறினர். ஆனால், பொலிஸ் அதை அலட்சியம் செய்தது. பொலிஸாரின் பிடியிலிருந்தோருள் 28 பேர் எழுமாற்றாகத் தெரிவு செய்து கைது செய்தனர். அவர்களது சேட்டைக் கழற்றி கிரிமினல்கள் போல் கைகள் பின்னால் கட்டப்பட்டு அடித்து உதைக்கப்பட்டனர். பின்னர் பொலிஸ் வாகனத்தில் ஏற்றப்பட்டார்கள்.

கைதாகியோருள் மாணவர்கள், அரச உத்தியோகத்தர்களும் அடங்குவர். இவர்களுள் முஸ்லிம் காங்கிரஸ் உட்பட எல்லாக் கட்சியைச் சேர்ந்தோரும் உள்ளடங்கியிருந்தனர். அன்று அங்கு கூடியிருந்தோர் ஒரு கட்சியைச் சார்ந்தவர்களல்ல, எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த பொதுமக்களும் தான் என்பதற்கு இது மிகச் சிறந்த ஆதாரமாகும்.

இவர்களைக் கைது செய்து ஏனைய பொதுமக்களை துப்பாக்கி முனையில் வைத்திருந்தபோது பள்ளிவாசல் தலைவரும், இன்னொரு பிரமுகரும் பொலிஸாருடன் பேசி ஏனையோரையாவது விடுவிக்க முனைந்தனர்.

அப்போது பள்ளிவாசல் தலைவரை ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் தாக்கியுள்ளார். அவருக்கு தூஷண வார்த்தையால் ஏசியுள்ளனர். பொதுமக்கள் தாக்கப்படுவதைச் சகிக்க முடியாத பள்ளித் தலைவர் அங்கு அழுததாகவும் சொல்லப்படுகிறது.

அப்போது பொலிஸார் ஐ.தே.க. முன்னணி ஆதரவாளர்கள் அடங்கிய சிலரது பெயர்களை வாசித்து அவர்களை அழைத்துள்ளனர். ஆனால் அப்படியான யாருமே அங்கு இருக்கவில்லை. சம்பவ இடத்துக்கு அக்கரைப்பற்று உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் விரைந்து வந்தார். அவரது தலையீட்டை அடுத்து பொதுமக்கள் விடுவிக்கப்பட்டனர்.

இந்த சம்பவத்தில் சம்பந்தப்பட்ட அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும், சப் இன்ஸ்பெக்டரும் முஸ்லிம்கள் என்பது மனவேதனைக்குரிய உண்மையாகும்.

அக்கரைப்பற்று பட்டினப்பள்ளிவாசலினால் குர்ஆன் மனைபீடம் ஒன்றும் நடாத்தப்படுகின்றது. இது பள்ளிவாசலுக்கு அருகில் உள்ளது. இதனது கதவையும் பொலிஸார் உடைத்துள்ளனர். அங்கிருந்த இருவர் தாக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

சம்பவதினத்தன்று கைது செய்யப்பட்ட 28பேரும் மறுநாள் விடுவிக்கப்படுவர் என பள்ளித்தலைவரிடம் பொலிஸ் அத்தியட்சகர் உறுதியளித்தார். ஆனால் அவர்கள் தற்போது மட்டக்களப்பில் மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். பொலிஸாரைத் தாக்க முயன்றதாக அவர்கள் மீது பொய்க் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அவர்களுள் அதிகமானோர் ஏதாவது அபாயம் நிகழ்ந்துவிட்டதோ என அறிய வந்த அப்பாவிகள். இன்று அவர்களைப் பணயம் வைத்து பொலிஸ் ஊர்மக்களோடு விளையாடுகிறது.

சம்பவ தினத்தன்று பள்ளியில் பொதுமக்கள் கூடியதன் நோக்கமே, ஊரில் வன்முறையில் இறங்கிய குழுவைக் கைது செய்ய வேண்டும் எனக் கேட்கத்தான். ஆனால், இன்று அப்பாவிப் பொதுமக்களை எப்படி விடுவிப்பது என்று தெரியாமல் எல்லோரும் திணறுகின்றனர். அரசியல்-




வாதிகளின் பாதுகாப்பில் இருக்கும் கும்பல் இப்போது மறைந்திருந்த வேடிக்கை பார்க்கிறது.

சம்பவ தினத்தன்று பள்ளியில் பொதுமக்கள் கூடியிருக்கையில் இக்குண்டர்கள் ஊரின மற்றொரு புறம் ஒரு ஐ.தே.க ஆதரவாளரின் வீட்டில் நுழைந்து சுட்டனர். அவரது காலில் சூடுபட்டு அவர் மயிரிழையில் உயிர்தப்பினார். அன்று கூட இவர்களது கொட்டம் அடங்காமலேயே இருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

***பொலிஸாரின் பொய்க் குற்றச்சாட்டுகள்***

இப்போது அக்கரைப்பற்று மக்கள் தமது பொலிஸ் நிலையத்தையும் தம்மையும் தாக்கவே பள்ளியில் ஒன்றுகூடியதாக பொலிஸ்



கூறுகிறது. பள்ளியில் ஒருவர் துப்பாக்கியால் தம்மைக் குறிபார்த்ததாகக் கூடச் சொல்கின்றனர். பள்ளியுள் தாம் பார்த்ததாகக் கூடச் சொல்கின்றனர். பள்ளியுள் தாம் கஞ்சா இருந்து கைப்பற்றியதாகக் கூட அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சொல்லியிருக்கிறார். பொலிஸ் வாகனத்தையும் பொதுமக்கள் உடைத்தார்களாம். இவற்றைப் பார்க்கிற போது சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை. தம்மிடம் அதிகாரம் இருப்பதால் எவ்வாறான குற்றச்சாட்டையும் தாம் சுமத்த முடியும் என இவர்கள் கருதுகின்றனர் போலும். ஆனால் அசத்தியம் தன் பலனை என்றோ ஒருநாள் அனுபவித்தே தீரும்.

***பாராளுமன்ற உறுப்பினரின் பணி என்ன?***

இந்தச் சம்பவங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கையில் ஊரில் ஒரு பா.உறுப்பினர் இருந்திருக்கிறார். ஆனால் அவர் பள்ளியுள் பொலிஸ் நுழைந்த போது கூட இதில் தலையிடவில்லை. இங்குதான் இவரது நேர்மை வெளிப்படுகிறது என பொதுமக்கள் பேசிக் கொள்கின்றனர். என்னதான் கட்சி வேறுபாடுகள் இருந்தாலும் பொலிஸை பள்ளியில் நுழைய விடாமல் தடுக்கும் அதிகாரம் அவரிடம் இருந்தது. ஆனால், இதை யாரிடம் சொல்லி அழுவது?

புத்தளம் பள்ளியில் பொலிஸார் சுட்டபோது அதைக் கண்டித்துப் பேச பாராளுமன்றத்தில் ஒரு முஸ்லிம் எம்.பி. இருக்கவில்லை என்று பேசி ஆட்சிக்கு வந்தவர்கள் தான் அக்கரைப்பற்று பள்ளியுள் பொலிஸ் நுழைந்து சுட்ட போது வாளாவிருந்தார்கள். இந்த முரண்நகையை என்னவென்று சொல்வது?

***ஊடகங்களின் நாடகம்***

அக்கரைப்பற்று சம்பவம் தொடர்பாக வெளிவந்த செய்திகள் அநேகமானவை உண்மைக்குப் புறம்பானதாகவே இருந்தன. 15.10.2000 வீரகேசரியின் முன்பக்கச் செய்தியில் ஐ.தே.க. குழு மோதலில் பொலிஸாருக்குக் காயம் என்று எழுதப்பட்டுள்ளது. சக்தி செய்தியில் அம்பாரை பொலிஸ் அத்தியட்சகர் லூகொடையை ஆதாரம் காட்டி பொலிஸாருக்குக் காயம் என்று சொல்லப்பட்டது. இவர்களது பிராந்திய நிருபர்கள் கண்ணைக் கட்டிக் கொண்டா நிற்கிறார்கள்? அதிகாரத்திற்கு வால் பிடிக்காமல் நியாயங்களுக்காகப் பேசுவதாகச் சொல்லும் இவர்களது பத்திரிகா தர்மம் எங்கே போனது? 15.10.2000 தினகரனும் மட்டக்களப்பிலிருந்து வெளிவரும் தினக்கதிரும் தான் உண்மையை எழுதின.

***ஹர்த்தால்***

சம்பவ தினத்திற்கு மறுநாளும் 16.10.2000 அன்றும் அக்கரைப்பற்றில் இரு நாட்கள் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. அம்பாறை பொலிஸ் அத்தியட்சகருடன் அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனப் பிரதிநிதிகள் நடாத்திய பேச்சுவார்த்தையும் தோல்வியில் முடிந்து விட்டது. பாராளுமன்றத்தில் பேசி ஏதேனும் நடக்குமா என்று தெரியவில்லை. இப்போது பள்ளிவாசல் கழுவப்பட்டு மீண்டும் தொழுகை நடைபெறுகிறது.

***தீர்வு என்ன?***

இந்தப் பிரச்சினையில் கைதாகியுள்ள அப்பாவிகளின் எதிர்காலம் என்னவென்பது இன்னும் புரியாத புதிராக இருக்கிறது. இத்தனையும் நடந்தும் யாருக்கும் இது பெரிய பிரச்சினையாகக் கூடத் தெரியவில்லை. இறுதியில் நிலைமை "பிச்சை வேண்டாம் நாயைப் பிடி" என்பது போலாகி விட்டது.

ஆனால், ஒன்று மட்டும் உண்மை அநியாயக்காரர்கள் யாராக இருந்தாலும் அதற்குரிய பலனை அவர்கள் அனுபவித்தே தீர்வார்கள். மக்கள் புனிதமாக மதிக்கும் ஒரு வணக்கஸ்தலத்துள் காடைத்தனங்களையும் கண்ணீர்ப் புகையும், துப்பாக்கிப் பிரயோகத்தையும் செய்தவர்களை எப்படி மன்னிப்பது?

இன்றும் அதே பொலிஸார் அக்கரைப்பற்றில் வலம் வந்து கொண்டிருக்கிறார்கள். கட்சி அரசியலின் பொறியில் அப்பாவி மக்கள் அகப்பட்டது தான் மிகப்பெரும் சோகம். இதை யாரிடம் சொல்லி அழுவது? அரசியல்வாதிகள் மக்களுக்குச் செய்யும் சேவைக்கு இது நல்ல உதாரணம்.

நன்றி - நூலகத்திட்டம்



# ஓவியர் மாற்கு:
# ஓவியம் அவருக்கு ஒரு ஆன்மீகப் பயணம்!

- கோ.கைலாசநாதன்




சீன எழுத்துக்களை ஞாபகப்படுத்தும் ஆங்கில எழுத்துக்களைக் கொண்ட கையொப்பத்தை ஓவியங்களின் பொருத்தமான மூலைகளில் காண முடியும். சில வேளைகளில் கையொப்பம் மேலிருந்து கீழாகவும் இடப்பட்டிருக்கும். மேற்குறிப்பிட்டவாறு கையொப்பம் இடுபவர் யாரென நீங்கள் நிச்சயமாகக் கேட்பீர்கள். அதற்குரியவர் மாற்கு என்ற பெயரைக் கொண்ட ஒரு ஓவியர்.

இவரின் கையொப்பத்திலிருந்து ஓவியத்தையோ, ஓவியத்திலிருந்து இவரின் கையொப்பத்தையோ பிரிக்க முடியாதவாறு அவை இரண்டும் ஒன்றையொன்று இட்டு நிரப்பும் வகையில் அமைந்திருப்பது ஓர் உண்மையாகும்.

கருத்தை வெளிப்படுத்துவதற்கு இன்ன ஊடகம் தான் தனக்கு வேண்டும், அந்த ஊடகம் இல்லாவிடில் வெளிப்படுத்துவது கடினம் என அவர் ஒரு போதும் சொல்லியதில்லை. சாதாரண பேப்பர்கள், காட்போட் மட்டை, பிளாஸ்ரிக் போத்தல்கள், இந்தியன் மை, நீர் வர்ணம், சோக் வர்ணம், ஒயில் வர்ணம், கம்பிகள், அலுமினியத் தகரங்கள், தூள் வர்ணங்கள், கழிவுக் கடதாசிகள், ஒட்டுப் பலகைகள், அச்சடித்த படங்கள் இவை எல்லாவற்றுடனும் அவருக்குப் பரிச்சயம் உண்டு.

வழமையில் சற்று வித்தியாசமான முறையில் அவரின் உருவங்கள் இருந்தன. மனித உருவங்களைப் பொறுத்தவரையில் உள்ளார்த்தமாக உடற் கூற்றியல் அம்சங்கள் இருந்தாலும், வெளிப்படையாக மிகைப்படுத்தல்கள் சில எப்போதுமே இருந்து கொண்டிருந்தன.

கைகளின் திரட்சி, கால்களின் திரட்சி, மூக்கு, கண்கள், வயிறு இப்பகுதிகள் எப்போதுமே துருத்தமாகத் தெரியும் பகுதிகளாகும். வளை கோடுகளை அதிகம்



பயன்படுத்துவார். இந்த வளைகோடுகளை அவர் அனுபவித்தே வரைகின்றார் என்பது கோடுகளின் போக்கைக் கொண்டே புரிந்து கொள்ள முடியும். எருதின் ஏரி, அதன் வயிறு, குதிரையின் முகம், அதன் வயிறு, அதன் பிற்பகுதி இவைகளும் மேற்குறிப்பிட்ட விடயங்களுடன் ஒத்துப் போகும் அம்சங்களாகும்.

இந்த அம்சங்களில் நாம் மாற்குவைக் காண முடியும். மாற்குவில் இந்த அம்சங்கள் இருக்கின்றன எனக் கூறினாலும் அதுவும் பொருந்தும்.

மேற்கூறப்பட்ட விடயங்களே மாற்குவின் பாணியைத் துலக்கமாகக் காட்டும் பகுதியாகும். அதிகமான விவரிப்புகள் நவீன ஓவியத்தைப் பொறுத்தவரை தேவையற்ற ஒன்றாகும். இதற்கமைய விவரிப்புகளில் அதிக நேரத்தை அவர் செலவிடுவதில்லை.

உதாரணமாகக் குந்தியிருக்கும் பெண் ஒருத்தியைக் காட்டுவதற்கு இரண்டு ஒடுக்கமான வளைகோடுகள் பிரதானமானவையாகும். இங்கு சேலை மடிப்புகள் தேவையற்றதொன்றாகி விடுகின்றன. இதன் பின்பே முகமும் கைகளும் முக்கியத்துவம் பெறுகின்றன.

இவற்றைவிட வேறு, வேறு சந்தர்ப்பங்களில் எவை அல்லது எது முக்கியமோ அதை அல்லது அவற்றை எப்படிக் காட்ட வேண்டுமென்பதை நன்கு விளங்கிக் கொண்ட கலைஞராக அவர் இருந்துள்ளார்.

இவரின் ஓவியங்களில் சாதாரணமான விடயங்களே கருப் பொருள்களாக அமைகின்றன. உதாரணமாக நாய்கள் சண்டையிடல், காவடியாட்டம், நாதஸ்வரக் கலைஞன், நடனமாடும் பெண், சிவநடனம் இத் தலைப்புக்களைக் கூறலாம்.

இவை சாதாரண தலைப்புக்களாக இருந்தாலும், மாற்குவின் விநோத வடிவமைப்பிலும், உருவங்கள் ஒழுங்கு படுத்தப்பட்ட விதத்திலும் முன் செல்லும் வர்ணப் பிரயோகத்திலும் இவை எம்மைப் பார்க்கச் சொல்லுபவையாகவே எப்போதும் இருக்கின்றன.

தட்டையான நிறப்பிரயோகம், ஒளி நிழற்பிரயோகம், கழுவல்முறை, நிறப்பேப்பர் வெட்டுச் சித்திரங்கள் எனப் பலமுறைகளைப் பரீட்சார்த்தமாகச் செய்து பார்த்துள்ளார்.

சித்திர ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற பின்பும் ஓயாது மாணவர்களுக்கு வகுப்புக்கள் நடத்திக் கொண்டிருந்தார். ஆர்வம் உள்ளவர்கள் அங்கு போய்க் கற்கலாம். அந்த வகுப்புக்கள் இலவசமாகவே நடந்தன. அவரின் குருநகர் வீட்டில் எப்போதுமே மாணவர்கள் தூரிகைகளுடன் நிற்பார்கள். மாணவர்கள் இல்லாத வீடாக அந்த வீடு ஒரு போதும் இருந்ததில்லை.

யாழ்ப்பாணத்தின் புகழ் பெற்ற கல்லூரிகள் இரண்டு அவருக்குப் பெருமதிப்புக் கொடுத்து வைத்திருந்தன. ஒன்று ஹாட்லிக் கல்லூரி. மற்றது



கொக்குவில் இந்துக் கல்லூரி. தற்காலிக ஆசிரியர்கள் போல் அல்லாது தொழிலுக்காகத் தம்மை அர்ப்பணித்தவர் எனக் கூறின் அது பொய்யாகாது.

தாம் வரைந்து கொண்டிருப்பதும் மற்றவர்களுக்கு வரைவதற்கு வழி காட்டுவதும் மாற்குவின் ஆன்மீகப் பயணமாக இருந்துள்ளது. இத் திருப்தியே அவரின் வாழ்வாகவும் இருந்துள்ளது.

முழு மரபு ஓவியராக இல்லாமலும், முழு நவீன ஓவியராக இல்லாமலும் அவர் இருந்துள்ளார். உள்ளதைத் தேவை கருதி சற்று மாற்றித் தனது பார்வை இதுதான் எனப் பல படைப்புக்களைப் படைத்துள்ளார். தனது பாணியில் இருந்து அவர் விலகவில்லை.

யாழ்ப்பாணத்துப் போர்ச் சூழல் காரணமாக மன்னாருக்கு இடம் பெயர்ந்து சென்றார். நோயின் பாதிப்புக்கு உள்ளாகியிருந்தார். தமது 67வது வயதில் அவர் எம்மை விட்டுப் பிரிந்தார்.

மாற்கு என ஆங்கிலத்தில் வீச்சான நேர்கோட்டுத் துண்டங்களைப் பயன்படுத்தி எழுதும் கை ஓய்ந்துவிட்டது. இறப்பு எல்லோருக்கும் நிச்சயமானது. இறந்த பின்பும் அவரின் படைப்புக்களும், நீண்ட மாணவர் பரம்பரையும், சுவடுகளாக இருந்து அவரை எப்போதும் ஞாபகப்படுத்துவனவாகவே இருக்கும்.

## புலிகள்.........

யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை, மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம் என்றவாறாக - விடுதலைப் புலிகளின் அரசியல் நிலைப்பாட்டோடு நேரடியாக முரண்படாத விசயங்களை வலியுறுத்தும் கூட்டணி, காங்கிரஸ், ரெலோ, ஐ.தே.கட்சி என்பன வடக்கில் வெற்றி பெற்றுள்ளன. ஈ.பி.டி.பி. இதற்கு விதிவிலக்கு. ஆனால், ஈ.பி.டி.பி.யின் வெற்றியும் விதிவிலக்கானதே என்பதைக் கவனிக்க வேண்டும். ஆனால், கிழக்கில் வென்றவர்களைப் பார்ப்பின் மேற்சொன்ன விடயங்களுக்காகவன்றி அன்றாடப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் விதத்திலும் அபிவிருத்தி உத்தியோகம் போன்ற விடயங்களும் வாக்குகளைக் கூட்டணியிலிருந்து பிரித்து எடுத்துள்ளன. காங்கிரஸ், ரெலோ போன்றவை இது விடயத்தில் அறவே கைவிடப்பட்டிருக்க, ஐ.தே.க. ஆட்சிக்கு வரலாம் என்ற நம்பிக்கையிலேயே அங்கும் தமிழ் வாக்குகள் தாராளமாகச் சென்றுள்ளன. திருமலை நகர வாக்குகள் இந்தப் போக்கினை ஊர்ஜிதப்படுத்தின.

"புலிகள் மீண்டும் வருவார்கள்" என்ற எண்ணம் யாழ் மக்கள் மத்தியில் முற்றாகவே அற்றுப்போய்விடவில்லை. எனவே அவர்கள் மிகக் கவனமாகவே காலடி வைத்திருப்பார்கள். அபிவிருத்தி, உத்தியோகம் என்ற வலைகள் ஈ.பி.டி.பிக்கு யாழில் தீவுப்பகுதி தவிர்ந்த ஏனைய இடங்களுக்கே பயன்பட்டிருக்கும் எனலாம். ஆனால் கிழக்கில் உள்ள நிலைமையோ வேறு. பாரிய இழப்புகளையும் மனித அழிவுகளையும் எதிர்கொள்ளும் சமூகமென்றளவில் ஒரு யுத்த சூழ்நிலையில் "தப்பியொட்டி" உயிர்வாழ்தல் எப்படி என்பதே இங்குள்ள மக்களின் முதன்மைப் பிரச்சினையாகும். மறுபுறத்தில் தலைநகர தமிழ் வாக்காளர்கள் "அம்மாவுக்கு ஒரு பாடம்" என்பதில் குறியாக இருப்பவர்கள். இதற்கெனவே ஐ.தே.கட்சியை நாடுபவர்கள்.

எனவே வாக்களிப்பின் போக்கையொட்டி விசனப்படுவதற்கு எதுவுமிலலை என்பதே எனது முடிவாகும். ஏனெனில் இம்முறை வாக்களிப்பு பற்றி சரிநிகரில் ஏற்கெனவே நான் குறிப்பிட்டதைப் போல "எதுவுமே நடக்கப்போவதில்லை" என்ற நிச்சயத்துடன் வாக்களித்தவர்கள் தமிழர்கள். இது இனப்பிரச்சினையைப் பொறுத்தளவில்தான் நான் கூறியது. ஆனால் தத்தமது சொந்த அலுவல்களைப் பார்ப்பதற்கு ஒரு எம்.பி.யின் உதவி வேண்டுமே. அதுவும் யுத்தச் சூழலில் வாழும் தங்களது "உயிர்ப்பிரச்சினைக்கு" உதவ யாரால் முடியும் என்றால் கட்டாயமாக அது பெரிய கட்சிகளுடன் தொடர்புள்ளவர்களாலேயே முடியும் என்ற முடிவுக்கு வடக்கு - கிழக்கு வாக்காளார்கள் தத்தம் நெருக்கடிகளுக்கு ஏற்றவகையில், வந்துளனர். ஆனால், இதனை இனப்பிரச்சினை பற்றிய அவர்களது கொள்கை வழி முடிவு என்று கொண்டு நாம் குழம்பவேண்டியதில்லை. மறுவார்த்தையில் சொல்வதானால் இனப்பிரச்சினை வேறு. அதற்கான தீர்வு விசயம் என்பது வேறு. இலங்கைப் பாராளுமன்றத்துக்கான தேர்தல் என்பது வேறுவிடயம் என்றே தமிழ் வாக்காளர்கள் கருதுகின்றார்கள். இதனைத் தவறெனக் கூற என்னால் முடியாது.

## மஞ்சள்............

ஒன்றிரண்டு "சோர்ட் ஈட்" துண்டுகளுக்கும், ஒரு கிளாஸ் கசிப்புக்கும், ஒரு செம்மஞ்சள் தாளுக்கும், இலவச சவாரிக்கும், பொது மக்களின் வாக்களிக்கும் ஜனநாயகத் தார்மீக உரிமையைப் பலியாக்கித் தமது கீழ்த்தரமான அரசியல் இலாபங்களுக்குப் பலியாக்கிப் பறித்துவிட முடியாது என்பது மிகத் தெளிவாகவே உணர்த்தப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், தங்களை இளிச்சவாயர்கள் என்று இனியும் கட்சிக்காரர்கள் என்று தப்புக்கணக்குப் போடக்கூடாது என்பதையும் இந்த வாக்காளப் பெருமக்கள் நன்றாகவே காட்டிவிட்டார்கள் என்று சில ஏஜன்டுகள் கொதிப்புக்கு மத்தியில் கூறி வருகின்றார்களாம்.

நன்றி - நூலகத்திட்டம்





'சுத்தி' (The Cow) குறுந்திரைப்படத்தை அண்மையில் கண்டு களிக்கும் வாய்ப்பு கிட்டியது. இக்குறுந்திரைப்படத்தை அனோமா ராஜகருணா இயக்கியிருந்தார். 1983ல் பாடசாலை மாணவியாக இருக்கும் போது 'சொந்துரிய' எனும் தொலைக்காட்சி நாடகத்தை இயக்கியதன் மூலம் படைப்புலகப் பிரவேசம் செய்தார். அதன்பின் அனோமா 'இங்கியக் நிசா' எனும் தொலைக்காட்சி நாடகத்தை இயக்கினார். பாலியல் தொழிலாளி குறித்து தயாரிக்கப்பட்ட இந்நாடகம் இதுநாள் வரை தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகவில்லை. அதன்பின் 'சௌஹசக்க கதாவக்' தொலைக்காட்சி நாடகத்தை இயக்கிய அனோமாவுக்கு OCIC திரைப்பட விழாவில் பழைய மாணவர்களுக்கான போட்டிப் பிரிவில் முதலாமிடம் கிடைத்ததுடன் அந்நாடகம் அமெரிக்கா மிச்சிகன் பல்கலைக்கழக வீடியோ திரைப்பட விழாவில் காண்பிக்கப்படத் தெரிவு செய்யப்பட்டது. இனப்பிரச்சினையை மையமாகக் கொண்ட 'அம்மா கெனெக்' தொலைக்காட்சி நாடகம் காண்பிக்கப்படுவதற்கு நாள் குறிக்கப்பட்ட போதிலும் 1988ல் விசேட தணிக்கை ஆணையின் பேரில் இந்நாடகம் காண்பிக்கப்படவில்லை. இதன்பின் அவர் தயாரித்த 'விலங்கு' தொலைக்காட்சி நாடகத்திற்கு அனுசரணையாளர்களை தேடிக் கொள்ளும் இயலாமையின் காரணமாக 6 வருடங்கள் அந்நாடகம் ஒளிபரப்பாகவில்லை. அவரது புதிய குறுந்திரைப்படமான 'சுத்தி', 'விலங்கு' நாடகம் தயாரிக்கப்பட்ட 10 வருடங்களுக்கு பின்பே தயாரிக்கப்பட்டுள்ளது. அனோமாவின் இரு தசாப்தகால படைப்பாக்கத்தில் அவர் விசேடமாக பெண்கள் குறித்தும், பெண்கள் பிரச்சினைகள் குறித்தும், இனநெருக்கடி குறித்தும் அவதானம் செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அதேவேளை அனோமா அண்மையில் 'கோத்திரிக்க பிரேமய' என்ற கவிதை நூலொன்றையும் வெளியிட்டுள்ளார்.

# அடுத்த படைப்புக்காக பத்து வருடங்கள் காத்திருக்க நேர்ந்தது!

**விலங்கு தொலைக்காட்சி நாடகத்திற்குப் பின் — சுமார் 10 வருடங்களுக்குப் பின்னர் தான் 'சுத்தி' குறுந்திரைப்படத்தை இயக்கியுள்ளீர்கள்? நீங்கள் இவ்வளவு கால இடைவெளியை எடுத்துக் கொண்டதன் காரணம் என்ன?**

நான் எனது முதல் 5 தொலைக்காட்சி நாடகங்களையும் இயக்கிவிட்டு அனுசரணையாளர்களைத் தேடும் பிரச்சினைக்கும், தணிக்கைப் பிரச்சினைக்கும் முகம் கொடுத்துக் கொண்டிருந்தேன். எனது முதல் படைப்பான "சொந்துரிய" சீன சிறுகதையை தழுவி 1983 ஆடிக்கலவரத்தின் பின் தயாரிக்கப்பட்டதாகும். போரின் காரணமாக ஒரு பெண் இடம்பெயரும் போது சந்திக்கும் பிரச்சினைகள் இதில் கலந்துரையாடப்பட்டிருந்தன. உண்மையில், போர்ச் சூழல் ஆண் பெண் இரு சாராரையும் பாதிக்கும் ஒரு விடயம். இதனால் பெண்கள் அதிகமதிகம் பாதிப்படைகின்றனர். ஆனால் எனது இந்த நாடகத்தினைத் தணிக்கை செய்தனர். 1983 ஆடி மாதம் நாடு முழுவதும் கலவரம் பற்றியெரிந்த போதிலும் கொழும்பு, யாழ்ப்பாணத்தைத் தவிர பிற பிரதேசங்களில் இருந்தவர்கள் இதனை போரின் ஒரு அழுத்தமாக விளங்கிக் கொள்ளவில்லை. போரின் அழுத்தம் எம்மையும் சூழும் என அவர்கள் ஒரு போதும் நினைத்திருக்கவில்லை. இதனால், போரின் அழுத்தத்தில் மனிதர்களின் இருப்பு குறித்து கலந்துரையாடும் நாடகம் ஒன்றுக்கு எமது தொடர்பூடகங்களில் இடமின்றிப் போய்விட்டது. பின்னர் அது ஐ.ரி.என். தொலைக்காட்சியில் ஒளிபரப்பான போதும், பலருக்கு அந்நாடகத்தைக் கண்டுகளிக்கும் வாய்ப்பு ஏற்படவில்லை.

எனது தொலைக்காட்சி நாடகங்கள் சமூக மரபுகளை பாதுகாக்கும், அதற்கான சிறந்த செய்திகளை வழங்கும் நாடகங்கள் அல்ல. சந்தையில் வேறு பண்டங்களுடன் விற்பனை செய்யக் கூடிய தொனிப்பொருட்களைக் கொண்டதல்ல எனது படைப்புகள். இதனால் இவற்றை ஒளிபரப்ப அனுசரணையாளர்களைத் தேடிக் கொள்வது கடினம். இந்நிலைமை தற்போதைய பொருளாதார முறையில் காணப்படும் சிக்கல் என்றே கருதுகின்றேன். அதிக பணச்செலவுடன் படைப்பை செய்துவிட்டு மீண்டும் அப்பணத்தை சம்பாதித்துக் கொள்ள படைப்பாளிகள் பெரும் சிரமப்படுகின்றனர். இது போன்ற காரணங்களினால் தான் எனது அடுத்த படைப்புக்கு 10 வருடங்கள் காத்திருக்க நேர்ந்தது.

**நீங்கள் முகம் கொடுத்த தணிக்கை மற்றும் பொருளாதார நெருக்கடிகளினால் உங்களது படைப்பு குறித்தான உபாயங்களை மாற்ற நேர்ந்ததா? அதாவது "விலங்கு" நாடகத்தில் பேசப்பட்ட பெண்களின் பிரச்சினைகள் என்ற விடயம் "சுத்தியில்" வேறு வழிமுறைகளினூடு பேசப்பட்டதா?**

இல்லை. நான் அப்படி நினைக்கவில்லை. விலங்கு நாடகத்தின் நாளனியும், சுத்தி நாடகத்தின் சுத்தியும் இரு வேறுபட்ட பாத்திரப் படைப்புகள். ஆனால் இந்த பாத்திரப் படைப்புகள் இரண்டிலும் சமூக மரபுகளின் பாதிப்பின் காரணமாக அவர்கள் முகம் கொடுக்கும் அழுத்தங்களை வெளிப்படுத்தியுள்ளேன். இங்கு நான் இரண்டு வேறுபட்ட நடைமுறைகளைக் கையாண்டுள்ளேன். அதாவது நாளினி தனது பிரச்சினைகளைப் பற்றி நேரடியாக உரையாடல் மூலம் வெளிப்படுத்துகிறார். ஆனால் சுத்தி அவ்வாறல்ல.



சுத்தி எம்.டி.ரத்தம்மாவினால் எழுதப்பட்ட பசு என்ற தலைப்பிலான கேரளச் சிறுகதையின் தழுவல்.

முதலில் நாட்டியமாடும் பெண்களை இச்சமூகம் நோக்கும் மரபார்ந்த பார்வையை மாற்றும் தேவை எனக்கு இருந்தது. எமது சமூகம் இவர்களை 'ஆட்டக்காரி' என ஹாஸ்யத்துடன் விளிக்கும் தன்மையை மனிதாபிமானத்துடன் அணுக நான் முயற்சித்தேன். அத்துடன் அவ்வாறான பெண்கள் திருமணபந்தத்தில் அனுபவிக்கும் தாக்கங்களை வெளிப்படுத்த முயற்சித்தேன்.



# அந்தக் காலத்துக் கடிதங்களில் என்ன எழுதினார்கள்?

இங்கு "அராம்கோ வேர்ல்ட்" (Aramco World) என்றொரு பல் கலாசார இதழ் வருகிறது. குறிப்பாக அராபிய கலாசாரத்தைப் பார்வைப் படுத்தியும், ஏனைய கலாசாரங்களோடு பிணைப்பேற்படுத்தியவாறும் இவ்விதழ் ஆங்கிலத்தில் வெளிவருகிறது.

அமெரிக்காவில் வெளியீட்டுத் தலைமையகத்தைக் கொண்டிருக்கும் இவ்விதழ் இலவசமாக விநியோகிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. இதன் அண்மைய இதழ் ஒன்றில் புதைபொருள் ஆய்வோடு தொடர்பான சுவாரஷ்யமான கட்டுரை ஒன்று படித்தேன். சுமார் 3500 நூற்றாண்டுகளுக்கு முன் எகிப்தில் ஆட்சி புரிந்த "பாரோக்கள்" (Pharaohs) என அறிமுகமான அரசர்கள், சிற்றரசர்களுக்கிடையிலான ராஜதந்திரத் தொடர்புகளுடன் தொடர்புற்ற ஆய்வுக் கட்டுரையொன்று அது.

அவர்கள் தங்களுக்கிடையே பயன்படுத்திய கடிதக் கல்வெட்டுக்கள் பல வருடங்களுக்கு முன் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அது பற்றிய ஆய்வுகளும் இடம் பெற்றிருக்கின்றன. இதுவரை இதுமாதிரியான 380 சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவை தற்போது அய்ரோப்பாவிலும், எகிப்திலுமுள்ள நூதனக் காட்சிச்சாலைகளில் வைக்கப்பட்டிருக்கின்றனவாம். சிலது தனிப்பட்ட சேகரிப்பாளர்களிடமும் உண்டாம். அதை வைத்துத் தான் இதுவும் எழுதப்பட்டிருக்கிறது. Correspondence in Clay என்பது தான் கட்டுரைத் தலைப்பு. Barbara Ross என்ற தன்னார்வ ஊடகவியலாளரே இதை எழுதியுள்ளார்.

இவ்வகையிலான முதலாவது ஆவணம் ஒரு விவசாயப் பெண்ணின் கண்ணிலேயே அகப்பட்டுள்ளது. அது அவளுக்கு புதினமாகப் படவே அவற்றில் சிலதை அங்காடிக்கு எடுத்துக் கொண்டு போயிருக்கிறாள். அங்கு அது நல்ல விலை போயிருக்கிறது. இதன் பிறகு அவள் கண்டெடுத்த இடங்களில் பலரும் தேடத் தொடங்க நிறையக் கிடைத்து வரலாற்று ஆய்வாகவும் ஆவணமாகவும் ஆகியுள்ளது. மிகவும் பலம் வாய்ந்த அரசனாகக் கருதப்படும் "அகெடேடென்" என்ற எகிப்திய அரசன் ஆட்சி புரிந்த ஒரு பிரதேசத்திலேயே இது கிடைத்துள்ளது. இவ்வகையானவை தற்போது "அமர்னா கடிதங்கள்" என்று பிரபலமாகி அறியப்படுகின்றனவாம்.

"சகோதரவாஞ்சையினதும், அன்பினதும் மொழியாக இந்தக் கடிதங்களைக் காணலாம்" என்கிறார் ஒரு பேராசிரியர். அது மட்டுமல்லாது அரசர்களுக்கிடையிலான சகலவித இராஜதந்திர உறவுகளையும் இக்கடிதங்களில் காணமுடிகிறதாம். இக்கடிதங்களின் மொழி பண்டைய மொசப்பத்தேமியாவிலிருந்து பரவிய மொழி வகைக்குரியதாம். பல்வேறு இடங்களில் பல்வேறு மொழிகளை ஏற்றவாறு எழுதும் வழக்கம் இருந்ததாம். அதுபோலவே இதுவும் எழுதப்பட்டிருக்கிறதென்கிறார்கள். இது பல்வேறு பிரதேசத்தவர்களும் புரிந்து கொள்ள ஏதுவான வகையிலும் இருந்திருக்கிறது.

இக்கடிதங்களின் முகமன் இனிமையாகவும், இலக்கியத்தனமாகவும் இருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்று ஆங்கிலத்தில் - Say to Nimmureya, The King of Egypt, my brother, my son-in-law, whom I love and who loves me: Thus Thusarta, the king of Mittani, your father in love, who loves you, your brother. For me all goes well. For you may all go well.

For your household, for your wives, for your sons, for your magnets, for your chariots, for your warriors, for your country and whatever else belongs to you, may all go very, very well.

அந்தக் காலத்தில் அதிகமாக அரசர்கள் எதனை பரஸ்பரம் அன்பளிப்புச் செய்தார்கள் என்பது தெரியும் தானே! பெண்கள்! ஒருவன் ஒரு இளம் பெண்ணை இன்னொருவனுக்கு அன்பளிப்புச் செய்கிறான். அன்பளிப்போடு கூடவே இவ்வாறு எழுதுகிறான், "இவள் இப்போது நல்ல பக்குவப்பட்டு விட்டாள். என் சகோதரனின் விருப்புக்கேற்ப (இங்கு சகோதரன் என்று விளிப்பது எப்போதுமே ரத்த உறவுகளை குறிக்க அல்ல என்பதும், அதனாலேயே இக்கடிதங்களில் சகோதர வாஞ்சையைக் காணலாம் என்று குறிப்பிடப்படுவதும் கவனிக்கத்தக்கது.) நடந்து கொள்ளும் நளினமும் நாகரீகமும் அவள் பெற்றிருக்கிறாள். நான் அன்பளிக்கிற இந்தப் பொருள், நான் ஏற்கனவே அனுப்பியவைகளை விட விஷேசமானதாயிருக்கும்" என்கிறான்.

பெண்களை போகப் பொருளாக, அடிமைச் சின்னமாக பாவித்தது உனக்கு உவப்பான தகவலாக இருக்கிறது என்று கோபப்படாதே. இறந்த காலங்களைத் திருத்த முடியாது. பாடங்கள் படிக்கலாம். இப்படியான இறந்த காலங்கள் தான் தற்கால பெண்ணியத் தோற்றத்திற்குக் காரணமாயிருந்திருக்கின்றன.

இன்னொரு சுவாரஷ்யமான கடிதத்தைப் பார்- "முன்னர் என் தந்தை உன்னிடத்தில் ஒரு தூதுவரை அனுப்பியிருந்தார். அவரை நீ நீண்ட நாட்களாக வைத்திராமல் உடனேயே அனுப்பிவிட்டாய். அத்துடன் ஒரு அழகான அன்பளிப்பும் அனுப்பியிருந்தாய். ஆனால் நான் இப்போது ஒரு தூதுவரை அனுப்பி வைத்திருந்த போது அவரை ஆறு வருடங்களுக்கு தடுத்து வைத்திருந்ததோடு, இந்த ஆறு வருடங்களுக்கும் நீ அன்பளிப்பாக ஏதோ அனுப்பியிருக்கிறாய் - 30 தங்கக் கட்டிகள், ஆனால் அது வெள்ளி போல் தான் தெரிகிறது".

பல்வேறு தளங்களில் எழுதப்பட்டிருக்கும் அரசியல்சார் கடிதங்களில் இதுவும் ஒன்று. Abdi Asirta என்பவன் யார்? ஒரு வேலைக்காரன், அவனொரு நாய்! அடக் கடவுளே.... அவனின் பெயரை ஓர் அரசனின் முன்னால் சொல்கிறார்களே! எனக்கு நெருக்கமாக இருக்கிற ஒருவனை அவ்விடத்தில் வையுங்கள். Amurras பிரதேசத்தை விட்டே அவனை நான் விரட்டிக் காட்டுகிறேன் பார்".

இந்தக் கடிதக் கட்டுரை ஏன் எனக்கு சுவாரஷ்யமாகப் பட்டது தெரியுமா? நமது நாட்டிலும் பேச்சுவார்த்தைகள், பரிமாறல்கள் என அரசுக்கும், புலிகளுக்குமென்று நடக்கிறது தானே. ஏன் வேறு கடிதப் பரிமாற்றங்களும் இடம் பெறுகின்றன தானே. உதாரணத்திற்கு திகதி மாறி சந்திரிகா அனுப்பி வைத்த அனுதாபக் கடிதம், தகவல் திணைக்களம் பிழை பிழையான தகவல்களுடன் சிறுபிள்ளைத் தனமாக அனுப்பி வைத்த கடிதம், சந்திரிகாவின் கல்வித்தகைமை தொடர்பாக பரிமாறப்படுகிற கடிதங்கள் எனப் பலதை அண்மை நாட்களாகப் பார்த்து வருகிறோம் தானே.

எல்லாம் சரி. சந்திரிகாவும், பிரபாகரனும் இப்படி பேச்சுவார்த்தைக்கான கடிதங்களைப் பரிமாறிக் கொண்டால் என்ன எழுதிக் கொள்வார்கள்?

நன்றி - நூலகத்திட்டம்



# ரவுடி ரதி

முதலாவது பகுதி

பருத்தித்துறை ரியூட்டரி மாணவி கமலம் கொலை வழக்கு பற்றின புதினங்கள் நியூஸ்பேப்பருகளில் அமளியாக வந்து-கொண்டிருந்த ரைமில எங்கட அக்காச்சியை யாழ்ப்பாண ரவுணுக்கு ரியூசனுக்குப் போக வேண்டாம் எண்டு சொல்லி வீட்டில மறிச்சுப் போட்டினம்.

சாப்பிடமாட்டன். ஞாயிற்றுக்கிழமை பூசை காணப் போக மாட்டன் எண்டு அடாத்துப்பண்ணிக் கொண்டிருந்த அக்காச்சி ஒரு நாள் கொஞ்சம் தெமறோன் மருந்தைக் குடிச்சுப் போட்டு தனக்கு மேலால் ரெண்டு காவோலையையும் இழுத்துப் போட்டு மூடிக் கொண்டு தோட்டக்காணிக்குள்ள படுத்திற்றா. அக்காச்சியை இந்தக் கோலத்தில கண்ட நான் அர்ச்சிட்ட சிலுவை அடையாளத்தால எங்கட சத்துருக்களிட்ட-யிருந்து... எண்டு செவம் சொல்லிக் கொண்டே ஓடிப்போய் அம்மாவிட்டச் சொன்னன்.

கார் பிடிச்சு அக்காச்சியை பெரியாஸ்-பத்திரிக்கு கொண்டுபோனம். டொக்ரர் அக்காச்சிக்கு கன்னம் கன்னமாய் போட்டு அடிச்சான். வாய்க்குள்ள மூக்குள்ள றபர் பைப்புகளை விட்ட கங்காணி, முழங்காலால அக்காச்சியின்ர நெஞ்சிலும் வயித்திலும் இடிச்சான். தற்கொலை செய்ய முயற்சித்த-துக்காக அய்நூறு ரூவாய் குற்றக்காசும் கட்டிப் போட்டு அக்காச்சியை வீட்ட கூட்டிக் கொண்டு வந்து விசாரிச்சால் அக்காச்சி அவவிலும் பதின்மூண்டு வயசு மூப்பான ரியூட்டிரி வாத்தியோட கதைக்கிறாவாம்.

பிறகு அக்காச்சி அந்த வாத்தியாரையே கலியாணம் முடிச்சா. வாத்தி பிறகும் பிறகும் ரியூட்டறியில பெட்டையளோட சேட்டை விடுறதெண்டு சொல்லி, வாத்தியாரை வேலையால நிப்பாட்டிப்போட்டினம். வாத்தி காலம்பிறக் கள்ளு, பின்னேரக் கள்ளு, காய்வெட்டிக் கள்ளு, நாலாங்கட்டைக்கள்ளு எண்டு குடிச்சுக் குடிச்சு றோட்டு றோட்டாய் விழுந்தெழும்பித்திரிய அக்காச்சி சவுதிக்கு கவுஸ்மேட்டா வேலைக்குப் போனா.

அக்காச்சி சவுதிக்குப் போன நாள் தொட்டு பின்னேரக் கையானால் வாத்தி நிறை தண்ணியில வந்து எங்கிட வீட்டுப் படலையை உலுக்கி உலுக்கி "நம்ம ஊரு சிங்காரி சிங்கப்பூரு போனாளாம்.. மானங்-கெட்ட குடும்பம், ரோசங்கெட்ட குடும்பம், விட்டு வாங்கிக்குடுப்பம்..." எண்டு குளறிக்கத்தி அட்டகாசம் செய்வார். அந்தத் துண்டுக்குள்ள தான் நான் முன்னம் முன்னம் பென்ர் கட்டத்தொடங்கினது. பென்ர் தெரியக் கூடியதாக சாரத்தை தூக்கி சண்டிக்கட்டும் கட்டிக் கொண்டு அக்காச்சி சவுதியிலையிருந்து அனுப்பியிருந்த யப்பான் உருலோசையும், வலுகவனமாய் கையில இருந்து கழட்டி "இதக்கொஞ்சம் பிடியணை" எண்டு அம்மாவிட்ட குடுத்துப் போட்டு றோட்டுக்கு ஏறி வாத்தியாரின்ர நெஞ்சிலும் மூஞ்சியிலும் பாய்ஞ்சு காலால உதைப்பன்.

ஒரு உதைக்கு வாத்தியார் மூண்டு கரணமடிச்சு விழுவார். ஒரு நாள் நான் வாத்தியாரை றோட்டில விழுத்தி அவற்றை நெஞ்சில காலால ஒரு தட்டுமறிப்பு பூட்டுப் போட்டன். அம்மா அந்த வெறிகாரன விடு ராசா எண்டு என்னைக் கும்பிட்டு மண்டாடிக் கேட்ட பிறகு தான் வாத்தியை விட்டன்.

இப்ப மகள் பெரிசா வளர்ந்து போட்டாள் எண்டு சொல்லி அக்காச்சி சவுதிக்குப் போறதில்லையாம். ஆனால், வாத்தியாரின் அட்டகாசமும், கொஞ்சமும் குறையயில்லையாம். நாட்டுப்பிரச்சினை, அதைவிடப் பெரிய பிரச்சினையாக வாத்தியாரின்ர பிரச்சினை, எல்லாத்தையும் கணக்கில எடுத்துக் கொண்டு அக்காச்சி பெட்டையையும் கூட்டிக்கொண்டு இந்தியாவுக்கு வள்ளத்தில போகப்போறதா கடிதம் போட்டா. அக்காச்சியின்ர பெட்டையை இந்தியாவில இருந்து நான் பிரான்சுக்கு கூப்பிடுறதாய் அக்காச்சிக்கு மறுமொழி அனுப்பியிருந்தன். இதுக்கு கொஞ்சநாள் செல்ல வாத்தியாரிட்ட இருந்து எனக்கொரு லெற்றர் வந்தது.

அன்பும் பட்சமுமுள்ள மச்சானருக்கு எல்லா சுகத்தையும் கொடுக்குமாறு உத்தரிய மாதா தாயை வேண்டிக் கொண்டு உமது அத்தார் கண்ணீரில் தொட்டு எழுதும் கடிதம். உமது அக்காவும் நானும் பதினேழு வருடங்களாய் மேடையேற்றி வந்த நாடகத்தின் கடைசிக்காட்சி போன மாசம் மேடையேறியது. இந்த நாடகத்தை இயக்கிய புத்திசாலி டைரக்டர் யார் என்பதை எனக்கு அறியத் தரவும். உமது மருமகளையும் உமது அக்கா தாஸி அபாராஞ்சி தன்னைப் போலவே வேசையாடித் திரிய என்னிடமிருந்து பிரித்துக் கொண்டு ஓடி விட்டாள். நான் மீண்டும் குடிக்கத் தொடங்கி விட்டேன்.

அம்மாவுக்கு ஒரு பொட்டு!

அப்பாவுக்கு ஒரு பொட்டு!

அத்தானுக்கு ஒரு பொட்டு!

அக்காவுக்கு ஒரு பொட்டு!

ஆனால் மனைவிக்கு பொட்டு இல்லை. நான் கூடிய சீக்கிரம் என் மனைவிக்கு பொட்டம்மான் பொட்டு வைப்பேன்!

இப்படிக்கு
உமது அத்தானார்.
மா. ஆரோக்கியராஜா
(முன்னாள் தமிழ் ஆசிரியர் விக்கினா கல்வி நிலையம்)

1983ஆடிக் கலவரத்தில வீடுகளையும் கடைகளையும் கொள்ளையடிச்சவங்கள் அண்ணர் வேலைசெய்த வி.என்.ஆர். புகையில கொமிசன் வியாபாரம் நடந்த செக்கட்டித்தெருவ கொள்ளையடிக்க கொஞ்சம் கஸ்ரப்பட்டாங்களாம். முதலாளிமாரெல்லாம் போட்டது போட்டபடி ஓடிப்பறிஞ்சவிட, பொடியள் தரவளியள் கொஞ்சம் நிண்டு பிளேன் சோடாப் போத்தல் எறிஞ்சு அடிபட்டாங்களாம். இந்த அலக்கு மலக்குக்க அண்ணர் காசப்பட்டறையில கையை விட்டிருப்பேர் எண்டு நினைக்கிறன்.

அடிச்ச காசை ஏஜென்சிக்குக் கட்டி அடுத்த கிழமையே அண்ணர் பிரான்சுக்கு பிளைட் ஏறியிற்றேர்.

எல்லாம் முடிய முதலாளி நாரந்தனை சூசைப்பிள்ளையன் அவன்ர கோளையாக்க-ளோட எங்கட வீட்டுக்கு வந்து அண்ணரைத் தேடினான். அண்ணர் களவெடுத்துக் கொண்டு வந்த காசு எங்க? எண்டு கேட்டு வெருட்டினான். அண்ணியையும் அப்ப ஒரு வயசுக் குழந்தையாய் இருந்த ரதியையும் மாஞ்சுப்போட்டு மறியல் வீட்டில அடைக்கப் போறதாய் சொன்னான். இப்படியான காலத்தில தான் நான் இயக்கத்தில சேர்ந்தனான்.

நான் கொம்பனியில இருந்த காலத்தில அண்ணர் எனக்கொரு கடிதம் எழுதியிருந்தேர்.

இயக்கமெல்லாம் பொய்-வேலை நீ இயக்கத்துக்குத் துண்டு குடுத்துப் போட்டு பிரான்சுக்கு வா. நான் காசு அனுப்புறன் எண்டு எழுதியிருந்தேர்.நான் அண்ணியிட்ட உங்கட புரியன் வெளிநாட்டுக்கு கோப்பை கழுவப் போனால், கோப்பை கழுவுற அலுவலைப் பார்க்க வேணும். அதை விட்டுப்போட்டு விடுதலைப் போராட்டத்தை விமர்ச்சிக்கிற வேலையள வைச்சுக் கொள்ள வேண்டாமெண்டு உங்கட புரியனுக்கு மறுமொழி எழுதிப்போடுங்க எண்டு சொல்லிப் போட்டுப் போட்டன்.

ரதிக்கு ஒரு ஏழு வயசு இருக்கேக்க அண்ணியும் ரதியும் அண்ணரிட்ட பிரான்சுக்கு போய் அண்ணி மட்டும் எனக்கு ஒரு பிறந்தநாள் கார்ட் போட்டா. அண்ணி அடுத்த கார்ட் போடுறதுக்கு முன்னம் நான் பிரான்சுக்கு வந்திற்றன்.

நான் பிரான்சுக்கு வந்து சேர்ந்த பிறகு கூட பிறகு அண்ணர் என்னட்ட முகம் குடுத்துப் பறையிறதில்ல. நான் பிரான்சில சீவிக்கிற இம்மட்டுக் காலத்தில மூண்டு தரம் மட்டும் அண்ணற்ற வீட்டுக்குப் போய் போன கையோட திரும்பி வந்திருக்கிறன்.

நான் இருக்கிற பரிஸ் சிற்றியில இருந்து ஒரு எழுவது எண்பது கிலோமீற்றருக்கு அங்கால அண்ணற்ற குடும்பம் இருந்தது. அந்த ஏரியாவில தமிழ் ஆக்கள் வலு குறைவு. கடைசியா நான் அண்ணர்வீட்ட போகயிக்க பயணத்தில வாசிக்கிறதுக்கு ஒரு தமிழ் பேப்பர் கொண்டு போனான். அந்தப் பேப்பரில முன்பக்கத்தில விஜயகாந்தின்ர படம் இருந்தது. அண்ணர் அந்தப் படத்தைப் பார்த்து "இது ஆர் பிரபாகரனோ?" எண்டு கேட்டார்.

ரதி இரவு பத்துக்கும் வீட்ட வாறாள். பன்ரெண்டுக்கும் வீட்ட வருவாள். விடியவும் வருவாள். என்னக் கண்டால் பொன்சு செவ் எண்டு கட்டிப்பிடிச்சுக் கொஞ்சுவாள். நல்லா சிகரெட் பத்தப் பழகியிற்றாள் எண்டு அவள் என்னக் கொஞ்சயிக்க தெரியுது. தாய் தகப்பன் எங்க போறாய்? எங்க வாறாய்? எண்டு அவளக் கொன்றோல் பண்ணுமாப் போல தெரியல்ல.

வாத்தி வோர்ணிங் லெற்றர் போட்டதப் பற்றி, அண்ணருக்கு ரெலிபோன் அடிச்சுச் சொன்னன். "எங்கட குடும்பமே ஒரு சேர்க்கஸ் குடும்பமப்பு. ஒருத்தரும் சொல்வழிக் கேக்காயினம். என்னத்தை-யெண்டாலும் பட்டு உத்தரிக்கட்டும்" எண்டு அண்ணர் சளாப்பல் கதை கதைச்சார். பிறகு அண்ணி என்னட்ட கனநேரம் கதைச்சா. ரதிக்கு வயித்தில பிள்ள தங்கி அழிச்சதாம்.

ஆரோ அவளோட படிக்கிற வெள்ளத்-தோலோட தொடுப்பாகி பிள்ளய வாங்கிற்-றாளாம். அவன்ர ஸ்கூட்டர வாங்கிக் கொண்டு ரெண்டு நாளா பள்ளம் புட்டியான இடங்களில ஸ்கூட்டர் ஓடித்திரிஞ்சும் அவளால பிள்ளையைக் கரைக்கேலாமல் போய் பிறகு கிளினிக்கில போய் பிள்ளையை அழிச்சதெண்டு எல்லாம் முடியத்தான் ரதி தாய்க்காரியிட்ட சொல்லியிருக்கிறாள்.

அந்தப் பொடியன கலியாணம் செய்யிறதெண்டால், செய் எண்டு அண்ணரும் அண்ணியும் சொல்லி-யிருக்கினம். அதுக்கு ரதி "அவனொரு அலுப்புத் தட்டுற சோம்பேறி" எண்டு சொல்லிப்போட்டாளாம். ஆனால் ரதியின்ர நெஞ்சில பிள்ளையை அழிச்சதால கொஞ்சம் கவலை இருக்குமாப் போல தெரியுதெண்டும் அண்ணி சொன்னா.



அடுத்த கிழமை ஒரு ஊதைச்சட்டை, ஒரு கிளிஞ்ச களிசான், காலுக்குச் சில்லுப் பூட்டி ஓடுற சப்பாத்துகள் தோளில தொங்க கையைப் பொத்தி ஸ்ரைலாய் இருமிக் கொண்டே ரதி என்ர ரூமுக்கு சொல்லாமல் கொள்ளாமல் வந்து நிண்டாள்... கொஞ்சம் ஊதிப் போயிருந்தாள்.

"செவ் வீட்டில கொஞ்சம் சண்டை. ஒரு கிழமைக்கு உங்களோட நிக்கப் போறன்" எண்டாள். இப்படித் தான் திடீரெண்டு வருவாள். 50 பிராங் காசு வேணுமெண்-டுவாள். சிலநேரம் என்ர ரூமில தங்குவாள். அவள் போனப்பிறகு ரூமில காசோ, மோதிரமோ, புது ஜீன்சா ஏதாவதொண்டு காணாமல் போயிருக்கும். சரியான வறுவாஸ் கள்ளி.

ரதியோட ஒரு கடைக்கண்ணிக்கோ, சபை சந்திக்கோ போய் வர ஏலாது. முதல் பிரச்சினை ரெயினில ரிக்கட் எடுக்க மாட்டாள். நான் எடுத்துத் தாறனெண்டாலும் "செவ் நீங்கள் பெரிய நிச்சோ?" எண்டு நளினம் பண்ணுவாள். ரிக்கட் செக்கரோட நாளும் பொழுதும் சண்டை. போன வரியம் தன்ர சினேகிதப் பெட்டையோட காருகள் லொறியில லிப்ட் கேட்டுக் கேட்டே ஜெர்மனிக்கு ரூர் போய் வந்தவளாம்.

நன்றி - நூலகத்திட்டம்



# ஷோபா சக்தி



இங்கத்தைய சுப்பர் மார்க்கட்டுகளில் எத்தின செக்குருட்டி? எத்தின எலெக்ரோனிக் மெஷின் ஒண்டுக்கும் அஞ்சாள். என்னோட ஒண்டுந் தெரியாத வவா மாதிரி சுப்பர் மார்க்கட்டுக்கு வருவாள். வெளியில வந்து எனக்கொரு கூலிங் கிளாசோ, சொக்லேட் பக்கட்டோ பிறசென்ற் பண்ணுவாள். எப்படித்தான் கடத்திக் கொண்டு வாறாளோ? பிடிபட்டால் நானும் சேர்ந்து பரிசுகெடுவன்.

றோட்டில நடக்கயிக்க சிவப்புலைற்றும் பாக்காளாம். பச்சை லைற்றும் பாக்காளாம். குறுக்கு மறுக்காய் ஓடினாள். அடிக்கிற மாதிரி வந்த றைவர்மாருக்கு விரலடிச்சுக்காட்டி "ஓங்குலே' எண்டு கத்தினாள். ஓங்குலே எண்டால் பிரெஞ்சில படு தூசணம். பாவி கடைக்குப் போனாலும் ஓங்குலே. ரயிலில ரிக்கற் செக்கரோடும் ஓங்குலே. ரீ.வி.பார்த்துக் கொண்டு இருந்தாலும் ஓங்குலே, சில நேரம் தன்னாரவாரமும் ஓங்குலே. சரியான பொம்புள ரவுடி.

ரதி வந்த அண்டு இரவு நான் வைன் குடிச்சுக் கொண்டிருந்தன். அவள் ஒரு அரைக் கிளாஸ் குடிச்சாள். "செவ் டான்ஸ் ஆடுவம் வாறீங்களா?" எண்டு கேட்டாள்?", எனக்கு டான்ஸ் ஆடத் தெரியாது" எண்டு சொல்லிப் போட்டன், என்னோட பலதும் பத்தும் பறைஞ்சு கொண்டிருந்தவள் ஒரு கட்டத்தில "செவ் நீங்கள் முந்தி இயக்கத்தில இருக்கேக்க நிறைய ஆமிக்காரரையா கொலை செய்தனீங்கள்?" எண்டு கேட்டாள்.

எனக்கு ஒரே கென்பியூசன். என்னைப் பார்த்து நீ மாற்று இயக்கத்தை படுகொலை செய்தனீயா? உங்கட இயக்கத்துக்கேயே படுகொலை செய்தனியா? அப்பாவி மக்களைக் கொலை செய்தனியா? எண்டுதான் இதுவரை கேட்டிருக்கினம். இவள் புதுமாதிரியாகக் கேட்கிறாள்.

யாழ்ப்பாண டச்சுக்கோட்டை ஆமிக்காம்பைச் சுத்தி எங்கட சென்ரி பொயின்ருகள் இருந்திச்சு.

ஆமிக்காம்பில ஷெல் குத்துற சவுண்டைக் கேட்டாலே அந்த சவுண்டை வைச்சே குத்தினது என்ன ரைப் ஷெல், எத்தின இஞ்சி எண்டு கல்குலேட் பண்ணிச் சொல்லுற அளவுக்கு விண்ணனுகளும் எங்களிட்ட இருந்தார்கள்.

ஷெல் குத்தினால் அது காத்தில ஆத்துப் பறந்து இருபது இல்ல முப்பது செக்கனில விழுந்து வெடிக்கும். ஆனால், எங்க விழுந்து வெடிக்கு எண்டு தெரியாது. எங்கட சென்ரி பொயின்ரில கூட விழுந்து வெடிச்சாலும் வெடிக்கும். மண்மூட்டையளுக்குப் பின்னால காதைப் பொத்திக் கொண்டு பல்லுக்கு நடுவில சீலத்துண்டை கடிச்சுக் கொண்டு கண் ரெண்டிலும் சாதுவான பயமும் சாதுவான திரில்லும் ஒருமிக்க கலந்திருக்க ஷெல்லுக்காய் பாத்துக் கொண்டிருப்பம். இப்ப என்ர மறுமொழிக்காய் பாத்துக்கொண்டிருக்கிற ரதியின்ர கண் ரெண்டும் அப்படித் தான் இருக்கு.

காலம்பிற பத்து மணிக்கு ஆரோ கோலிங்பெல் அடிச்சினம். கண்ணை முழிச்சுப் பாத்தன். ரதி ஒரு மூலைக்குள்ள ஓவெண்டு காலைவிரிச்சுப் படுத்துக் கிடந்தாள். இப்படியும் அவளின்ர கடவாயில வீணி வடியுது. அவளை உலுக்கி எழுப்பினன். எழும்பி தலைவிரிகோலமாய் கண்ணை கண்ணை புலுந்திக் கொண்டிருந்தாள். கதவைத் திறக்க கொம்யூனிஸ்ட் துரையர் நிக்கிறார். அவரும் கண்ணைச் செம்மிக் கொண்டு தான் நிக்கிறார்.

"என்ன நேற்று வாசலடியில ஒரு மொறீசியஸ் பொட்டையோ போனியாமே?" எண்டு கேட்டுக் கொண்டு ரூமுக்குள்ள உள்ளிட்டவர் ரதியைக் கண்டவுடன். சைவண்டாகி ஒரு மூலையைப் பிடிச்சு சுவரில் சாஞ்சு இருந்து கொண்டார்.

இண்டைக்கு உத்தரிப்பு ஸ்தலம் தான்.

ஊரில எங்கட வீடும் கொம்யூனிஸ்ட் துரையற்ற வீடும் ஒரு வேலி. இந்த நாடுகளில் பதினெட்டு வயசு வந்த உடன பொடிபொட்டைள் தாய் தேப்பனை விட்டுப் போட்டு வெளியில போய் சீவிக்கிற மாதிரி முந்தி எங்கட ஊரில பன்ரெண்டு பதின்மூண்டு வயசு வந்ததும் எல்லாப் பொடியளும் கொழும்புக்கோ இல்லாட்டி அளவை, நிற்றம்புவ, வியாங்கொட எண்டு சிங்கள நாட்டுப் பக்கத்துக்கோ கடையளில வேலைக்குப்போகவேணும். அப்படிப்போன துரையர் எப்படி கொம்யூனிஸ்ட் துரையர் எண்டு பட்டம் வாங்கினார் எண்ட காரியம் எனக்குச் சரியாகத் தெரியாது.

ஆனால், செல்வநாயகமும் வி.பொன்னம்பலமும், காங்கேசன்துறை பார்ளிமென்ற் தொகுதியில நேரடியாக மோதேக்க கொழும்பிலிருந்து ரெண்டு மாசம் லீவெடுத்துக் கொண்டு வந்து கொம்யூனிஸ்ட் துரையர் வி.பொன்னம்பலத்துக்கு எலெக்சன் வேலை செய்தது அப்ப ட்ஸ்ற் பொடியனாய் இருந்த எனக்கும் சாடையாய் தெரியும்.

ஒரு நாள் கொம்யூனிஸ்ட் துரையருக்கு கூட்டணிப் பொடியள் சாறுபறக்க அடிச்சுப் போட்டாங்கள். ரெத்தம் ஒழுக ஆளை வீட்டில கொணந்து பாயில வாழையில விரிச்சு கிடத்தியிருந்தினம். இந்தா மூளை துடிக்குது. அமுதம் துடிக்குது ஆள் முடியப் போகுது எண்டு பறைஞ்சு கொண்டே கார் பிடிச்சு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனவையள். அது வலியசீவன். நாலாம்நாளே ஆஸ்பத்திரியில துண்டை வெட்டிக் கொண்டு நேர வி. பொன்னம்பலம் வீட்ட தான் போனேராம்.

ஆனால் அந்த லெக்சனில வி. பொன்னம்பலம் தோத்துப் போனேர். அதுக்குப் பிறகு ஒரு கூட்டத்தில வி.பொன்னம்பலம் பேசேக்க "எனக்கு வாக்களித்த தொழிலாள வர்க்கமே! உங்களுக்கு நன்றி. ஆனால, நானோ எனது வாக்கை தந்தை செல்வாவுக்குத் தான் போட்டேன்" எண்டு சொன்னேராம்.

இந்த இடத்தில தான் அரசியல் பாதையைக் கைவிட்டு ஆயுதபாதைக்குத் தான் திரும்பினதாய் இண்டைக்கும் கொம்யூனிஸ்ட் துரையர் சொல்லிக்கொண்டிருக்கிறார். ஆனால் இவருக்கும் ஆயுதத்துக்கும் உள்ள ஒரே ஒரு சம்பந்தம் என்னவெண்டால் எழுபத்தேழுக் கலவரத்தில இவற்றை கையை சிங்களப் பொலிசுக்காரர் துவக்குச் சோங்கால அடிச்சு முறிச்சது மட்டும் தான்.

நெளிவு, சுழிவு, தெரியாத ஆத்துமம். அந்த இயக்கப்பொடியளை ஏன் சுட்டனீங்கள் எண்டு இந்த இயக்கத்திற்றயும் இந்த இயக்கப் பொடியளை ஏன் சுட்டனீங்கள் எண்டு அந்த இயக்கத்திற்றயும் நியாயம் தெண்டி ஊரில இருந்த இயக்கத்திட்டயும் அடிவாங்கின ஆள். பிரான்சுக்கு வந்து கொஞ்சக்காலம் தான். ஆனா ராப்பகலா வேலை செய்து மனிசி பிள்ளையையும் எடுப்பிச்சுப் போட்டார். என்னோட கொம்யூனிஸ்ட் துரையர் வலுநேசம். ஆனால், ஆள் தண்ணி போட்டுதெண்டால் ஊத்தை, ஊத்தை... படு ஊத்தை... ஆளுக்கு இண்டைக்கு காலம்பிற வெள்ளனவே நல்ல டிம்.

ரதியோட கொம்யூனிஸ்ட் துரையர் நடப்பு நாட்டுநிலவரங்களை டிஸ்கஸ் பண்ணிக் கொண்டிருந்தார்.

ரதியின்ர படிப்பு, வேலைவாய்ப்பு தன்ர பிள்ளையள படிப்பிக்க வேண்டிய படிப்பு எண்டு கதைச்சுக் கொண்டிருந்தார். ரதி கண் ரெண்டையும் விரிச்சுக் கொண்டு ஏதோ பரம்பர பிரெஞ்சுக்காரி சாங்கத்தில துரையருக்கு விளங்கப்படுத்திக் கொண்டிருந்தாள்.

எனக்கு என்னெண்டு தெரியாத ஒரு எரிச்சல். "அண்ண உங்கட பொட்டையள் பெரிசான உடன அதுகளோட இந்தியாவுக்கு போய் செற்றிலாகுங்கோ. இங்கயிருந்தால் பிள்ளையள் சீரளிஞ்சு போகுங்கள்" எண்டு துரையரிட்ட சொன்னன். கடைக்கண்ணால ரதியக் கவனிச்சன். அவளின்ர முகத்தில ஒரு சேஞ்சும் இல்லை.

"என்ன காரணங்களை அடிப்படையாக வைச்சு நீ இந்தக் கருத்தை சொல்லுறாய்" எண்டு நிமிர்ந்து ஒரு விவாதத்துக்கு ரெடியானார் துரையர். அவற்றை குரலில் பேச்சில ஒரு கொம்யூனிஸ்ட் ரியூன் ஓடத் தொடங்குது.

"அண்ணே எத்தின காலம் இந்த நாட்டில சீவிச்சாலும் எங்கட தோல் கறுப்புத் தான்" எண்டன். இப்பயும் ரதிய கவனிச்சன். அவளில சேஞ்சில்ல.

கொம்யூனிஸ்ட் துரையருக்கு எனக்கு ஒரு பெரிய பதில் தரவேணுமெண்ட ஆசை இருக்கிறது தெரியுது. ஆனால் வெறிக்கொடுமையில அவரால நிதானமா கதைக்க ஏலாமல் கிடக்குது எண்டு நினைக்கிறன்.

"தம்பி டேய் இதக்கேள். ஆரட்ட இல்ல நிறவெறி. எங்களட்ட இருக்கிற நிறவெறி உங்க ஆரிட்ட இருக்குது? என்ர மனுசி என்னெண்டு என்ர பிள்ளைக்கு சோறு தீத்திறாள்? சாப்பிடு இல்லாட்டி கறுவலிட்ட பிடிச்சுக் குடுத்துப்போடுவனெண்டு சொல்லித்தீத்தினாள். எப்படி வீரகேசரியில் மணமகள் தேவை அட்வடிஸ்மன்ட் குடுக்கிறாங்கள்? சிவந்த அழகிய பெண் தேவை எண்டு விளம்பரம் செய்யிறாங்கள். இந்த இடத்தில தான் நிறவெறியே தொடங்குது" எண்டு கையிலிருந்த வைன் கிளாசை ஒருக்கா நிலத்தில் மெதுவாக குத்தினார் துரையர்.

பிறகு கொஞ்சம் மெதுவாய் பல்லைக் கடிச்சுக்கொண்டு சொன்னேர் "சிவத்தப் பொம்பிளையும் கறுத்தப் பொம்பிளையும்... காத்தியக் கிடக்க லைற்றை நூத்தா எல்லாம் ஒண்டு தான்."

எனக்குப் பத்திக் கொண்டு வந்துது. என்ன கதைக்கிறேர் இவர்? தன்ர பொம்பிள்ளையளுக்கு முன்னால இப்பிடி விளக்கு நூக்கிற கதை கதைப்பாரோ? இந்த ரதிச்சனியன் இப்பிடி சரிக்குச்சரியாய் இருந்து வைனும் குடிச்சுக் கொண்டு இருக்கிறதால மரியாதையில்லாமல் இப்படி தூசணம் சொல்லுறாரோ? துரையரை இழுத்துப் போட்டு மின்னவேணும் போல கிடந்தது. என்ர இடக்கையில இருந்த வைன் கிளாசுக்கு வலக்கையை பொத்திப்பிடிச்சுக் குத்தினன். "கதையை நிப்பாட்டுங்கோ..." எண்டு நறுமினன். கிளாஸ் மூண்டு துண்டாய்ப் போச்சு. ரதி திடுக்கிட்டு எழும்பி நிண்டாள். கொம்யூனிஸ்ட் துரையரும் சுவரைப் புடிச்சுக்கொண்டு மெல்ல எழும்பினேர்.

"ஏன் இப்ப கிளாஸை உடைச்சனி?".

"அண்ணே, உங்களுக்கு கூடிச் போச்சு. நீங்கள் வீட்டை போங்கோ.. நான் நாளைக்கு உங்களோட கதைக்கிறன்"

"டேய் நீ என்ன பெரிய சண்டித்தன மயிரோ? தெரியுமா கைவரிசை... தம்பி உன்னைத் தெருவில கலைச்சுக் கலைச்சுக் காரால அடிச்சுக்கொல்லுவன். தெரிஞ்சுகொள்."

"சரியண்ணே நீங்க போங்கோ நாளைக்குக் கதைப்பம்" எண்டு ஆளைப் பிடிச்சு றூம் கதவுக்கு கொண்டு வந்தன். கொம்யூனிஸ்ட் துரையர் என்னை ரெண்டு கையாலையும் உன்னித்தள்ளினேர்.

"டேய் தள்ளி நில்லு. தேகத்தில முட்டாத... தொட்டியெண்டால் நாயே கொலை செய்து போடுவன். நான் எத்தின கொலை செய்தனான் எண்டு தெரியுமாடா உனக்கு? துரையருக்கு நேரா நிக்கேலாமல் கிடக்கு. அவர் கையை துவக்கு சுடுற பொஸிசனில புடிச்சுக் கொண்டு கொலைக் கணக்கு வழக்கு கதைக்க, எனக்கு பயங்கர சிரிப்பு வந்தது. சிரிச்சுக்கொண்டே "ஓமண்ண நீங்கள் கன கொலையள் செய்தனீங்கள்" எண்டு கதவைத் திறந்து அவர வெளியில விட்டன். கதவை அடிச்சுச் சாத்தினன்.

இப்ப ரதியைப் பார்த்தால் விறைச்சுப்போய் நிக்கிறாள்.

"என்ன பிள்ளை" எண்டு கேட்டன். ரதி பல்லைக்கடிச்சுக்கொண்டு நடுங்கிக்கொண்டிருக்கிறாள். அவளின்ர கன்னத்தில் கண்ணீர் ஓடுது.

"செவ் நான் எங்கட வீட்ட போறன்"

"என்ன ஒரு கிழமை என்னோட இருப்பன் எண்டாய்"

"இல்ல செவ் நான் வீட்ட போறன்" எண்டு நடுங்கிக் கொண்டு சொன்னாள்.

இரண்டாவது பகுதி

அதுக்குப்பிறகு ரதி என்ர றூமுக்கு வாறதில்லை. எனக்கு போன் அடிக்கிறதும் இல்ல! கொஞ்ச நாளைக்குப் பிறகு அண்ணியோட கதைக்கேக்க "ரதி அண்டைக்கு ஏன் என்ர ரூமில்லை இருந்து அழுது கொண்டு போனவள்" எண்டு கேட்டன். அதப்பத்தி ரதி அண்ணிக்கு பயந்து கொண்டே சொல்லியிருக்கிறாள். "துரை அங்கிள் நான் எத்தினை கொலை செய்தனான் தெரியுமோ? எண்டு கேக்க சித்தப்பா சிரிச்சுக் கொண்டு நிண்டவர்"

நன்றி: அம்மா

நன்றி - நூலகத்திட்டம்



## நினைவுக் குறிப்புகள் - 4

பாடசாலையில் நடந்த அந்த ஆரம்ப கால அனுபவம், என்னுடைய முழு பாடசாலை வாழ்வுக் காலமும் நடைபெறவிருந்த பல விடயங்களுக்கான ஒரு முன் அனுபவமாக இருந்தது.

பொருளாதார ரீதியாகவும், சமூக அந்தஸ்து ரீதியாகவும் என்னுடைய நிலையானது தாழ்ந்ததாக இருந்த போதிலும் ஆங்கில மொழியைப் பயன்படுத்துவதில் எனக்கிருந்த திறமை - காலனித்துவ ஆட்சியில் அதிகாரத்துக்கான ஒரு சக்தி வாய்ந்த கருவியாக இருந்த அந்த ஆங்கில மொழித்திறமை - எனது இந்தப் பலவீனங்களைப் பெரிதும் சரிசெய்து வந்தது.

ஒரு பௌத்தராகவும் ஏகாதிபத்திய எதிர்ப்பாளராகவும் இருந்தாலும் ஏனையோரைப் போல அப்பாவும் மிசனரிக் கல்வியின் செயற்திறன் பற்றி நம்பிக்கை கொண்டிருந்தார்.

இதனால், எனக்கு ஒன்பதாவது வயதாக முன்பாகவே நான் சென்ற் தோமஸ் கல்லூரியில் சேர்க்கப்பட்டேன். இங்கு படிப்பது ஆரம்பத்தில் எங்கள் பொருளாதார நிலைக்கு பெரும் கஸ்டமாக இருந்த போதிலும் இரண்டாண்டுகளில் எனக்கு புலமைப்பரிசில் கிடைத்ததை அடுத்து அந்தச்சுமை குறைந்தது.


தொடர்ந்து எனது பல்கலைக் கழகப் பட்டப்படிப்பு வரை இந்தப் புலமைப்பரிசில் உதவியிலேயே நான் படித்தேன் (நான் பட்டம் பெற்று இரண்டாண்டுகட்குப் பின்னர் தான் இலவசக்கல்வி நடைமுறைக்கு வந்தது.)

தாகூரின் கீதாஞ்சலியைப் படித்த போது எனக்குப் பதின்நான்கு வயதிருக்கும் என்று நினைக்கிறேன். அது எனது இளம் பருவத்துக் கனவுகளின் எழுச்சியை வசீகரப்படுத்தியது. என்னில் நடந்து கெண்டிருந்த மாற்றங்கள் இரண்டொரு வருடங்களுக்குப் பிறகு ஸ்ரற்சச்சியுடன் முழுமை பெறுகின்றன. ஒருநாள் சிலவேளை தவறாக இருக்கக்கூடிய ஆனால் நேர்மையான ஒரு சிந்தனையால் தூண்டப்பட்டு நான் அப்பாவிடம், ஒரு (பௌத்த) கோவிலின் முன்பாக நின்றபடி கூறினேன்:

"நான் 'பன்சில்' எடுக்க கோவிலுக்குள் வரப்போவதில்லை, ஏனென்றால் நான் கடவுளை நம்புகிறேன்."

அப்பாவுக்கு இது பெரிய அதிர்ச்சி. கடவுளை நம்புவது என்பது அப்பாவைப் பொறுத்தவரை ஒரு மூடநம்பிக்கையின் பாற்பட்ட அபத்தம்.

அவரது விருப்பத்துக்குரிய இங்கர்சால் போன்ற பகுத்தறிவுச் சிந்தனையாளர்களால் ஏற்கனவே அம்பலப்படுத்தப்பட்ட விடயம் இது. இவர் உடனடியாக எனது பாடசாலை என்னை கிறிஸ்தவ மதத்திற்கு மதமாற்றம் செய்துவிட்டது என்று தவறாக நம்பத் தொடங்கி விட்டார்.




**தலைமறைவு வாழ்க்கை**

**றெஜி சிறிவர்த்தன**

தாகூர் அவரது கவனத்துக்குட்படாத ஒருவராகவே இருந்தார். மாதக் கணக்கில் இது எனது குடும்பத்தில் ஒரு கவலைக்குரிய விடயமாக இருந்து வந்தது. இறுதியில் நான் சென்ற் தோமஸ் இலிருந்து ஆனந்தாவுக்கு மாற்றப்பட்டேன். இந்தச் சம்பவம் நான் திடீரென ஒரு 'கிறேனொ'ன்றினால் தூக்கி வீசப்பட்டு விட்டேனென்ற ஒரு உணர்வை எனக்கு ஏற்படுத்தியது. ஆயினும், இறுதியில் இதற்காக நான் சந்தோசப் பட்டேன். இன்றுவரை இவ்வாறு மாற்றப்பட்டதற்காக நான் சந்தோசப்படுகிறேன்.

சென்ற் தோமஸ் பெரிதும் மேல்தட்டு மத்தியதர வகுப்பினர்க்கான பாடசாலையாகவே இருந்தது. அத்துடன் அங்குள்ள சூழல் பெரிதும் பிரிட்டிஷ்சாருக்கு சார்பான தன்மையையே கொண்டிருந்தது. (எனது நாவலான "ஞாபகச் சின்னங்களுக்கு மத்தியில்" இல் எனது பாடசாலைக் கால உண்மை அனுபவங்கள் இரண்டைப் பற்றி நான் சொல்கிறேன்:

வார்டன் பாடசாலை அசம்பிளியைக் கூட்டி ஐந்தாம் ஜோர்ஜ் மன்னருடைய மரணத்தை அறிவித்து 'மிகவும் மேன்மை தங்கிய நல்ல மன்னர்' என்று குறிப்பிட்டார் என்பதையும், நான் 'சூரிய மல்' நினைவு நாளன்று அம்மலரை அணிந்திருந்ததற்காக எனது சக மாணவனொருவனால் வார்டனிடம் காட்டிக் கொடுக்கப்பட்டேன் என்பதையும் அதில் சொல்லியிருக்கிறேன்.

எனக்கும் எனது சக மாணவர்களுக்கும் இடையிலிருந்த வர்க்க வித்தியாசம் எந்தளவுக்கு நான் சோசலிச சார்பு நிலைநோக்கி வரக் காரணமாய் அமைந்தது என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், என்னை அறியாமலே இதன் சில கூறுகள் என்மீது தாக்கம் செலுத்தியிருக்க வேண்டும் என்றே நினைக்கிறேன்.

எனது உடைகளை அம்மா தான் எனக்குத் தைத்துக் கொடுப்பார். தையல் கூலியை மிச்சம் பிடிக்கலாமென்பது தான் இதற்குக் காரணம். பாடசாலைச் சீருடையைப் பொறுத்தவரை இது ஒன்றும் சிக்கலான விடயமுமல்ல. வெள்ளைச் சேட்டும் நீலக் காற்சட்டையும் இருந்தாலே போதும். அத்துடன் எனக்கு உடையின் நேர்த்தி, அளவு என்பன குறித்து அவ்வளவாக எதுவும் தெரிந்திருக்கவுமில்லை.

ஆனால் ஒரு பரிசளிப்பு விழாவின் போது, எனக்கான பரிசை வாங்குவதற்காக அம்மாவால் புதிதாகத் தைக்கப்பட்ட உடையை அணிந்து சென்றேன். வழியில் என்னைக் கண்ட எனது வகுப்பு மாணவனொருவன் என்னிடம் கேட்டான்: "உனக்கு ஒரு பரிசு இருக்கிறதல்லவா? அதை நீ வாங்கவில்லையா?" நான் வாங்கப் போகிறேன் என்று சொன்ன போது அவன் எனது உடையத் திரும்பவும் உற்றுப் பார்த்து விட்டு எதுவும் பேசாமல் போய் விட்டான்.

ஆனால் அவனது பார்வையில் இருந்தது என்ன என்பதை நான் புரிந்து கொண்டேன். அதாவது அந்த உடைகள் இந்த மாதிரியான விழாக்களுக்குக் கொஞ்சம் கூடப் பொருத்தமில்லாதவை என்பது தான்.

ஆனால் ஆனந்தா அப்படி இருக்கவில்லை.

**(இன்னும் வரும்)**

எனக்கும் எனது சக மாணவர்களுக்கும் இடையிலிருந்த வர்க்க வித்தியாசம் எந்தளவுக்கு நான் சோசலிச சார்பு நிலைநோக்கி வரக் காரணமாய் அமைந்தது என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், என்னை அறியாமலே இதன் சில கூறுகள் என்மீது தாக்கம் செலுத்தியிருக்க வேண்டும் என்றே நினைக்கிறேன்.

## தலைப்பிட முடியாத கவிதைகள் இரண்டு

வீணை
எனது காலமாய் எப்போதுமே என்னோடு பயணம் கொள்ளவில்லை.
எனினும்
அதனோடு நான் வாழ்ந்தேன்.
வசீகரமிக்க ஒலியில் வீணை தவழ்ந்த போதும்
நான், என்னை ஒரு வயோதிகனாய் உணராதிருந்த போதும்
இருள் பற்றிய அச்சம் எனது மண்டையைச் சூடாக்காதிருந்த போதும்
எல்லோராலும் எழுதப்பட்ட கவிதைகளில் -
அவற்றில் வீசிய யுத்தத்தின் கொடிய வீச்சத்தை
என்னால் உணர முடியாதிருந்த போதும்.
ஓ! கடவுளே

வீணை
எனது காலமாய்
எப்போதுமே என்னோடு பயணம் கொள்ளாத போதும்
அதன் ஒலியில் நான் வாழ்ந்தேன்.

நேற்று
நானொரு வயோதிகனாயுணர்ந்தேன்
இருள் பற்றிய அச்சத்தால் நரம்புகள் நடுங்குகின்றன
போர் மிக்க நாட்களில் நான் எழுதிய கவிதைகளில்
எலும்புகள் மணக்கின்றன: மனித ஒலிகளும் நரம்புகளும் கூட
ஓ கடவுளே
நான் தோற்று விட்டேன்
வீணையின் கடைசி ஒலியும் தேய்ந்து விட்டது காற்றில்
தேய்ந்தொழிந்த நிலவைத்தவிர எதுவுமே இருக்கவில்லை அதில்:
பிறகு, ஒவ்வொரு நாளும்
சூரியனால் விடிந்ததெனினும் அதில்
இருண்டு நீண்டிருக்கிறது ஒரு கவிதை.

### கவிதை II

அழகிய இரவு பற்றிய எனது கவிதைகளில்
எப்போதுமே மிருகங்கள் காவலிருக்கின்றன,
மிருகங்கள் பற்றிய அச்சத்தால் அழுகிச் சிதைந்தது நிலவு;
நேற்றைய கவிதைகளையும் இன்றைய வாழ்க்கையையும்
நான் இழந்தேன்.

எனது கவிதைகளின் காதலையோ
மனச் சுவர்களில் அவை புணரும் காட்சிகளையோ
அவற்றின் அந்தரங்கங்களையோ
வெறியோடு தின்னுகின்றன மிருகங்கள்.

துரத்தியடிக்கப்பட்ட ஒரு கவிஞனின்
எல்லையற்ற விதி பற்றியும்
மிருகங்களுடனான அவனது வாழ்வு பற்றியும்
இன்றைய கவிதைகளை காற்றுத் தானும் எழுதவில்லை

எனது முழுமையையும் மிருகங்கள் உறிஞ்சிய
கவிதைகளின்
பிரேத நதி இழுத்துச் சென்று விட்டது

நூறு தடவைகளுக்கு மேல் நிகழ்ந்தது எனது இறப்பு
நான் இறந்தேன், மீண்டும் மீண்டும்
நூறு தடவைகளுக்கு மேல்
மிருகங்கள் உடலைத் தின்னுகின்றன
கவிதைகளற்ற உடலை; உயிரற்ற உடலை.

- போஸ்நிவறாலே

நன்றி - நூலகத்திட்டம்



## ஓர நிகழ்வுகள்-3

**தமிழ் இனி 2000 மாநாட்டின் போது இடம்பெற்ற மைய நிகழ்வுகளோடு சமாந்தரமாக இடம்பெற்ற ஓர நிகழ்வுகள் இன்னும் சுவையானவை. இது பல்வகைப்பட்ட மன ஓட்டங்களையும். அதன் நிறப்பிரிகைகளையும் காட்டுவனவாக அமைந்தன. எனது பார்வைக்கு அகப்பட்டவற்றின் பதிவே இது.**

**- மு.பொ.**




# கைலாசபதி அரங்குக்குப் பதில் இலங்கையர்கோன் அரங்கு என்று வைத்திருக்கலாமே!

செப்டெம்பர் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் தமிழ் இனி 2000ம் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இதற்கு எதிராக அ. மார்க்ஸ் எழும்பூர் பகுதியில் எங்காவது கூட்டம் போடுவாரா?

இக்கேள்வி என் மனதின் எங்கோ ஓர் மூலையில் எழுந்தாடி மறைகிறது.

இது அ.மார்க்சின் தாஸர்களால் பரப்பிவிடப்பட்ட வெற்று நப்பாசைக் கற்பனையாகவும் இருக்கலாம். அல்லது தாஸர்களின் பிதாமர்களாலேயே ஓர் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் உரைக்கப்பட்ட கணநேர வீறாப்பு மொழிகளாகவும் இருக்கலாம்.

உண்மை அது தான்.

இன்றைய அனேகமான புரட்சிகர இடதுசாரிக் கோட்பாட்டாளர்களாகவும் இலக்கிய ஆய்வாளர்களாகவும் பெயர் பண்ணிக்கொண்டிருப்பவர்கள் எல்லாம் வெற்று மாயைத்தோற்றங்களா? அப்படித்தான் சிலவேளைகளில் அவர்கள் எனக்குப்படுவதுண்டு. பலூான்கள் மாதிரி சீடர்களால் ஊதப்பட்டு பிரமை காட்டும் இவர்கள் ஒரு சிறு ஊசியின் சுரண்டலாலேயே வெடித்துப்போய் வீசுண்டு போகக் கூடியவர்கள். இவர்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவம் வீண்விரயம்.

நான் நினைத்தது போலவே இவை எவற்றையும் பொருட்படுத்தாத போக்கில் காலச்சுவடு கண்ணன் தான் மேற்கொண்ட வேலைகளில் ஒருவகைத் தீவிரத்தோடு இயங்கிக் கொண்டிருக்க, கவிஞர் சேரனோ ஈழத்து, புலம்பெயர் எழுத்தாளர், பார்வையாளர் சகலரது குறைபாடுகளுக்கும் ஆலோசனைகளுக்கும் செவிசாய்த்து அவற்றைக் கண்ணனோடு பகிர்ந்துகொண்டு அவற்றுக்கான வழிமுறைகளைச் செய்துகொண்டிருந்தார்.

பார்வையாளர்களாக வந்த சிலர் Hotel Atlanticல் தங்குமிட வசதி, 'அது இது' என்று கேட்டவைகளுக்கெல்லாம், முகம்கோணாது தன்னாலான உதவிகளைச் செய்து கொடுப்பதும் இன்னும் இவைபோன்ற பல சிக்கல்களுக்கு முகம்கொடுப்பதுமாய் இருந்த சேரனின் முகம் களைத்துப்போயிருந்தது.

தமிழ் இனி 2000 நிகழ்வுகள் சம்பந்தமாக சில அதிருப்திகள் அவ்வப்போது எழுத்தாளர்கள் மட்டத்தில் தலைதூக்கவே செய்தன. அவற்றின் முக்கியமான சிலவற்றை இப்படி வகைப்படுத்தலாம்.

*1.*

முதலாவது தமிழக அமர்வுகள், இலங்கை - புலம்பெயர்ந்தோர் சிங்கப்பூர்-மலேசியா அமர்வுகள் என இரண்டாகப் பிரிக்கப்பட்டு, தமிழக அமர்வுகள் புதுமைப்பித்தன் அரங்கிலும் (Hotel Atlanic மேல் மாடியிலும்) இலங்கை புலம்பெயர்ந்தோர், சிங்கப்பூர், மலேசிய அமர்வுகள் கைலாசபதி அரங்கிலுமாக (Hotel Atlanic கீழ்மாடியில்) நடைபெற்றன.

இதில் அதிருப்தி ஏற்படுத்தி முகத்தைச் சுழிக்கவைத்த விஷயம் என்னவெனில், தமிழக அமர்வுகளுக்கும், இலங்கை புலம்பெயர்ந்தோர் சிங்கப்பூர் மலேசிய அமர்வுகளுக்கும் இடையே எந்தவித ஊடாட்டமும் இருக்கவில்லை என்பதே. அவர்கள் அவர்களோடும், நாங்கள் எங்களோடுமான அமர்வுகள் நாங்கள் எங்களுக்குத் தெரிந்த விஷயங்களை எங்களுக்குள்ளும் அவர்கள் அவர்களுக்கு தெரிந்த விஷயங்களை அவர்களுக்குள்ளும் கதைத்து என்ன பிரயோசனம் என இருதரப்பு எழுத்தாளர்களும் அதிருப்திபடவே செய்தனர். ஆனால், என்ன செய்வது? மூன்று நாட்களுக்குள் அத்தனை அமர்வுகளையும் நிகழ்த்தி முடிப்பதற்கு இதுதான் வழியாகச் சொல்லப்பட்டது.

ஆனால், இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்யக்கூடிய வேறுவழிகள் பின்னர் புலப்பட்ட போதும் அவை காலங் கடந்தவையாகவே தெரிந்தன.

*2.*

இலங்கை புலம்பெயர்ந்தோர் சிங்கப்பூர் மலேசிய அமர்வுகளை கைலாசபதி அரங்கென்ற பெயரில் நடத்தியதை சில இலங்கை புலம்பெயர் எழுத்தாளர்கள் விரும்பவில்லை. எவ்வாறு தமிழ் நாட்டமர்வை புதுமைப்பித்தன் என்ற ஆக்க இலக்கியகர்த்தாவின் பெயரில் வைத்தார்களோ அவ்வாறே இலங்கையினதும் ஏனைய புலம்பெயர் எழுத்தாளர்களினதும் அமர்வை இலங்கை ஆக்க இலக்கிய கர்த்தா ஒருவரின் பெயரில் வைத்திருக்கலாமே என்ற எதிர்ப்புக்குரலும் அங்கு பல சந்தர்ப்பங்களில் சிலரால் முன்வைக்கப்பட்டது. அதற்கு அவர்கள் காட்டிய காரணங்களும் சரியாகவேபட்டது. 'இலங்கையர்கோன் அரங்கு' என்று வைத்திருந்தால் எடுபட்டிருக்காதோ? இத்தகைய Twist களுக்கு யார் காரணமாய் இருந்தார்கள் என்ற கேள்வியும் எழுப்பப்பட்டு ஓரநிகழ்வாய் புகைந்தது.

*3.*

கைலாசபதி அரங்கின் முதல் நாள் அமர்வின்போது அரங்கின் ஓரப்பகுதி நீட்டும் புத்தக Stallகள் போடப்பட்டு வியாபாரம் மும்முரமாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. அங்கு முதல்நாள் அமர்வின் முதல் நிகழ்ச்சியாக 'கடந்த நூற்றாண்டின் ஈழத்துக் கவிதை' பற்றிய ஆய்வு இடம்பெற்றது. செ.யோகராசா, மு. பொன்னம்பலம், சேரன், இணைப்பாளராக சி. ஜெயசங்கர் ஆகியோர் அமர்ந்திருந்தனர். செ.யோசராசா எழுந்து தனது ஆய்வுரையை நிகழ்த்தினார். நன்றாகவே ஒலிபெருக்கி வேலை செய்த போதும் யோகராசாவின் குரல் கேட்டதாய் இல்லை. புத்தகக் கடைகளை மொய்த்து நின்ற கூட்டமும் அவர்கள் எழுப்பிய சத்தமும் எல்லாவற்றையும் அடக்குவனவாய் மேலெழுந்தன.

பார்த்துக் கொண்டிருந்த ஜெயசங்கருக்கு அதற்கு மேலும் பொறுக்க முடியவில்லை.

"தயவு செய்து புத்தக வியாபாரத்தை உடனடியாக நிறுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்" என்று பல தடவை ஒலிபெருக்கியில் கத்தினார்.

புத்தக stallகளைச் சூழ்ந்துநின்றவர்கள் என்ன ஈக்களா, காகங்களா "சூ" என்றவுடன் பறந்துபோவதற்கு? அல்லது அந்தப் புத்தக அரங்கை நிகழ்த்திய வியாபாரிகள் தான் என்ன நாங்கள் ஜமாய்க்கும் கடந்து நூற்றாண்டுக் கவிதை ஆய்வுகளைக் கேட்டு செவிக்குணவாக்க வந்தவர்களா? அவர்கள் எல்லாவற்றையும் கடந்து நின்றார்கள்!

திடீரென்று எனக்குள்ளிலிருந்து வழமையாக கேள்வி எழுப்பும் என் விடுபட்ட மனம் "புத்தக வியாபாரி புத்தகம் விற்பதன் மூலம் பெறும் இன்பத்தையும், அப்புத்தகங்களை வாங்குவோர் பெறும் இன்பத்தையும் விட உன் கவிதை ஆய்வு அங்கிருப்போருக்கு இன்பத்தைத் தரப்போகிறதா?" என்று கேட்டுவிட்டுச் சிரித்தது.

யோகராசா எந்தவித பாதிப்பையும் வெளிப்படுத்தாது தன் ஆய்வைச் சமர்பித்துக் கொண்டிருந்தார்.

ஜெயசங்கர் மீண்டும் புத்தக வியாபாரிகளுக்கு குரல் கொடுத்து ஆற்றாமையுள் புகுவது தெரிந்தது.

எனக்கோ ஜெயசங்கர், மு.பொ., யோகராசா, சேரன், புத்தக வியாபாரிகள் ஆகியோரைக் கொண்ட 'அபத்த' நாடகம் ஒன்று அரங்கேறுவதாகத் தெரிந்தது. நல்ல காலம் 'எங்கள் கடந்த கால நூற்றாண்டு கவிதை' ஆய்வைப் பலிகொண்டதோடு புத்தக வியாபாரிகள் கைலாசபதி அரங்கைவிட்டு வெளியேற்றப்பட்டனர். சேரனுக்கு அவர்களை அங்கிருந்து வெளியேற்றிய பின்னர் தான் நிம்மதி வந்தது.

தமிழ் இனி 2000 விழா நடந்த மூன்று நாட்களும் Hotel Atlanicக்கு உள்ளும் புறமும் அதன் முன்றிலும் அதற்கு முன்னால் இருந்த ரோட்டிலும் கலை இலக்கியம் பற்றிக் கதைக்கும் ரசிகர்களும் எழுத்தாளர்களும் கலைஞர்களுமாக கணிசமான கூட்டம் காணப்பட்டது.

எத்தனை வகையான எழுத்தாளர்கள்! எத்தனை வகையான் ரசிகர்கள்! கலைஞர்கள்! இப்படி எங்கெங்கோ இருந்தவர்களையெல்லாம் ஒன்று கூட வைத்து ஒருவரோடொருவர் அறிமுகமாக வைத்து அளவளாவவிட்ட தமிழ் இனி 2000த்தை ஒழுங்குபடுத்தியோரை எவ்வளவு பாராட்டினாலும் தகும் என்றே எனக்குப்பட்டது. 'பிராமணிய ஆதிக்கம்', தலித்தியம், 'அது இது' என்ற எல்லா வேறுபாடுகளையும் மறந்து அங்கே எழுத்தாளர்கள் கூடிநின்றனர்.

கண்களால் சிரித்துக்கொண்டு நிற்கும் எஸ்.வி.ஆர்., கள்ளங்கபட மற்ற வெள்ளை உள்ளத்தவரான அரசுவும், மங்கையும், எப்பொழுதும் சந்தோச சித்தத்தோடு காணப்பட்ட அம்பை, கீதா, ரவிக்குமார், மௌனமான கவனிப்பாளர்களாய் நின்ற ரமேஷ், பிரேம். இன்னும் தமிழவன், தனிமையே தனக்கு பிடித்தமானது போல நின்ற ராஜ்கௌதமன், என்றுமே அடக்கமாகக் காணப்பட்ட சுந்தரசாமசாமி, என் மனதில் துயர் விழுத்திய மனுஷ்ய புத்திரன் அப்படி எத்தனை பேர்! இவர்கள் எல்லோரும் அளவளாவ வேண்டும் என்று எனக்குள் ஆவல் எழுந்தது. யாரை முதலில் தேர்ந்தெடுப்பது?

(இன்றும் வரும்)

## அடுத்த......

அதேபோல் சுத்தியின் கணவன், சுத்தியின் தேவைகளைக் கருத்திலெடுக்காவிட்டாலும், அவர் வன்முறையைப் பிரயோகிக்கின்றார் என்பது தெரியப்படுத்தப்படவில்லை. எனினும், அவர் மிகவும் சூட்சுமமாக சுத்தியை வன்முறைக்குட்படுத்துகிறார். இந்த அகிம்சையான வன்முறை எம்மால் இனம் காணப்பட முடியாத வகையில் விரவிக் கிடக்கின்றது. இந்த மென்மையான, அகிம்சையான ஆனால், மிகவும் பயங்கரமான ஆணாதிக்க வன்முறையைப் பேசுவதற்கு முயற்சித்தேன்.

அத்துடன் சுத்தி குறுந்திரைப்படம், சுத்தி மீண்டும் தன் பிறந்த வீட்டிற்குச் சென்று நிம்மதியாக சகோதரிகளுடன் ஊஞ்சலாடும் காட்சியுடன் நிறைவுறுகின்றது. திருமண பந்தத்தில் ஒரு பெண்ணினால் நிலைக்க முடியாவிட்டால் அப்பெண்ணுக்கு மீண்டும் தனது குடும்பத்தினருடன் இணைந்து வாழும் உரிமை இருக்க வேண்டும். அதாவது மரபார்ந்த விவாகரத்துகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து விட்டு, இவ்வாறான நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கும் பெண்களை கொலை செய்வதும், தற்கொலைக்கு தூண்டுவதும் மோசமான காரியங்கள் ஆகும்.

**விவரணத் திரைப்பட தயாரிப்பில் நீங்கள் ஈடுபட்டு வருகிறீர்கள். இனப்பிரச்சினை குறித்தான உங்களது விவரணத் திரைப்படங்கள் பற்றி ஏதேனும் கூற முடியுமா?**

ஐ.சி.எஸ். நிறுவனம் தயாரித்த 'சம்ஹார பூமியின் சமாதானக் கனவு" என்ற விவரணச் சித்திரத்தின் தொடர்ச்சியாக Living Together எனும் விவரணத்தை நான் தான் தயாரித்தேன். இலங்கையில் சிங்கள தமிழ் இனப்பிரச்சினை இருந்த போதிலும் ஒருவருக்கொருவர் சமத்துவமாக வாழும் தன்மை உண்டென்பதை நான் வெளிப்படுத்த முயற்சித்தேன். இதுநாள் வரை இலங்கைத் தொலைக்காட்சியில் இவ்விவரணச் சித்திரம் காணப்பிக்கப்படவில்லை. இவ்விவரணத்தை பார்த்த சிலர் மிகவும் எளிமையாக இதைப்பற்றி கதைத்தாலும் சர்வதேச மட்டத்தில் இதற்கு அதிக வரவேற்பு காணப்பட்டது. இனரீதியாக பிரிந்து செல்லும் கலாசாரத் தேவை குறித்தான பிரச்சினை இந்நாட்டு மத்தியதர வர்க்கத்தினரிடையே காணப்படுகின்றது. நான் அறிந்த வரையில் இந்த கலாசார சிக்கல் உயர்வர்க்கத்தினரிடமோ அடிமட்ட மக்களிடமோ இல்லை.

அத்துடன் நான் தற்போது இனநெருக்கடியை தொனிப் பொருளாகக் கொண்ட நீண்டதொரு விவரண நிகழ்ச்சியை இயக்கிக் கொண்டிருக்கிறேன்.

இந்நாள் வரை இருந்துவந்த மரபு சார்ந்த விவரண நிகழ்ச்சிகளுக்கு அப்பால் சென்று தயாரிக்கப்படும் ஒரு அரசியல் வெளிப்பாட்டு முயற்சியாகும். இம்முயற்சியில் 50வீதமானவை பூர்த்தி செய்யப்பட்டு விட்டன. நாம் யுத்தம் குறித்து பத்து வருடங்களுக்கு முன் கதைத்ததைவிட முற்றிலும் மாறான ஒரு போக்கு இன்று காணப்படுகின்றது. இவற்றை திரையில் பேச முயற்சிக்றேன்.

**இனப்பிரச்சினை குறித்து பல அபிப்பிராயங்களை நீங்கள் கொண்டிருக்கிறீர்கள். உங்களது படைப்புகளில் இவை நேரடியாக பாதிப்புக்குட்பட்டிருக்கின்றன. இது குறித்தும். உங்களது அனுபவம் குறித்தும் கூறுவதாயின்...?**

இந்நாட்டின் பிரஜை என்ற வகையில் இனப்பிரச்சினையின் பாதிப்பை நான் பாடசாலை மாணவியாக இருந்தவேளை தொடக்கம் தற்போது வரை உணர்ந்து வருகிறேன். இதன்பின் எனது உயர்கல்வியில், அத்துடன் நான் காதலியாக, மனைவியாக, தாயாக, அதேபோல் குழந்தையுடன் இன்று இருக்கும் சூழலிலும் கூட நான் அதன் பாதிப்பை உணர்கின்றேன். வாழ்வின் ஒவ்வொரு அசைவிலும் அதை நான் உணர்கின்றேன்.

தற்போது என் வாழ்வின் அரைப்பகுதி கழிந்து விட்டது. வாழ்வின் எஞ்சிய காலமும் இவற்றை அனுபவிக்க வேண்டியேற்படும். இந்நிலைமை தற்போது விரவி மிகவும் மோசமான புரையோடிப் போன நிலைமையாக உள்ளது. நாம் இனப்பிரச்சினையின் மிலேச்சத்தனத்தை அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். அரசியற் காரணங்களினால் ஏற்பட்ட இந்நிலைமை இன்று எம் தனிப்பட்ட வாழ்வை தீர்மானிக்கும் சாதகமாகியுள்ளது. இந்நிலைமையில் இருந்து மீண்டு நாம் எப்படி புதிய விடயங்களை படைப்பாக்கம் செய்வது?

**திலினா வீரசிங்க, ரத்னா**

நன்றி - நூலகத்திட்டம்



நீர்வை பொன்னையனின்

# வேட்கை சிறுகதைத் தொகுதி

- ஒரு நோக்கு

மார்க்சியக் கோட்பாட்டில் பற்றுறுதி கொண்டு புரட்சிகரமான சிந்தனைகளைத் தமது பதிவுகளினூடாக வெளிக்கொணர்ந்து சமூக அமைப்பானது முற்று முழுதாக மாற்றியமைக்கப்படல் வேண்டுமென்று ஐம்பதுகளில் போர்க்கோலம் பூண்ட, 'முற்போக்கு எழுத்தாளர்கள்' என விசேடமாக அழைக்கப்பட்ட எழுத்தாளர்களுள் செ.கணேசலிங்கன், கே.டானியல், டொமினிக் ஜீவா, எஸ்.அகஸ்தியர், என்.கே.ரகுநாதன், நீர்வை பொன்னையன், காவலூர் ராசதுரை போன்றவர்கள் முக்கியமானவர்கள். புதிய கருத்துக்களை முன்வைத்து தமது எழுச்சிக்கு வேண்டிய தனித்துவக் கலை இலக்கியங்களை படைக்க இவர்கள் முனைந்தனர். இவர்களது படைப்புக்களில் பிரச்சாரவாடை வீசுகிறது என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டாலும் செ.கணேசலிங்கனின் ஒரே இனம், நல்லவன், சங்கமம்



வேட்கை
சிறுகதைத் தொகுதி
நூலாசிரியர் : நீர்வை பொன்னையன்
வெளியீடு : பூபாலசிங்கம் பதிப்பகம், 340 செட்டியார் தெரு, கொழும்பு - 11
விலை : 50.00

டொமினிக் ஜீவாவின் தண்ணீரும் கண்ணீரும், பாதுகை என்.கே.ரகுநாதனின் நிலவிலே பேசுவோம், நீர்வை பொன்னையனின் மேடும் பள்ளமும், காவலூர் ராசதுரையின் குழந்தை ஒரு தெய்வம் போன்ற சிறுகதைத் தொகுதிகளை அவர்கள் கொண்டிருந்த கோட்பாடுகளுக்கு கலைவடிவங் கொடுத்த கலைப்பொருள்களாகக் கொள்ளலாம்.

இலக்கிய ஜனநாயக மயப்பாடு விரிவாக்கம் பெற்ற இக்கால கட்டத்தில் 'மேடுபள்ளமும்' (1961) தொகுதி மூலம் தனது இலக்கியப் பயணத்தை ஆரம்பித்த, நீர்வை பொன்னையன், இதுவரை 'உதயம்' (1970), பாதை (1997) ஆகிய சிறுகதைத் தொகுதிகளுடன் செ.கதிர்காமநாதன், செ.யோகநாதன் ஆகியோருடன் இணைந்து மூவர் கதைகள் எனும் தொகுதியினையும் அறுவடை செய்துள்ளார்.

மார்க்ஸிசப் பாதையில் நின்று தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் ஒடுக்கப்பட்டோருக்காக குரல் கொடுத்து நாற்பதுக்கும் மேற்பட்ட சிறுகதைகளைத் தந்த நீர்வை, எமது நாட்டில் நிகழ்ந்து கொண்டிருக்கும் மனித சங்கார யுத்தத்திற்கு எதிராக ஒன்பது கதைகளை தற்போது 'வேட்கை' எனும் மகுடத்தில் வெளிக் கொணர்ந்துள்ளார்.

ஆயுதப் போராட்டம் முனைப்புப் பெற்ற எண்பதுகளிற்குப் பின்பு, ஈழத்துப் புனைகதைப் போக்கானது இயக்கங்களின் தோற்றம், அவற்றிடையே நிலவிய முரண்பாடுகள், அந்நிய இராணுவத்தின் வருகை, போராட்டத்தின் தீவிரம், இடப்பெயர்வுகள் என்பவற்றினூடாக விரிவடைந்து செல்கிறது. இவற்றை எல்லாம் தமது புனைகதைகளின் கருக்களாகக் கொண்டு பதிவு செய்ய முற்படுபவர்கள் கதை மாந்தர் களத்தில் நின்று அவற்றினைச் சித்திரிக்கும் போதே, உன்னத படைப்புகள் உருவாகுவதற்கு வழி சமைத்தவராகின்றனர்.

வேட்கை தொகுதியில் முதற் கதையான 'அழியாச் சுடர்' தவிர்ந்த ஏனைய கதைகளின் பதிவும் இளைஞர் தீவிரவாத தோற்றத்தினூடாகவே ஆரம்பிக்கின்றது.

"ஒரு நாள் செல்லக்கண்டன் திடீரெனக் காணாமல் போய்விட்டான்".

"அவன் சென்ற நாளிலிருந்து தேவிக்குச் சரியான உணவோ, உறக்கமோ இல்லை".

"சின்னண்ணை, சின்னண்ணை என்று எந்நேரமும் அழுது கொண்டேயிருப்பான். சகலதையும் இழந்துவிட்டதான உணர்வு அவளுக்கு. அன்னமுத்தாச்சி தான் அவளுக்கு ஆறுதல் கூறி, தேற்றி ஆதரவாக இருந்து வருகின்றாள்".

இவ்வாறாக ஆயுதப் போராட்ட கால ஆரம்பகால நிகழ்வினை வலிகாமத்து நீர்வேலியைச் சேர்ந்த ஒரு வறிய குடும்பத்தினூடாக மிகவும் இயல்பானதாக நீர்வை சித்திரிக்க முற்படுகின்றார்.

கறுப்பு உடுப்பு அணிந்த இருவர் செல்லக்கண்டனை மடக்கிப் பிடித்து இழுத்துச் செல்கின்றனர். இதையாரும் கண்டதாக இல்லை. அவர்கள் இருவரும் அவனை வயல்வெளிக்கு அப்பாலிருக்கும் மயானத்தை நோக்கி... மேலும் இரு கறுப்பு உடுப்புகள் சேர்ந்து கொள்கின்றன.

மை இருட்டில் நாடகம் தொடங்குகின்றது.

ஒரே நிசப்தம். இருள் மயம். நேரத்தின் நகர்வு.

"ஐயோ என்ரை சின்னண்ணையைச் சாகடிக்கிறாங்கள்" திடுக்குற்று எழுந்து தேவி அலறுகிறாள்.

'என்ன? என்ன மோனை நடந்தது?' அன்னமுத்தாச்சி அவளை அணைத்துப் பிடித்தபடியே இருக்கின்றாள்.

இயக்கங்களின் தோற்றமும், அவற்றிடையே உருவான முரண்பாடுகளும் போன்ற ஆரம்ப கால யுத்த அத்தியாயங்கள் எவ்வாறாக குடும்ப உறவுகளை அதன் உறுப்பினர்களைக் கூடப் பாதித்தது என்பதனை வியக்கத்தக்க வகையில் விபரித்துச் செல்லும் ஆசிரியர், வேறுபாடுகள், ஒற்றுமையின்மையால் சமூக இயக்கங்ளின் 'வேட்கை' திசைமாறிச் செல்வதை இக் கதைமூலம் காட்ட முனைகிறார்.

செட்டான உருவ வார்ப்பும், நேர்மையான சித்திரிப்பும், உயிரோட்டமான பாத்திரங்களும், கூறாமல் கூறும் பண்பும் இம்மகுடக் கதையினை தொகுதியில் மேவி நிற்கும் கதையாகவும் ஆக்கிவிடுகின்றது.

வேட்கை கதை போலவே தொகுதியில் குறிப்பிடத்தக்க மற்றுமொரு கதை 'ஜீவநாதம்' போராட்ட வரலாற்றின் அடுத்த அத்தியாயமான அந்நிய இராணுவத்தின் வருகையினூடு இக்கதை நகர்கின்றது. சொந்த மண்ணிலேயே பெண்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் பாலியல் துன்புறுத்தல்கள், வல்லுறவுகள் பற்றி கதை பேசுகின்றது.

அந்நிய இராணுவம் இந்த மண்ணுக்கு வந்து சென்றதன் பின்பு எமது இலக்கியச் சூழலில் ஏற்பட்ட மாற்றத்தினை இக்கதையில் தரிசிக்க முடிகிறது. உள்ளடக்க ரீதியில் வாசகர்களை திருப்திப்படுத்தும் மற்றுமோர் கதையாக 'ஜீவநாதம்' விளங்குகின்றது.

போரின் தாக்கம் இலங்கையின் பெரும்பான்மையினர் வாழும் பிரதேசத்தினையும் எவ்வாறு பதற்றம் நிறைந்ததாக மாற்றி அமைத்து விட்டது என்பதனை 'வீராப்பு' கதை சுட்டி நிற்கின்றது. ஏனைய கதைகளில் பெரும்பாலானவை போராட்டத்தின் தீவிரத் தன்மையினையும் அதன் விளைவுகளையும் கூறுகின்றன.

சாதிப்போராட்டம், வர்க்கப் போராட்டங்களாலான அவலங்களை விட ஆயுதப் போராட்டத்தில் உருவான அவலங்கள் அதிகமானது. கடந்த நாப்பது வருடங்களாக கதைகளை எழுதி வரும் நீர்வை பொன்னையன் தொண்ணூறுகளில் எழுதிய கதைகளே மனதை அதிகம் கௌவ வைத்திருக்கின்றது என்பதனை நிறுவுமாப்போல அல்லது ஈழத்து சிறுகதைப் பரப்பில் நிகழ்ந்த பாய்ச்சலை உணரத் தக்க வகையில் நாப்பது வருடங்களின் முன்னர் அவரது மனதில் கருக்கொண்ட (1959 இல்) 'அழியாச்சுடர்' எனும் கதை தொகுதியில் ஆரம்பமாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

தொண்ணூறுகளின் இறுதியில் நிகழ்ந்த வலிகாம இடப்பெயர்வு பற்றிப் பேசுவனவாக இத்தொகுதிக் கதைகளில் எதுவும் அமையவில்லை. ஆயினும் போராட்ட ஆரம்பகாலம் தொட்டு அதன் உச்சம் வரையான காலகட்டத்தினை உணர்முறைமை மாற்றங்களுடன் சித்திரித்ததில் ஈழத்து இலக்கிய உலகின் கவனிப்பை 'வேட்கை' பெறுகின்றது.

மொழியியல் வழிநின்று ஆக்க இலக்கிய பாதைகள் விரிவுபடுத்தப்படும் போதே உன்னத படைப்புகள் உருவாகுவதற்கான சந்தர்ப்பங்கள் நிகழ்கின்றன. வடபுலத்து இருண்ட வாழ்க்கையினூடே புகுந்து அவர்களது மன உணர்வுகளை அற்புதமாக அள்ளி வரும் நீர்வை பொன்னையன் கதை சொல் முறையிலும், மொழியிலும் மாற்றங்களைக் காட்டியிருந்தாரானால் 'வேட்கை' தொகுதியின் கதைகளும் அடுத்தொரு கட்டத்திற்குத் தாவிச் சென்றிருக்கும்.

விபவி நிறுவனத்தில் தமிழ் மொழிமூல ஆசிரியராகப் பணிபுரியும் நீர்வை பொன்னையன் பாதை, வேட்கை போன்ற நூல்களினூடாகத் தொடர்ந்து தனது தடங்களைப் பதித்து வருவது பாராட்டிற்குரியதொன்றே!


~ வேலோன்

உயிர்வெளி

# பெண்களின் காதல் கவிதைகளின் தொகுதி

"இதுவரை காலம் எமக்குக் கிடைத்தவை எல்லாம் ஆண்கள் பெண்கள் மீதான காதலைப் பாடிய பாடல்களும் அவர்கள் தம்மைப் பெண்களாக உருவகித்துப் பாடியவையுமேயாகும். இவை ஆண் நோக்கில் பெண்களின் உணர்வுகளை வெளியிடும் கவிதைகளே அன்றி உண்மையான பெண்களின் உணர்வுகளை தாங்கியவை அல்ல."

"பெண்களது சுய இருப்பினதும் உண்மையான உணர்வுகளதும், சுயாதீனத்தினதும் ஒரு அடையாளமாக அவர்கள் ஆக்கிய காதல் கவிதைகளை கொள்வோமானால் அவற்றினுடைய தனித்தன்



மைகள் எவை? ஆண்களின் கவிதைகளிலிருந்து அவை எவ்வகையில் வேறுபட்டவை....?"

மட்டு சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தால் வெளியிடப்பட்ட ஈழத்தின் பதினொரு பெண் கவிஞர்களின் 25 கவிதைகளைக் கொண்ட 'உயிர்வெளி' தொகுப்பின் பதிப்பாசிரியரான சித்திரலேகா மௌனகுரு அவர்கள் இத்தொகுப்பின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ள சிந்தனைக்குகந்த வரிகள் இவை.

காதல் உணர்வு ஆண் பெண் இருபாலர்க்கும் உரியதாயினும் கூட, பால் ரீதியாக கட்டமைக்கப்பட்டுள்ள சமூக பண்பாட்டு விழுமியங்கள், அந்த உணர்வினை வெளிப்படுத்தும் விதத்தில் பாரிய வேறுபாடுகளை ஏற்படுத்தி வந்துள்ளன. ஆண்களின் காதல் உணர்வு வெளிப்பாடு பெண் உடல் சார்ந்ததாகவே பெரிதும் அமைய, பெண்களின் காதல் உணர்வு, உணர்வுகள் சார்ந்ததாக அமைந்திருப்பது இவ் வேறுபாட்டை துல்லியமாக புரியவைக்கிற ஒரு அம்சம் எனலாம்.

நஜிபா, பெண்ணியா, ரேவதி, யாழ் ஆதிரை, சுல்பிகா, ஔவை, ஊர்வசி, மைத்திரேயி, மசூனா. ஏ.மஜிட் ஆகிய கவிஞர்களின் கவிதைகளுடன் கூடவே ஆண்டாள், ஔவையார், நன்னாகையார், வெளி வீதியார் ஆகியோரின் கவிதைகளையும் சேர்த்து வெளியிட்டதன் மூலம் பதிப்பாசிரியர் பெண்களின் காதல் உணர்வுகள் வெளிப்பாடு காணலில் உள்ள தொடர்ச்சியை காட்டியுள்ளார் பதிப்பாசிரியர்.

கைக்குக் கிடைத்த கவிதைகளை வைத்துத் தொகுக்கப்பட்ட கவிதை தொகுதி இது அவர் என்று கூறிய போதும் அது பெண்களின் காதல் உணர்வின் பரிமாணத்தை தெளிவாக வெளிப்படுத்தக் கூடிய ஆற்றல் மிக்க அருமையான கவிதைகளின் ஒரு தொகுப்பாக வந்துள்ளது என்பதில் ஐயமில்லை.

கவிஞர்களிலும் அனேகமானோர் புனை பெயரில் எழுதி இருப்பதும், அவர்களது சொந்தப் பெயர் வெளியிடப்படாததும், தம் உணர்வுகளை வெளியிடுதல் "பெண்மையின் பாற்பட்டதல்ல" என்ற கருத்து இன்னமும் நிலவுகிறதோ என்ற கேள்வியை எழுப்பவே செய்கிறது.


தனித்தனியே இவற்றில் பல கவிதைகளை பலரும் பத்திரிகைகள் சஞ்சிகைகளில் படித்திருக்கக் கூடுமாயினும், ஒரு தொகுப்பாக அவற்றைப் படிக்கையில் அவை ஏற்படுத்தும் தாக்கம் மிகவும் முக்கியமானது என்பதை உணர்வார்கள்.

அனைவரும் கட்டாயம் படிக்க வேண்டிய முக்கிய தொகுப்புகளுள் ஒன்று இது. இப்படி ஒரு எண்ணத்தை எண்ணியதற்கும், அதைச் செயலுருவாக்கியதற்குமாக சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தினையும், பதிப்பாசிரியரையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

~ கவி

# குருதிமண் சிறுகதைத் தொகுதி

-அறிமுகம்




கனகசபை தேவகடாட்சத்தின் மூன்றாவது சிறுகதைத் தொகுப்பான "குருதி மண்" தமிழ் நாட்டில் வெளியிடப்பட்டு திருகோணமலையில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டிருக்கிறது.

"இந்த மண்ணிலே, மண்ணிற்காக மரணித்த மானுடங்களுக்கு இந்நூல் படையாகிறது" என்ற தடித்த வாசகங்களுடன் தொடங்கும் இந்நூல் பிரபல ஓவியர் அருள் பாஸ்கரனின் அட்டைப்படத்துடன் 96+XVI பக்கங்களில் இருபது சிறுகதைகளைத் தாங்கி வெளியாகியிருக்கிறது.

உதயம், மொட்டு, கனவு மெய்யப்பட தழும்புகள், ஊமை, பலி, மகனுக்கு, மௌனக்குரல்கள்,

நன்றி - நூலகத்திட்டம்





# சற்றே மேல் வருக!

சரிநிகர்- மெல்லத் தமிழினி பத்தி எழுத்தாளருக்குத் தாழ்மையோடு எழுதிக் கொள்வது,

சரிநிகர் 201 இல் நீங்கள் எழுதிய தமிழ் இனி 2000 ஆற்றாமை 2 இல் திரு கே.எஸ். சிவகுமாரன்

1.மகாநாட்டில் கட்டுரை வாசிக்க நேரமில்லை என்றார்.

2.ஆனால் கலந்து கொண்டார். பின் கருத்துரை தெரிவித்தார்.

3.அ.மார்க்ஸ் அவர்களால் எழுதப்பட்ட அறிக்கை (தமிழ் இனி 2000 என்கிற கும்பமேளா) போன்று இன்னொன்றை விநியோகித்தார்.

4.இலங்கைப் பேராளருக்கு இது கூச்சமாக இருந்ததாக உங்களிடம் பலர் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

என்று ஒரு மகா கனம் பொருந்திய நிலையில் இருந்து எழுதியுள்ளீர்கள்.

அ) கட்டுரை வாசிக்க நேரமில்லாதவர் என்ன மசிருக்குக் கலந்து கொண்டார். பிறகெதற்குக் கருத்துத் தெரிவித்தார் என்பது போன்ற ஒரு இங்கிதமற்ற எதேச்சையான பழிவாங்கும் அதிகாரத்தொனி இந்த எழுத்துக்குப் முன்னால் துருத்திக் கொண்டு நிற்கிறது.

ஆ) ஒரு தனிமனிதன் தான் அறிமுகமாகும் நபர்களுக்கு விசிட்டிங் காட் கொடுத்தல், Curriculum Vitae கொடுத்தல் மிகமிகச் சாதாரணமானது அதுவும் தமிழினி 2000 போன்ற மகாநாடுகளில் இது ஒரு வரவேற்கத்தக்க நடைமுறை என்பதே தெரியாது தலைகுனிந்த இலங்கைப் பேராளர்களையும் உங்களையும் தயவு செய்து தொடர்ந்தும் கிணற்று வாசிகளாக இருக்க வேண்டாம் என்று கேட்கத் தோன்றுகின்றது.

நான் எதுவுமில்லை என்றும், நான் மிகச் சாதாரணவன் என்றும் போலியான அவையடக்கம் பேசுபவர்கள், தங்களைப் பற்றி மற்றவர்கள் எல்லாம் அறிந்து வைத்திருக்க வேண்டும், அதை ஏனையவர்களுக்கும் எடுத்துச் சொல்ல வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்களாகவும், உள்ளூரத் திமிர் பிடித்தவர்களாகவும் இருப்பதை நான் பலதடவை நேரடியாகக் கண்டிருக்கிறேன். தமிழில் இது ஒரு நீண்ட கால நோய். தன்னைப் பற்றியும் தான் செய்தவற்றைப் பற்றியும் சுருக்கமாகச் சொல்லப் பழகுதல் ஒரு பயிற்சியின் பாற்பட்டது. மற்றவர்களுக்குத் தொந்தரவில்லாதது. திரு.கே.எஸ். சிவகுமாரன் அவர்களின் இது போன்றதொரு சுயவிபரக் கொத்தில் இருந்து தான் திரு கமெல் சிவலெபில் என்ற ஐரோப்பியத் தமிழ் அறிஞர் யார் யாருடைய எந்தெந்தச் சிறுகதைகளை எப்பொழுது செக் மொழியில் மொழி பெயர்த்தார், எந்தெந்தச் சிறு சஞ்சிகையில் வெளியிட்டார் என்பதை நான் அறிந்து கொண்டேன். மேலும் இப்பொழுதெல்லாம் உலகமும் நாமும் கம்பியூட்டரில் கோம் பேஜ் (Home Pages) தயாரித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை ஏன் மறந்தீர்கள்?

முடிவாக அறியாத தன்மையிலும் ஆற்றாத தன்மையிலும் தனிமனித மனங்களைப் புண்படுத்தும் யாழ்ப்பாணத்துத் ரியூட்டறி மாணவ நையாண்டித் தனத்தில் இருந்து சற்றேனும் மேல் வருக.

சுசீந்திரன், ஜேர்மனி

# வவுனியா நலன்புரி நிலையம் : அதிகாரியின் முறைகேடான வார்த்தை இடம் பெயர்ந்தவர் தற்கொலை முயற்சி!

வவுனியாவிலுள்ள நலன்புரி நிலையங்களில் இடம் பெயர்ந்து வாழும் மக்கள் போதிய வசதிகள் இன்மையால் மிகவும் துன்பப்படுகின்றனர்.

54 குடும்பங்களிற்கு நிவாரணக் கொடுப்பனவாக வழங்க வேண்டிய பணம் கடந்த சில மாதமாக வழங்கப்படாமல் உள்ளது. இது தொடர்பாக அதிகாரிகளிடம் தொடர்பு கொண்ட வேளைகளில் எல்லாம் உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப்படும் உலர் உணவுப் பொருட்களை பெற்றுக் கொள்ளுமாறு அதிகாரிகள் கூறிவந்துள்ளனர். உலருணவாக வழங்கப்படும் வெள்ளைப் பச்சையரிசி, தேங்காயெண்ணை, சீனி, உப்பு, பருப்பு ஆகியவற்றை மட்டும் பெற்று உணவுத் தேவையை சமாளிக்க முடியாது என மக்கள் கூறுகின்றார்கள் . அதிலும் குடும்ப எண்ணிக்கை அதிகமானவர்களுக்கு உலருணவு, ஏனையோருக்கு பணக்கொடுப்பனவு என்பது தம்மையும், தமது நிலையுணராத செயல்பாட்டினையும் வெளிப்படுத்துவதாக அவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

இந்த மக்களுடைய பிரச்சினையினை பேசித்தீர்ப்பதற்காக ஒக்.05 அன்று அரச செயலகம் வருமாறு கடிதங்கள் நான்கு பேருக்கு வழங்கப்பட்டது. இதன் பொருட்டு முகாமிலுள்ள மக்கள் ஒக்.06 அன்று வவுனியா அரச செயலகத்திற்குச் சென்ற போது முகாம் மக்களை மதிக்காது வார்த்தைகளைக் கொட்டி வெளியேறும்படி கூறியதால் மனமுடைந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான யோகபாலன் என்பவர் அலரி விதையை அரைத்துச் சாப்பிட்டுள்ளார். வைத்தியசாலையில் பொலிஸில் முறையிடும் போது அதிகாரியின் முறைகேடான வார்த்தையினால் தற்கொலை செய்ய முற்பட்டதாகவே யோகபாலன் கூறியுள்ளார். என்ன தான் நடந்தும் நிவாரணப் பணக்கொடுப்பனவு மட்டும் இதுவரை வழங்கப்படவில்லை.

ஒக்.04 அன்று அதிகாலை எட்டாம் யூனிட் பகுதியில் காலைக்கடன் கழிக்கச் சென்ற பாக்கியலட்சுமி என்ற இளம் பெண்ணை இருள் மறைவில் நின்ற ஒருவர் பலாத்காரம் செய்ய முற்பட்ட போது இவர் கூச்சலிட்டதால் மக்கள் கூடிக்கொண்டதால் அவர் அதிலிருந்து தப்பிக் கொண்டார்.

இந்தச் சம்பவம் நடப்பதற்குக் காரணம் இரவு பத்து மணிக்குப் பின் மின் விளக்குகளை அணைக்குமாறு உள்ள கட்டளை என மக்கள் கூறுகின்றனர். இத்துடன் மாலை ஆறுமணி தொடக்கம் இரவு ஒன்பது மணிவரை மின்சாரம் தடைப்படுத்தப்பட்டிருப்பதாகவும் எட்டாம் யூனிட் மக்கள் கூறுகின்றனர்.

இது தொடர்பாக முகாமில் உள்ள பொறுப்பதிகாரியிடம் மக்கள் முறையிட்ட போது அரச அதிபர் கூறியபடி தான் நடக்கின்றோம் எனக் கூறியதுடன், அரச அதிபருக்கு மக்கள் கொடுத்த முறைப்பாட்டுக் கடிதத்தை பெற்றுக் கொள்ள முகாம் பொறுப்பதிகாரி மறுத்து விட்டார் எனவும் நலன்புரிநிலைய மக்கள் கூறுகின்றனர்.

## சரிநிகர் வாசகர்களின் கேள்விகட்கு தலைவர்கள் பதிலளிக்கிறார்கள்!

- டக்ளஸ் தேவானந்தா — ஈழமக்கள் ஜனநாயக கட்சி
- ஆனந்த சங்கரி — தமிழர் விடுதலைக் கூட்டணி
- விநாயக மூர்த்தி — அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்
- செல்வம் அடைக்கலநாதன் — தமிழீழ விடுதலை இயக்கம்

உங்கள் கேள்விகளை எழுதி அனுப்புங்கள். கேள்விகள் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தவையாகவும் பொதுசன அக்கறையை வெளிப்படுத்துபவையாகவும் இருக்கட்டும்.

கேள்விகள் அனுப்பப்பட வேண்டிய முகவரி

ஆசிரியர் சரிநிகர், 19/04, 1/1 நாவல வீதி, நுகேகொட

# குருதிமண்................

தாகம், மாதர் தம்மை..... பறக்காத பறவைகள், கடன், இந்த மண் சிவக்கிறது, கொலுசு, பங்காளி, பாவாகடை, கோகுலதாரி, ஓர் அரண் சாய்கிறது, பிரிவு என்று...... நன்றி.... ஆகிய தலைப்புகளில் இருபது நிகழ்காலச் சம்பவங்களை ஆசிரியர் தன்பாணியில் தந்திருக்கிறார்.

வழமையான "சிறுகதைகள்" என்ற கட்டுமானத்துக்குள் இவை அடங்காவிட்டாலும், ஆசிரியரின் நேர்த்தியான மொழிநடை நிகழ்காலச் சம்பவங்களை வருங்காலச் சந்ததிக்கு எடுத்துச் செல்லும் பணியில் வெற்றி பெறுந்தன்மையுடையது என்று கூறலாம். "இவைகள் கற்பனைகளல்ல. அத்தனையும் நடந்த சம்பவங்கள்; நேரடிச் சாட்சிகள் இருக்கிறார்கள்" என்ற ஆசிரியரின் உரையும் இங்கு நோக்கற்பாலது.

ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் இளம்பிறை எம்.ஏ.ரஹ்மான் ஆகியோரின் உரைகள் நூலுக்கு அழகு செய்கின்றன. மல்லிகைத் தீவு கந்தையா நடேசபிள்ளை அச்சேறும் செலவு அனைத்தையும் ஏற்றிருக்கிறார்.

ஆசிரியரின் முதல் நூலான "காலக்கீறல்கள" தந்த வருமானம் ரூபா ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டக்களப்பு "தரிசனம்" பாடசாலைக்கு வழங்கப்பட்டதாகவும் இரண்டாவது நூலான "குமுறல்கள்" வருவாய் ஒருலட்சத்து நாற்பத்தெட்டாயிரம் ரூபா பாதிக்கப்பட்ட மாணவர்களுக்காகப் பயன்படுத்தியதாகவும் கூறும் ஆசிரியர் "குருதி மண்"ணின் வருமானம் அனைத்தும் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி நிதியாக மாற்றப்படும் என்றும் நூலின் ஆரம்பத்திலேயே உறுதியளித்திருப்பது வரவேற்கத்தக்கது.

- விவேகி


## சரிநிகர் வார இதழ் சந்தாதாரர்களுக்கு ஒரு அறிவித்தல் !

உங்கள் சந்தாக்களைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்!

புதிய சந்தா விபரம் :

| சந்தா விபரம்: ஆயுள்சந்தா | மாதங்கள் | ஒரு வருடம் |
|---|---|---|
| உள்நாடு: | 350/= | 750/= |
| இந்தியா: | 15 US$ | 25 US$ |
| வெளிநாடு: | 30 US$ | 50 US$ |

முகவரி:
சரிநிகர், 19/4, நாவல வீதி, நுகேகொட, இலங்கை.

தொலைபேசி : 815004, 814859
தொலைமடல் : 815003

மின்னஞ்சல்:sarini@sltnet.lk

ஏற்கனவே சந்தா கட்டியுள்ளவர்களுக்கு வார இதழ் சந்தா விபரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கவனத்திற்கு: சந்தாவுக்கான பணத்தினை காசோலையாக அனுப்புவோர் 'Sarinihar' என குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.

Registered as a Newspaper in Sri Lanka

# சரிநிகர்

வார இதழ்

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இல. 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.
தொலைபேசி / தொலைமடல் : 814859, 815003, 815004.

மின்னஞ்சல்: sarini@sltnet.lk

## செய்வார்களா?

தேர்தல் திருவிழா முடிந்து விட்டது!.

வெற்றிபெற்றவர்கள் அடுத்ததாக தாம் என்ன செய்யப் போகிறோம் என்று தொடர்பு சாதனங்களுக்கு அறிவித்தபடி தமது வேலைகளில் மும்முரமாக இறங்கி விட்டார்கள்.

அரசாங்கத்துடன் இருப்பதா, எதிர்க்கட்சியுடன் இருப்பதா, தனித்து இருப்பதா என்று அறிவிப்பதற்கு முன்பாக தமது பேரம் பேசல்களில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.

அமைச்சர் பதவி, பதிலமைச்சர் பதவி, பணம் என்று சகல விடயங்களிலும் பேரங்கள் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அமைச்சர் பதவி என்றால் எத்தனை அமைச்சர் பதவிகள், என்னென்ன அமைச்சர் பதவிகள், பணம் என்றால் எத்தனை கோடி ரூபாய்கள், எங்கு வைத்து எப்படி அதை வாங்குவது என்ற மட்டத்தில் பேரங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

வடக்கு கிழக்கிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள் கூட அந்தப் பேரம் பேசலிலிருந்து தப்பியதாகத் தெரியவில்லை. ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி(ஈ.பி.டி.பி)க்கு இரண்டு மந்திரிப் பதவியாவது கிடைக்கலாம். அதிலும் வடக்கு கிழக்கின் அபிவிருத்தி, வேலை வாய்ப்பு, புனர்நிர்மாணம், கடல் வளம், கல்வி, சுகாதாரம் போன்ற துறைகள் சம்பந்தப்பட்ட அமைச்சு, அல்லது அவற்றைச் செய்யக் கூடியதாக புதிதாக உருவாக்கப்பட்ட ஒரு அமைச்சு கிடைக்கலாம் என்று பேசப்படுகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஆகிய தமிழ்க் கட்சிகளிலிருந்து மொத்தம் பதினான்கு பேர் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இலங்கை அரசாங்கத்தின் பாராளுமன்றத்தில் வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்காக குரல் கொடுக்கப் போவதாகக் கூறிப் பதவிக்கு வந்திருப்பவர்கள் இவர்கள்.

கடந்த காலங்களில் இவர்கள் இம்மக்களின் உரிமைகட்காக செய்தவைகள் என்ன என்ற கேள்வி இந்த நேரத்தில் எழுவது இயல்பு-தான். தேர்தற் பிரச்சார மேடையெங்கும் தாம் என்னென்ன செய்தோமென்று வேண்டியளவுக்கு அவர்கள் சொல்லி விட்டார்கள்.

அவற்றிலுள்ள உண்மைகளையும் பொய்களையும் இப்போது ஆராய்ந்து கொண்டிருப்பதை விட அவர்கள் எதை எதையெல்லாம் செய்ய வேண்டுமென்று மக்கள் எதிர்பார்க்கிறார்களோ அவற்றைக் கொஞ்சம் சுட்டிக் காட்டுவது நல்லது என்று கருதுகிறோம்.

முதலாவதாக, இவர்கள் தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களுடைய அபிலாசைகள் எவையோ அவற்றைப் பெறுவதற்காக போராட வேண்டுமேயன்றி அரசாங்கம் எதைத் தருமோ அதைக் கேட்பது என்ற இவ்வளவு கால நிலைப்பாட்டை விட்டுவிட வேண்டும். தருவதைப் பெற்றுக் கொள்ள பிதிநிதிகள் தேவையில்லை. அதற்கு அரச அதிகாரிகளே போதும்!

இரண்டாவதாக, மக்களின் அரசியல் உரிமை என்பது, பாராளுமன்றத்துள் நின்று குரல் கொடுப்பதால் மட்டும் பெற்று விடக் கூடிய ஒன்றல்ல என்பதையும் பாராளுமன்றத்திற்கு வெளியேயும் செயற்பட வேண்டுமென்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். பாராளுமன்றத்திற்கு வெளியே என்றால் அது ஆயுதமேந்திய போராட்டமாகத் தான் இருக்க வேண்டுமென்றில்லை.

மூன்றாவதாக மக்களின் மறுக்கப்பட்ட, படுகிற ஜனநாயக மனித உரிமைப் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் விதத்தில் மக்கள் உரிமை அமைப்புக்களை உருவாக்குதலும் ஏற்கனவே உள்ள மக்கள் அமைப்பு-களுடன் சேர்ந்து செயற்படலும் கூட தமது கடமை என உணர்ந்து செயற்படல்.

நான்காவதாக, வடக்குக் கிழக்கில் வாழ்கின்ற மக்கள் இன்று முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் யுத்தத்துக்கு எதிராகவும், அதன் விளைவாக அவர்கள் எதிர்கொள்ளும் பொருளழிவு, சொத்தழிவு, இடப்பெயர்வு, நோய், வறுமை, பாவனைப் பொருட் தட்டுப்பாடு, கல்வி மற்றும் தொழில்துறைச் சிதைவுகள் என்பவற்றிலிருந்து அம்மக்கள் விடுபடுவதை நோக்கமாகக் கொண்டு செயற்படுதல்.

இவ்வளவையும் தமது கடமை என்று கருதி நமது பா.உ.கள் செயற்படுவார்களாக இருந்தால் போதும். மக்களுடைய உண்மையான பிரதிநிதிகளாக இருப்பதற்கான தகுதியை அவர்கள் பெற்று விடுவார்கள்.

ஆனால் எம்முன்னுள்ள பிரதான கேள்வி இதுதான்:

செய்வார்களா?

### மல்லாவியில்:

## போஷாக்கின்மையால் 28 குழந்தைகள் உயிரிழப்பு!

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதியில் மக்களின் உடல் ஆரோக்கிய நிலைமை மோசமாகப் பாதிக்கப்பட்டு வருவதாகத் தெரி-வித்து, இதன் அடையாளமாக இரத்த சோகைக்கு உள்ளாகி வைத்திய-சாலையில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையும், இறப்புக்களின் எண்ணிக்கை கூடிச் செல்வதையும் கிளிநொச்சி வைத்திய-சாலையின் புள்ளிவிபரத் தகவல்கள் வெளிப்படுத்தியுள்ளன.

கடந்த 9 மாதங்களில் கிளி-நொச்சி மாவட்ட வைத்தியசாலையில் இரத்த சோகை நோய் காரணமாக 19 பேர் உயிரிழந்துள்ளதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது. 153 பேர் இரத்த சோகை நோய்க்கு சிகிச்சை பெற்றுள்ளதாகவும் அப்புள்ளி விபரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

இரத்தசோகை நோயானது, மனிதனின் போசாக்குடன் சம்பந்தப்-பட்டதாகும். உடலில் இரும்புச்சத்து குறைடைவது இரத்தசோகைக்கு பிரதான காரணமாகக் கூறப்-படுகின்றது.

உடலியக்க சோர்வு, செயற்-திறன்குறைதல், மூச்சுத்திணறுதல், வளர்ச்சி குன்றுதல் கவலையீனம், ஞாபகமறதி, எடைகுறைந்த சிசுக்-களை பிரசவித்தல், என்பவற்றுடன் இலகுவாக நோய் தொற்றும் இயல்பு என்பன இரத்த சோகை நோயின் பொதுவான, வெளிப்படையான அறிகுறிகள். மலேரியா நோய் பாதிப்பும் இரத்தசோகை நோய்க்கு காரணமாக அமைவதாக வைத்திய அதிகாரிகள் தெரிவிகின்றனர்.

கிளிநொச்சி நிலைமைகள் இப்படியிருக்க, மல்லாவி மருத்-துவமனையில் கடந்த 9 மாதங்களில், ஒரு மாத வயதுக்கு உட்பட்ட 28 குழந்தைகள் உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். போஷாக்கற்ற தாய்மார்களினால் பிரசவிக்கப்பட்ட குழந்தைகளே போஷாக்கின்மை காரணமாக இவ்வாறு உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கைகளினால் ஏற்பட்ட தொடர்ச்சியான இடப்-பெயர்வு, தொழில் இழப்பு, அரசு விதித்துள்ள கடுமையானதும், தொடர்ச்சியானதுமான பொருளா-தாரத்தடை ஆகியவற்றால் வன்னிப்-பகுதி மக்கள் தமக்குரிய அத்தியா-வசிய தேவைகளைப் போதிய அளவில் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக கர்ப்பிணி தாய்மார் களும், பாலூட்டும் தாய்மாரும், சிறார்களும் போசாக்கின்மையால் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்-றார்கள்.

இந்த நிலைமையைச் சீர்செய் வதற்கான நடவடிக்கைகளை எடுக்-காமல், மேலும், மேலும் கட்டுப் பாடுகளையும், நெருக்குதல்களையும் அதிகரித்துச் செல்கின்ற அரசாங்-கத்தின் செயற்பாடு இன ஒடுக்கு முறையின் ஓர் அம்சமாகவே அமைந்துள்ளது.

### முல்லை மாவட்டம் :

## மக்கள் குடியிருப்பின் மீது விமானக் குண்டுவீச்சு!

முல்லை மாவட்ட மாத்தளன் பகுதி மக்கள் குடியிருப்புக்கள் மீது மிக் 27 குண்டுவீச்சு விமானங்கள் தாக்குதலை நடத்தியுள்ளன.

இதனால் வன்னியில் அப்பாவி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒக்.14 அன்று வன்னி வான்பரப்பில் நுழைந்த குண்டுவீச்சு விமானங்கள் பலதடவை மக்கள் குடியிருப்புக்-களை இலக்கு வைத்து தாக்குதல்-களை நடத்தியுள்ளன. பகல் 12.00 மணியளவிலும், பிற்பகல் 2.00 மணியளவிலும் தாக்குதல்களை நடத்திய போதும் மாலை 6.30 மணியளவில் மாத்தளன் மக்கள் குடியிருப்புக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் குடியிருப்புக்கள் அழிக்கப்பட்டதுடன், ஏழு பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்-தவர்களில் நான்கு பேர் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் புதுக்-குடியிருப்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்தக் குண்டுவீச்சு தாக்குதலில் காயம-டைந்த அம்பலவன்பொக்கணை பாடசாலை மாணவியான 17 வயது-டைய வேலும்மயிலும் சிவரூபா இது தொடர்பாக தனது அனுபவத்-தைக் கூறுகையில் 'திடீரென பெரும் வெளிச்சத்துடன் பாரியவெடி ஓசை கேட்டது. எங்கும் ஒரே புகை மண்-டலமாக இருந்தது. ஒன்றுமே தெரி-யாது திகைத்தேன். சிறிது நேரத்தில் நெருப்புச் சுட்டது போல் இருந்த இடத்தில் கையால் தடவிப் பார்த்த போது தான் புரிந்து கொண்டேன் நான் காயமடைந்துள்ளேன் என.

இந்தச் சம்பவத்தில் காய-மடைந்தவர்களை புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் வைத்து எம்.எஸ்.எவ். நிறுவன அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டுள்-ளனர். இதேவேளை இந்தக் குண்டுத் தாக்குதலை முல்லை மக்கள் நலன்-புரிச் சங்கம் கண்டித்துள்ளது. அத்து-டன் முல்லை நலன்புரிச் சங்கம் காய மடைந்தவர்களைப் பார்வையிட்டு உடனடி உதவியாக 500 ரூபா வழங்கியுள்ளது. இடம்பெயர்ந்த-வர்களிற்கு இருப்பிடம் அமைத்துக் கொடுப்பதிலும் ஈடுபட்டுள்-ளதாகவும் கூறியுள்ளது. குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட மாத்தளன் பகுதியிலிருந்து நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்து புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர் பிரிவில் தஞ்சமடைந்துள்ளனர். விமானக்குண்டு வீச்சுக்கு அஞ்சி இடம்பெயர்ந்த மக்களிற்கு அரசி-னால் எந்தவிதமான உதவிகளும் வழங்கப்படவில்லை என்பது குறிப்-பிடத்தக்கதாகும். நிவாரணவெட்டு-களினாலும், பொருளாதாரத்தடை-களாலும், படைநடவடிக்கையினா-லும் பெரிதும் துன்பங்களை அனுப-வித்துக் கொண்டிருக்கும் சூழ்நிலை-யிலேயே தாக்குதல்களும் நடை-பெற்று வருகின்றன.

* சமாதானத்திற்கான முன்னெடுப்பு Vs யுத்தத்திற்கான முன்னெடுப்பு
* சமாதானத்திற்கான பிரச்சாரம் Vs யுத்தத்திற்கான பிரச்சாரம்
* சமாதானத்திற்கான முயற்சி எப்படி இருக்க வேண்டும்?
* விழிப்பு இளையவர்களாகிய நாம் என்ன செய்கிறோம்?

ஒக்டோபர் மாதம் 24 ஆம் திகதி மாலை 7.30 மணிக்கு ரி.என்.எல். தொலைக்காட்சியில் விழிப்பு நிகழ்ச்சியைப் பாருங்கள்




செவ்வாய் தோறும் இரவு 7.25 மணிக்கு ரி.என்.எல் தொலைக்காட்சியில்

எரியும் இனப்பிரச்சினை ! மக்களின் அவலங்கள் போதும் !!

இன நல்லிணக்கம் மூலமான சமாதானத்திற்கு இளையவர்களின் பணி !!!

சமஉரிமை, சகவாழ்வு, சமாதானம்

இலங்கையின் வரலாற்றில் இனப்பிரச்சினை தொடர்பான முதலாவது தமிழ் தொலைக்காட்சி சஞ்சிகை நிகழ்ச்சி இது.

ஆசிரியர் : பாலசுப்ரமணியம் வசந்தன், வெளியீட்டாசிரியர் : எஸ்.கே.விக்னேஸ்வரன். 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட. அச்சுப்பதிவு : நவமக, 66/04, தர்மாராம வீதி, இரத்மலானை. 18.10.2000